Registered as a NewsPaper

# ஈழநாதம்


வெள்ளிநாதம்

பக்கங்கள் 16 விலை ரூபா 12.00


நாதம் 13 திருவள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 14 28-06-2002 வெள்ளிக்கிழமை ஓசை 130

2002 வருட கல்விப் பொது சாதாரண தரப் பரீட்சைக்குரிய விண்ணப்பப் படிவங்கள்
பாடசாலை மாணவர் விடுகைப்பத்திரம் தற்காலிக அடையாள அட்டை விண்ணப்பம், காட் மாவற்றையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
பிள்ளையார் புத்தகசாலை, கண்டி வீதி, கிளிநொச்சி.
சகல விண்ணப்பங்களும் கணினி அச்சுப்பதிப்பு (1985)

PRINCIPAL
Karaveddy Sri Narada Vidyalaya
KARAVEDDY



யாழ்ப்பாணம் அழைக்கிறது. பக்கம்- 03



சுமையாகும் கல்வியை சுவையாக்க வேண்டும் பக்கம்- 05



தீவகம் நோக்கிய பயணம் பக்கம்- 06

## சிறிலங்காவுக்கான நெதர்லாந்து தூதுவர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திப்பு

சிறிலங்காவுக்கான நெதர்லாந்து தூதுவரும் பிரதித் தூதுவரும் நேற்று விடுதலைப்புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து தற்போதைய அரசியல் சூழல் பற்றி கலந்துரையாடியுள்ளனர்.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் வன்னிக்கு வந்த சிறிலங்காவுக்கான நெதர்லாந்து தூதுவர் சூசன் பிளோங் ஹரி பிரதித் தூதுவர் ரிட்டர் கூப்பரஸ் ஆகியோர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந் தித்து உரையாடியுள்ளனர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை இக்கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதன் போது தற்போதை அரசியல் சூழல் பற்றி இருதரப்பினரும் பரஸ்பரம் கலந்துரையாடியதாகவும் தெரியவருகிறது.

### மட்டக்களப்பு-வாழைச்சேனையில்

## தமிழ், முஸ்லிம் குழுக்களுக்கிடையே மோதல், மூவர் பலி – ஐம்பதுக்கும் மேற்பட்டோர் காயம்!

### ஊரடங்கு வேளையிலும் தமிழர் வீடுகள், கடைகள் தீக்கிரை.

**மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனைப் பகுதியில் இனங்காணப்படாத தமிழ்-முஸ்லீம் குழுக்களுக் கிடையே இடம்பெற்ற மோதல்களில் மூவர் பலியானதுடன் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் காயங்களுக்குள்ளாகியுள்ளதுடன் சில வீடுகள், வர்த்தக நிலையங்கள் என்பன தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.**

மூதூர் பகுதியில் ஆரம்பமான இம் மோதல்கள் தற்போது மட்டக்களப்பு நகருக்கும் பரவியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்று முன்தினம் மாலை வாழைச்சேனைப் பகுதியில் இடம்பெற்ற கிரனைற் தாக்குதலில் நான்கு தமிழ் இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் நால்வரும் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு வன்செயல்கள் வெடித்ததாகவும் பல பஸ்வண்டிகள் கல்வீச்சுக்கு இலக்காகி சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இச்சம்பவங்களைக் கண்டித்து நேற்றுக் காலை வாழைச்சேனைப் பகுதியில் ஹர்த்தாள் அனுஸ்டிக்கப் பட்டதைத் தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்றதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று மாலை வரை இடம்பெற்ற இவ்அசம்பாவிதங்களின் போது மூவர் கொல்லப்பட்டதுடன் ஐம்பதுக்கும் அதிகமானோர் காயங்களுக் குள்ளாகியுள்ளனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்த அப்பகுதியில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதாகவும் இதன்போதே நேற்று மாலை தமிழர்களின் பல கடைகள் அடித்து நொருக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டதாகவும் வீடுகள் சிலவும் சேதமாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பலியான மூவரது சடலங்கள் மாஞ்சோலை கிராமிய வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் 25பேர் வரை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மோதல்களைத் தொடர்ந்து பீதியும், பதற்றமும் நிலவுகிறது

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் மூண்டுள்ள வன்செயல்களை அடுத்து அங்கு பெரும் பதட்டம் நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வாழைச்சேனைப்பகுதியில் நேற்று முன் தினம் மாலை நான்கு தமிழ் இளைஞர்கள் மீது நடாத்தப்பட்ட கிரனைற் தாக்கதலை அடுத்து அங்கு பெரும் பதற்றம் நிலவுவதாகவும் மக்கள் அச்சத்தால் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல முயல்வதாகவும் தெரியவருகிறது.

### கடற்படையினரின் அட்டூழியங்களைக் கண்டித்து

## யாழ். இல் மாபெரும் கண்டனப் பேரணி பத்தாயிரத்திற்கும் மேலான மக்கள் பங்கேற்பு

தீவகம் வேலணையில் போராளிகள் இருவர் சிறிலங்கா கடற்படையினராலும் ஈ.பி.டி.பி தேசவிரோதிகளாலும் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்று முழுமையான புறக்கணிப்பு போராட்டமும் மாபெரும் கண்டனப் பேரணியும் யாழ்குடாநாட்டில் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றுள்ளன.

குடா நாடெங்கிலுமிருந்து திரண்ட பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் யாழ் முற்றவெளி மைதானத்தில் ஒன்று திரண்டு ஊர்காவற்துறை நோக்கிய மாபெரும் கண்டனப் பேரணியை ஆரம்பித்தனர்.

போர் நிறுத்த மீறலில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா கடற்படையினரதும் ஈ.பி.டி.பி தேசவிரோதிகளினதும் நடவடிக்கைகளை கண்டித்து குடாநாட்டின் மக்கள் நேற்று முற்பகல் 10.00 மணிக்கு ஊர்காவற்துறை நோக்கி வாகனங்களில் பேரணியை ஆரம்பித்தனர்.

(16ம் பக்கம் பார்க்க)





## இலவச கண் சிகிச்சை முகாம்

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கண்ணொளித் திட்டத்தின் நேற்று தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப பணியகத்தில் கண்சிகிச்சை முகாம் நடைபெற்றது.

இன்று 28ம் திகதி காலை 10.00மணிமுதல் மல்லாவி வைத்தியசாலையிலும் 29ம் தி–கதி காலை 10.00மணி முதல் முழங்காவில் வைத்தி

(16ம் பக்கம் பார்க்க)

## வெவ்வேறு சம்பவங்களில் வீரச்சாவடைந்தோர்

தமிழீழக் கடற்பரப்பில் கடந்த காலங்களில் வெவ்வேறு சம்பவங்களின் போது நான்கு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

இந்திய இராணுவத்தினரால் கடந்த 17-02-1995 அன்று கைது செய்யப்பட்டபோது சயனைற் உட்கொண்டு போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

கடற்புலி மேஜர் சண்முகவேல் (ஆறுமுகம் சண்முகவேல் – யாழ் த.முகவரி– புனிதபூமி அத்தார்திட்டம், வள்ளிபுனம்)

யாழ் நெடுந்தீவு கடற்பகுதியில் கடந்த 29-04-1994 அன்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

கடற்புலி லெப்.தமிழினியன் (பாலையா ஜெயச்சந்திரன், யாழ் த.முகவரி:

(16ம் பக்கம் பார்க்க)

## நேர்நோக்கு.

பொதுத்தேர்தல் ஒன்றை நடாத்தாமலேயே விரைவில் ஆட்சியை தமது கட்சி கைப்பற்ற இருக்கிறது என கட்சிப் புனரமைப்புக் கூட்டமொன்றில் சிறிலங்கா சுதந் திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது கட்சியினரை உட்சாகப் படுத்த அவர் கூறிய கூற்றாக இருக்கலாம் எனினும், இதே போன்றதொரு கருத்தையே சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தெரிவித்திருந்தார்.

அதாவது பாராளுமன்றத் தைக் கலைக்காமலேயே பொதுசன ஐக்கிய முன்னணியை பதவியில மர்த்த தனக்கு வழி தெரியும் என சந்திரிகா அண்மையில் கூறியிருந்தார்.

இவர்கள் இவ்வாறு கூறுவது தம்வசமுள்ள நிறை வேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் அதிகாரத்தை மக்களின் விருப்பத் துக்கு மாறாகவும் குறுக்கு வழியி லும் பிரயோகிக்கப் போகிறார்கள் என்பதையே காட்டுகிறது.

அதாவது பாராளுமன்றத்தை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி கலைக்காது விட்டாலும் அதனைக் காட்டி மிரட்டி ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களை தம் பக்கம் இழுத்து விட பொதுசன ஐக்கிய முன்னணி முயலக்கூடும் என்ப தையே இது காட்டுகிறது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் ஒன்று நடைபெறுமாயின் அத்தேர்தலின்போது தமக்கு வேட்பாளர் நியமனம் கிட்டுமா? மீண்டும் வெற்றி பெற முடியுமா என்ற சந்தேகத்தைக் கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்நோக்கத் துக்கு இசைவாக நடந்து கொள்ளவும் கூடும்.

ஆனால் இது மக்களின் விருப் பத்துக்கு மட்டுமல்ல கட்சி மாறும் சட்ட மூலத்தை எதிர்க்கும் பொதுசன ஐக்கிய முன்னணியின் நிலைப் பாட்டுக்கும் மாறானதாகும். அத்துடன் இது தனக்குச் சாதகமாக அமையின் கட்சி மாறும் சட்ட மூலத்தை பொ.ஐ.மு ஆதரிக்கும் என்பதையும் வெளிப்படுத்துகிறது.

ஆனால் மறுவலமாக இது பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் ஆபத்தாக முடியலாம். அதாவது பாராளுமன்றத்தைக் கலைத்துவிடப் போவதாக அது விடும் எச்சரிக்கை பொ.ஐ.மு வுக்குள் ஊசலாடிக் கொண்டிருக்கும். பாராளுமன்ற உறுப்பினர்களை ஐக்கிய தேசிய முன்னணிக்குள் தள்ளி விடவும் கூடும். ஏனெனில் கடந்த மூன்று தேர்தல்களில் பொதுசன ஐக்கிய முன்னணி சந்தித்த படுதோல்வி அக்கட்சியின் இவ்வாறானதொரு திட்டத்திற்குச் சாதகமானதாகக் காணப்படவில்லை.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி

# இனங்காணப்பட்ட அமைப்புக்கள்

வடக்கு கிழக்கு பகுதிகளில் மீண்டும் மக்கள் அமைதிப் போராட்டங்களிலும், ஹர்த்தால், கண்டனப்பேரணிகள், கடையடைப்பு எனப்பல்வேறு அஹிம்சை வழியிலான நடவடிக்கைகளிலும் ஈடுபடும் சம்பவங்கள் அன்றாடம் நிகழ ஆரம்பித்துள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான போது தமிழீழப் பகுதிகளிலும் சிறிலங்காவிலும் நிலவிய அமைதியுடன் கூடியதான சமாதானம் மீதான நம்பிக்கைச் சூழல், இப்போது மெல்ல மெல்ல அச்சமும், நம்பிக்கையீனமும் கொண்டதாக மாறிவருகின்றதை எவரும் உணரக்கூடியதாகவே உள்ளது.

ஒருபுறம் பொதுசன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி, சிகல உறுமய போன்ற பேரினவாத அரசியல் சிந்தனையின் பாற்பட்ட அரசியல் கட்சிகளும், மறுபுறம் சிறிலங்காவின் பாதுகாப்புப் படைகளில் உள்ள சமாதான விரோத - போர் வெறிகொண்ட பிரிவினரும் சாமாதான நகர்வுகளை சிதைவடையச்செய்வதற்கான திட்டமிட்ட முறையிலான நடவடிக்கைகளை மெல்ல மெல்ல தீவிரமாக்கிவரும் வேளையில், இவர்களுக்கு அனுசாரணையாக ஈ.பி.டி.பி. போன்ற தமிழர் விரோத சக்திகளும் கைக்கூலிகளாகத் தொடர்ந்தும் பகிரங்கமாக இயங்கி வருவதையும் காணக் கூடியதாக உள்ளது.

வடக்கு கிழக்கில் பல்வேறு பகுதிகளில் நடந்தேறியுள்ள பல சம்பவங்கள் இதனை உறுதிப்படுத்துவதுடன் பலத்த சந்தேகங்களையும் ஏற்படுத்துவனவாகவும் உள்ளன.

சமாதான நகர்வுகளின் முன்னேற்றம் குறித்து சிறிலங்கா அரசின் அமைச்சர்களும், பிரதமரும் உலகெங்கும் பறந்து பறந்து பிரசாரம் செய்துவரும் அதேவேளை, உண்மையில் சமாதான நடவடிக்கையின் முன்னோடிச் செயற்பாடான புரிந்துணர்வு உடன்படிக்கையில் இணக்கம் காணப்பட்ட இயல்பு நிலையை உருவாக்கச் செய்யவேண்டிய சாதாரணமான விடயங்களைக் கூட முழுமையாக நடைமுறைப்படுத்த இயலாத ஒரு நிலையில் தான் அரசு திணறுகிறது என்ற உண்மை சர்வதேச சமூகத்திற்கு மறைக்கப்படும் ஒன்றாகவே உள்ளது.

பொது விடயங்கள், பொது மக்களின் வாழ்விடங்கள் பாடசாலைகள், வழிபாட்டுமையங்கள் போன்ற இடங்களில் முகாமிட்டிருக்கும் படையினரை வெளியேற்றுவது என்ற விடயம் இன்னமும் இழுபறிநிலையில் முழுமையாக அமுலாக்கமுடியாமல் இருப்பதென்பது குறிப்பிடவேண்டிய விடயமாகும்.

இராணுவ மயமாக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் அமைதி நிலையை ஏற்படுத்தல் என்பது, அந்தப்பகுதியில் இருந்து இராணுவம் வெளியேற்றப் படுவதிலேயே தங்கியுள்ளது. இது முற்றிலும் பாதுகாப்பு அமைச்சுடன் சம்பந்தப்பட்ட விடயமாகும். உத்தரவுக்குக் கீழ்ப்பட்டு நடப்பது தான் பாதுகாப்பு படையென்று அழைக்கப்படுவோரின் பணியாக இருக்கவேண்டும். ஆனால் இங்கு அரசின் பணிப்புரைகளை எவரும் மதிப்பதாகத் தெரியவில்லை.

இராணுவ அதிகாரி தன்னிச்சையாக ஒரு அறிக்கை விடுகிறார். கடற்படை அதிகாரி - தளபதி - ஒரு விதமான பிரகடனம் செய்கின்றார். இவர்களின் கீழுள்ளவர்கள் தாம் நினைத்தவாறு செயற்படுகின்றனர். ஈ.பி.டி.பி. போன்ற தமிழ் குழுக்களை இவர்கள் பயன்படுத்துகிறார்களா அல்லது படையினரை இந்த குழுக்கள் தமது கைப்பொம்மைகளாக நடத்துகின்றனவா என்பது மர்மமான நிலையாகவே உள்ளது. இருதரப்பினரும் ஒருவருக்கொருவர் அனுசரித்துச் செயற்படுவதாகவும் கூறமுடியும். ஏனெனில் அவர்களின் நோக்கம் தமிழ் மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும், சமாதான நடவடிக்கைகளுக்கும் எதிரான பொதுக்குணாம்சங்களைக் கொண்டதாக இருப்பதனாலேயாம்.

கிழக்கில் விசேட அதிரடிப்படையினரின் அச்சுறுத்தல்கள் மூதூரில் அரசியல்துறை செயலகம் தாக்கப்பட்ட விடயம் தீவகத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாட்டாளர்களான நிராயுதபாணிகள் மீதான தாக்குதல் எனத் தொடரும் சம்பவங்கள் யாவும் தற்செயலானவை தவ்றுதலாக நடந்தவை எனக்கூறி தப்பிக்கமுயல்வதும் இனி இவ்வாறு நடக்காது என வாக்குறுதி மொழிவதும் சம்பவங்களை விசாரிக்க ஆணைக்குழுக்களை நியமிப்பதும் வெறும் கண்துடைப்பு நடவடிக்கைகளேயாகும்.

இவற்றின் மூலம் எதனையும் உருப்படியாகச் சாதித்து விடமுடியாது என்பது வரலாறு எமக்கு கற்பித்துள்ள உறுதியான அனுபவப் பாடமாகும்.


சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை இனம்காணப்படாதோரின் நடவடிக்கை எனக்குறிப்பிட்டு ஊடகங்களுக்கு அறிக்கைவிடுதல் குற்றவாளிகளைப் பாதுகாப்பதற்காக எமக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை என்றே கூறவேண்டும்.

சம்பவங்களின், சூத்திரதாரிகளின், செயற்பாட்டாளர்களின் ஷஇனம்' தெளிவானது ஆயுதப்படையினரும் அவர்களுடன் ஒட்டி உறவாடும் ஷகைக்கூலி' அமைப்புகளும் தான் அவர்கள். இங்கு குற்றமிழைத்தவர்கள் தனிநபர்கள் அல்ல, பாதுகாப்பு கட்டமைப்பைச் சாந்தவர்கள், ஈ.பி.டி.பி போன்ற துணைப்படை அமைப்பினைச் சார்ந்தவர்கள். இதற்கான பொறுப்பினை அந்தந்த அமைப்புகளே ஏற்கவேண்டும் இதனைவிடுத்து ஷவிசாரிக்கிறோம்' ஷஇனம்காணப்படவில்லை' ஷஇனிமேல் நடக்காது' என்றெல்லாம் சமாதானம் கூறுவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வலுவை அவமதிப்பதாகவே அமையும்.

இதனை அரசும், புரிந்துணர்வு உடன்படிக்கை செயற்பாட்டு கண் காணிப்பாளர்களும் தெளிவாக உணர்ந்து இறுக்கமான நடவடிக்கையை எடுக்கவேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகும். அதனை வலியுறுத்துவதே இந்த அமைதிப் போராட்டங்களின் நோக்கமும் ஆகும்.

# அமைதி இலக்கை அடையமுன் சமாதானப் படகு மூழ்கடிக்கப்படுமா?

புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புறமொதிக்கிவிட்டு புலிகள் மீதான தாக்குதல்களை நிகழ்த்துவதற்கு படையினர் முயன்றுவருகின்றனர் என்பதனை கடந்த வாரம் வேலணையில் நிகழ்ந்த தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன், மீதான தாக்குதல் வெளிச்சமிட்டு காட்டு கிறது. ஆயுதமற்ற அரசியல் போராளிகளான இவர்கள் இருவர் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலானது சிறிலங்காப் படைத்தரப்பினரில் ஒரு பகுதியினர் எப்போதுமே சமாதனத் தீர்வுத்திட்டத்துக்கு எதிரான மனநிலையுடையவர்கள் என்பதையே கோடிகாட்டி நிற்கிறது.



லெப்.ஜெனரல் பலகல்ல

இவர்களுடன் இணைந்து செயற்பட்ட ஈ.பி.டி.பி பற்றிச் சொல்லத்தேவையில்லை. அவர்களுடைய வேலைகள் எப்போதுமே தமிழ் மக்களுக்கு எதிரானவையாகவே அமைகிறது.

முதல் ஈழப்போரில் கண்ணாடி இளைப்படகுகளில் பொருத்தப்பட்ட இலகு இயந்திரத் துப்பாக்கிகளுடன் கடற்படையினரை முகம் கொடுத்த புலிகள், பின் இரண்டாம் ஈழப்போரில் கடற்படையினர் மீதான தாக்குதல்களை அதிகரித்தனர். கடற்படைக் கலங்கள் சிலவற்றையும் கைப்பற்றிக் கொண்டனர். மூன்றாம் ஈழப்போரில் கடற்புலிகளின் ஆதிக்கமே கடலில் அதிகரித்துக் காணப்பட்டது. இரண்டாயிரமாம் ஆண்டுகளில் ஆழ்கடலின் ஊடே ஓநாய் பொதிகளாக (Wolf Pack) கடற்படையினரின் கூட்டமான நகர்தல்கூட கடற் புலிகளால் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டு, யாழ் குடாநாட்டுக்கான விநியோகம் கேள்விக்குறியாக் கப்பட்டது. இந்நிலையில் கடற்புலிகளை எதிர்கொள்ளமுடியாத கடற்படையினர், அப்பாவி மீனவர்கள் மீது தாக்குதல்களை அதிகரித் திருந்தனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின் கடந்த மார்ச் முதலாம் திகதி நடைபெற்ற வடக்கு கிழக்கு கடற்படை பிராந்தியத் தளபதிகள், உயரதிகாரிகளுடனான மகாநாட்டில் சிறிலங்கா கடற்படைத்தளபதி றியர் அட்மிரல் தயா சந்தகிரி கடற்படையினரின் நடவடிக்ககைகளில் மாற்றம் எதுவும் செய்யத்தேவையில்லை எனத் தெரிவித்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த இரு தசாப்தங்களில் இரத்தக்கறைபடிந்த "குமுதினிப்படகு படுகொலைகள்" தூய ஒளிபடகுப் படுகொலைகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பும் தடையின்றித் தொடர்ந்தது. கடந்த முதலாம் திகதி வாகரைக் கடலில் புலிகளின் ஆயுதக்கடத்தல் படகுகள் எனக் கூறப்பட்டு இரு மீனவர்கள் படகுகள் மூழ்கடிக்கப்பட்டுள்ளது. உண்மையில் இவை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் கொள்வனவு செய்யப்பட்ட நவீன வெப்ப உலர் தாக்கும் பீரங்கிகளை (Sophiscicatel Thermal Absorber) பரீட்சித்துப்பாக்கும் நடவடிக்கையாகவே அமைந்திருந்தது.

தற்போது கிழக்குக் கரையோரங்கள் பலப்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக புல்மோட்டையிலிருந்து சாம்பல்த் தீவு வரையான பகுதிகளில் காவல் அரண்கள் பலப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. இருபது வருடங்களின் பின் அரச அதிபரின் அனுமதியுடன் தமது சொந்தக்காணிகளை பார்வையிடச்சென்ற திரியாய் மக்கள் அக்கிராமத்தில் முகாமிட்டிருந்த கடற்படையினரால் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். இதேபோன்று ஜனநாயகவழியில் ஹர்த்தால் அனுஸ்டித்த ஊர்காவற்துறை வர்த்தகர்கள் கடற்படையினரால் அச்சுறுத்தப்பட்டனர். இவ்வாறு தொடரும் கடற்படையினரின் புரிந்துணர்வு விரோத நடவடிக்கை கள் சமாதான முயற்சிகளில் அவர்களுக்கிருக்கும் உடன்பாடின்மையையே உணர்த்திநிற்கிறது.

இதேபோன்று கடந்த மாதம் கிழக்கிலங்கை வீரமுனைக் கிராமத்தின் மக்கள் வீட்டிற்கு இரு சவப் பொட்டிகளை தயாராக வைத்திருக்குமாறு STF எனப்படும் விசேட அதிரடிப்படைப் பொலிஸ் பிரிவினரால் எச்சரிக்கப்பட்டுள்ளனர். அம்பாறை மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக் குழு உறுப்பினர் திரு.இ.சண்முகநாதனும், தொலைபேசி மூலம்

**அன்ரன் அன்பழகன்**

இவ்வாறான 'சவப் பொட்டி' அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அப்பாவி மக்கள் மீதான அச்சுறுத்தல், சோதனைச் சாவடிகளில் கெடுபிடிகள் என்பவற்றை STF இன்று வரை நிறுத்தவில்லை. சமாதான முயற்சிகளை சவப்பொட்டிகளில் அடைக்க முயலும் இவர்களும் அடிக்கடி, புரிந்துணர்வு உடன்படிக்கை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகிறார்கள்.

இவை தொடர்பாக தற்போதைய STF தலைவர் திரு.நிமல் குணவர்த்தனாவின் கவனத்துக்கு கொண்டுவந்த போது அவர் இக்குற்றச்சாட்டுக்களை மறுத்ததுடன், புலிகள் தான் எம்மை சீண்டி வருகிறார்கள் எனவும் தெரிவித்தார். இதுவே STF இன் ஒட்டுமொத்தமான நிலைப்பாடாகவும் இருக்கிறது.

1983 இன் பின்பு முனைப்பு பெற்றிருந்த கெரில்லாத் தாக்குதல்களுக்கு முகம்கொடுக்கமுடியாது சிறிலங்காவின் மரபுப் படையணிகள் திணறிய வேளையில் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவினால், அவருடை மகன் ரவி ஜயவர்த்தனாவின் தலைமையில்,

பொலிஸ் பிரிவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு விசேட கமாண்டோப் பயிற்சி வழங்கப்பட்டு STF எனப்படும் (Special Task Force) உருவாக்கப்பட்டது. இவர்களுக்கான பயிற்சி மற்றும் ஆலோசனைகள் பிரித்தானியாவின் விசேட பாதுகாப்பு நிறுவனமான SAS (Special air Seroioe) எனப்படும் நிறுவனம் வழங்கியது. இந் நிறுவனம் உளவுச்சேவை, உள்நாட்டுக் கிளர்ச் சிகளை முறியடித்தல், தனியார் பாதுகாப்பு போன்ற பணிகளுக்காக உருவாக்கப்பட்டு ஆசிய, மத்திய ஆசிய நாடுகளின் எழுச்சிப் போராட்டங்கள் பலவற்றை நசுக்குவதற்கு துணைபோன அனு பவங்களையும் கொண்டிருந்தது.

உயர்வான தாக்குதிறன் பயிற்சிகளுடன், விரைவான நகரும் திறனையும் (Mobility) கொண்டதாக அமைக்கப்பட்ட ஐந்து அல்லது ஏழு உறுப்பினர்களைக் கொண்ட குழுக்களாக இயங்கியது. மரபுப் படையணிகளிடம் இல்லாத நகரும் திறன் இவர்களிடம் ஏற்படுத்தப் பட்டது. அத்தோடு இரத்தத்தை உறையவைக்கும் கொடூரச்செயல்கள் மூலம் மக்களை அச்சத்தில் ஆழ்த்திவைத்திருக்கும் படியான உளவியல் முறைகளிலும் இவர்கள் நன்கு பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர். வக்கிர உணர்வு மிகுந்தவர்களான இவர்கள் 35 வயதுடைய கோணேஸ் வரி என்னும் பெண் மீது கூட்டாக வன்புணர்ச்சி நிகழ்திவிட்டு அவருடைய பால் உறுப்பில் கிரனைட்டை செருகி அவரைச் சிதறடித்தவர்கள் என்பதை மக்கள் மறந்து விடவில்லை.

இவ்வாறு பல மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாக்கப்பட்ட இந்த STF படையினரில் மேலும் ஆயிரத்து அறுநூறு பேர் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா தற்போது அறிவித்துள்ளார்.

குறைக்கப்படாத பாதுகாப்பு செலவீனங்களும், புதிதான ஆட்சேர்ப்புகளும் நம்பிக்கையீனத்தையே மக்களிடையே தோற்றுவிக்கும். புரிந்துணர்வு உடன்படிக்கை தொட்டிலையும் ஆட்டி, சமாதானக் குழந்தையையும்கிள்ளிவிடப்படுகிறதோ என எண்ணத் தோன்றுகிறது.

இவ்வருடத் தொடக்கத்தில் வன்னி பெருநிலப்பரப்புக்கான ஏ-9 பாதைத் திறப்பு வைபவ நிகழ்வில் கலந்து கொண்ட சிறிலங்கா இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல சமாதான முயற்சிகள் தொடர்பான படையினர் நிலைப்பாட்டினை விளக்கி எமது செய்தியாளரிடம் தெரிவிக்கையில் துப்பாக்கித் தோட்டாக்களோ மோட்டார் ஏறிகணைகளோ ஏவப் படாது யுத்தநிறுத்தம் முறையாகப் பேணப் படுகிறது. சமாதானம் ஏற்படும் பட்சத்தில் படையினர் ஆரம்ப காலங்களில் மேற்கொண்ட கடமைக்கூறுகளுக்குத் திரும்புவர். (go back to their old role) இதன் மூலம் பொலிசாருக்கு அவர்களின் கடமைகளில் உதவுவதுடன், நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களிலும் பங்குபற்றுவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி விரைவுபடுத்தப்படும் என்றார். அத்தோடு யுத்தத்திற்கு செலவிடப் படும் நூறுமில்லியன்கள் ரூபாய்கள் மீதப்படுத்தப்பட்டு மக்களின் அபிவிருத்திப் பணிகளுக்கு செலவிடப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

கொள்கையாளரில் சிறப்பாகக் காணப்படும் இந்த நிலைப்பாட்டினை நோக்கித்திரும்புதற்கு படையினரும், அரசும், சிங்களக் கடும் போக்காளரும் அனுமதிப்பார்களா என்பதே இன்று முக்கியமான கேள்வியாக மக்கள் முன் எழுந்துள்ளது.

# பிரமுக அறிமுகம்

## ஜெனரல் றொகான் D.S. தளுவத்தை



சூரிய கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் சிறிலங்காப் படையினரால் யாழ் குடாநாடு ஆக்கிர மிக்கப்பட்டவுடன் வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர் ஒருவருக்கு அளித்த பேட்டியொன்றில் அந்த உயர் இராணுவ அதிகாரி பின்வருமாறு கூறினார்.

"விடுதலைப் புலிகளினதும் அவர்களின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனதும் தமிழீழக் கனவு சிதைக்கப்பட்டு விட்டது. தமிழீழத்தின் இதயப்பகுதியில் இப்போது சிங்கக்கொடி ஏற்றப்பட்டு விட்டது." பின்னர் சத்ஜெய இராணுவ நடவடிக்கை யின் பின்னர் அதே அதிகாரி இப்படிக் கூறியிருந்தார்.

"தமிழீழ யுத்தத்தை பெரும்பாலும் ஒருமுடிவுக்கு கொண்டுவந்தாகிவிட்டது. இனி விடுதலைப்புலிகளின் தலைவர்களை கைது செய்வது அல்லது சயனைட்டை உட்கொண்டு தற்கொலை செய்யவைப்பது ஒன்றுதான் எஞ்சியுள்ளது. அதன்பின் எமது படையினர் நிம்மதியாக ஓய்வு கொள்ள முடியும். அதற்கான காலம் நாட்கணக்கில் தான் உள்ளது."

அவர் இவ்வாறுகூறி கிட்டத்தட்ட ஏழு வருடங்கள் கடந்துவிட்டன.

அந்த இராணுவத் தளபதி பதவியிலிருந்த ஓய்வு பெற்று அதன் பின்னர் அதிகாரமில்லாத பதவியொன்றில் அமர்த்தி அவமதிக்கப்பட்டு, மீண்டும் அதிகாரங்கள் சீருடை ஆகியவற்றுடன் கூடிய கூட்டுப்படைத் தலைமையதிகாரிப்பதவியில் விலாசம் காட்டமுற்பட்டு, இப்போது அதிலிருந்தும் ஓய்வுபெற்று வெளிநாட்டுத்தூதுவர் என்ற அடுத்த பதவிக்கு வாய்பிளந்த நிலையில் காத்திருக்கிறார்.

அவர் வேறுயாருமல்ல முன்னாள் சிறிலங்காவின் இராணுவத்தளபதி ஜெனரல் றொகான் D.S. தளுவத்தையேயாவார்.

யாழ் குடாவை சிறிலங்கா இராணுவம் கைப்பற்றிய வேளையில் யாழ் குடாவுக்கான மேலதிக கட்டளையிடும் தளபதியாக இருந்தவர் இந்த தளுவத்தைதான்.

01.05.1996 இல் அப்போதைய இராணுவத் தளபதி ஜெரி டீ சில்வா. ஓய்வு பெற்றதைத்தொடர்ந்து இராணுவத் தளபதியான இவர் 15.12.1998 வரை அப்பதவியில் இருந்தார்.

குடாநாட்டை ஆக்கிரமித்ததில் பெரும்பங்காற்றிய இவர் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் நம்பிக்கைக்குரியவர். அவருக்கு விசுவாசமான ஊழியர், ஆயினும் ஜெனரல் ரத்வத்தைக்கும் இவருக்கும் அதிகம் ஒட்டாது.

இராணுவத் தளபதி பதவியில் இருந்து ஓய்வு பெற்றதும் பாதுகாப்புப் படைத் தலைமை அதிகாரியாக (chief of defence sfaft) நியமிக்கப்பட்டு 9 தினங்களில்பதவி இறக்கப்பட்டு பொதுக்கட்டளை அதிகாரி என்ற பதவியில் அமர்த்தப்பட்டார். இந்த அவமதித்தலின் பின்னணியில் ரத்வத்தை இருந்தார் என்றே கூறப்பட்டது.

எனினும் பின்னர் மீண்டும் கூட்டுப்படைத் தலைமை அதிகாரியாக சந்திரிக்காவால் பதவியுயர்த்தப்பட்டார்.

1983 இல் ஜானகபுர இராணுவ முகாம்மீதான தாக்குதலின்போது அம்முகாமின் கட்டளையிடும் அதிகாரியாகவும், பொறுப்பாளராகவும் இவரேயிருந்தார். இதில் இராணுவம் பெரும் இழப்பினைச் சந்தித்தது. 1993 பூநகரி முகாம் மீதான தாக்குதலின் போது இராணுவத்தினருக்கு ஏற்பட்ட படுதோல்விக்கும் இவரே பொறுப்பானவர் எனக்கடுமையாக விமர்சிக்கப்பட்டார். அதேபோல் 1996 இல் முல்லைத்தீவு படுதோல்விக்கும், 1997 இல் ஜெயசிக்குறு நடவடிக்கையின் பின்னடைவுக்கும் தளுவத்தை பொறுப்புக் கூற வேண்டியவராக இருந்தார்.

இவர் கூட்டுப்படைத் தலைமை அதிகாரியாக இருந்தவேளையில் தான் ஆனையிறவுப் பெரும்தளத்தை சிங்கள இராணுவம் இழந்து வரலாறு காணாத தோல்வியைச் சந்தித்தது.

அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதில் வல்லவரான இவர் அதன் மூலம் பல பதக்கங்களையும், விருதுகளையும் பெற்றுக்கொண்டவர் என்ற குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளாகியுள்ளார். வீரவிக்கிரமவிபூஷண விருது, தனக்குத்தானே சிபார்சு செய்து பெற்றுக்கொண்டவர் என்றும் கூறப்படுகிறது.

வடபகுதியில் இராணுவத்தினரின் மனித உரிமை மீறல் செயற்பாடுகளுக்கும் இவரே பொறுப்புக்கூற வேண்டியவர்.

இப்போது இவரை பிரேசில் நாட்டுக்கான இலங்கைத்தூதுவராக நியமிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு கடும் எதிர்ப்பும் இருந்து வருகிறது.

சிறிலங்காவுக்கு அவமானத்தை தேடிக்கொடுப்பவர்கள் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டு கௌரவிக்கப்படுவது இது முதற்தடவையல்ல.

ஜெரி.டீ.சில்வா, சிறிலால் வீரசூரியா, ஜானகப் பெரேரா என இந்த வரிசை தொடரவே செய்கிறது.

தமிழ் மக்களுக்கு அதிக அளவில் இராணுவரீதியில் கொடுமை செய்தவர்கள் தான் வெளிநாடுகளுக்கு தூதுவர்களாக நியமிக்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்கள்.

அந்த வரிசையில் இப்போது தளுவத்தையும்...

## நிலாந்தன்

# யாழ்ப்பாணம் அழைக்கிறது

யாழ்ப்பாணத்தார் வீடு திரும்பத்தொடங்கியபின் வன்னிப் பெருநிலத்தில் நகரங்கள் பெருமளவு வெளிக்கத் தொடங்கிவிட்டன.

பெருநிலமெங்கும் கைவிடப்பட்ட பாதி சிதைந்த, கூரையில்லாத வீடுகளை ஆங்காங்கே காணமுடிகிறது. பாடசாலைகளில் மாணவர் தொகை வீழ்ச்சியுற்றுச் செல்கிறது. தெருக்களில் பொருட்களும் மனிதர்களும் பிதுங்கி வழியும் வாகனங்கள் யாழ்ப்பாணத்துக்குப் போகின்றன.



இருந்த வீட்டை இடித்துவிட்டுத் தான் போகவேண்டுமாம். அதை அப்படியே ஆளில்லாமல் விட்டுப்போவது சாஸ்திர முறைப்படி கூடாதாம் என்றொரு யாழ்ப்பாணத்தார் கூறினார்.

போகிறபோக்கில் வன்னித்தெருக்களில் சனம் வற்றி முன்போல யானைகளில் முட்டுப்படவேண்டி வந்தாலும் வரலாம். அவ்வளவு வேகமாக வீடு திரும்புதல் நடந்து கொண்டிருக்கிறது.

ஊர்ஜிதம் செய்யப்படாத ஒரு தகவலின்படி சுமார் ஒரு லட்சத்துக்கும் குறையாத ஜனங்கள் இப்படி வன்னியிலிருந்து வெளியேறியிருப்பதாகக் கூறப்படுகிறது.

கடைகள் வியாபாரம் சுமாராக மூன்றில் ஒரு பங்காக வீழ்ந்து விட்டது என்றும் கூறப்படுகிறது.

சுமார் 450 றாத்தல் பாண்போட்ட பேக்கறிகளில் இப்பொழுது 150 றாத்தல்தான் போடப்படுகிறதாம். இதெல்லாம் வீடுதிரும்புதலின் வேகத்தை மதிப்பிட உதவும்.

இதிலொரு சுவாரஷ்யமான விசயம் என்னவென்றால் வீடுதிரும்பும் யாழ்ப்பாணத்தவர் கோழிக்கூடு, கரப்பு இவற்றோடு கூரைபோட்ட கிடுகு, கம்பு, தடிகளையும் கூட விடாமல் எடுத்துக்கொண்டு போவதுதான்.

சில சமயங்களில் கார் டிக்கிகளில் விறகு தென்னம்பாளைகள் கூடக் கட்டப்பட்டிருக்கக் காணலாம்.

இது ஐ.பி.கே.எவ் காலத்து மொட்டை ஜீப்புக்களை ஞாபகப் படுத்துகிறது.

முன்பு இந்தியப்படை இங்கே நிலைகொண்டிருந்த காலங்களில் அவர்களுடைய வாகனங்களில் உடனடியாக ஒரு முகாம் போடத் தேவையான மரம், தடி, கம்பி, கல் எல்லாமுமிருக்கும். சில சமயங்களில் வாகனத்தில் பொனற்றில் மண் மூட்டைகளும் அடுக்கப்பட்டிருக்கும்.

அப்படித்தான் இப்பொழுதும் யாழ்ப்பாணத்தவர்கள் அந்தரமாபத்துக்கு உடனடியாக ஒரு கொட்டில் போடத் தேவையான பொருட்களை எடுத்துக்கொண்டு போகிறார்கள்.

இது வெறுமனே செமிப்புணர்வின் பாற்பட்ட ஒரு விவகாரம் அல்ல. இதற்குப் பின்னால் தொடர்ச்சியான பல இடப்பெயர்வுகளால் கிடைத்த மிகக் கசப்பான அனுபவம் இருக்கிறது. எந்தவேளையும் எதுவும் நடக்கலாம் என்ற அதியுச்ச எச்சரிக்கையுணர்வு இருக்கிறது.

ஆம், ஈழப்போரின் எல்லாவித அனர்த்தங்களினாலும் பதப்பட்ட யாழ்ப்பாணி இப்பொழுது வீடுதிரும்பிக் கொண்டிருக்கிறான்.

இங்கு வரும்போதே அவர்கள் நிறையச்சொத்துக்களைக் கைவிட்டு வந்தார்கள். இங்கேயும் அவர்களது சேமிப்பெலாம் கரைந்து போயிற்று. பலருக்கு உயிரிழப்புமென்றாயிற்று.

ஆனால் அவர்கள் சொத்துக்களையும் உயிர்களையும் இழந்து பெற்ற மகத்தான அனுபவங்களை எடுத்துச் சொல்கிறார்கள்.

உண்மையில் 'றிவிரச' படை நடவடிக்கை யாழ்ப்பாணத்தவரைப் பொறுத்தவரை ஒரு பெரிய பட்டப்படிப்புத்தான்.

முன்னெப்பொழுதும் யாழ்ப்பாணத்துக்கு அப்படியொரு இடப்பெயர்வு வந்ததில்லை. அதுபோல வன்னியும் அப்படியொரு சனத்தொகை வீக்கத்தைக் கண்டதில்லை.

'றிவிரச' யாழ்ப்பாணத்துக்கும் வன்னிக்கும் இடையில் இருந்த மர்மத்திரைகளையெல்லாம் கிழித்தெறிந்துவிட்டது.

அதிகம் மத்தியதரவர்க்கம் வளர்ச்சி பெற்ற யாழ்ப்பாணத்தவரும் பெருமளவு விவசாயப் பொருளாதாரத்தை உடைய வன்னியரும் சேர்ந்து கலந்து பழகி அனுபவங்களைப் பகிரவும் புதுப்பிக்கவும் இந்த இடப்பெயர்வு ஒரு வாய்ப்பாக அமைந்தது.

ஒரு நொதியம் போல வன்னிக்குள் வந்த யாழ்ப்பாணத்தார் வன்னி வாழ்வில் சேதன அசேதன மாற்றங்களை எற்படுத்தினார்கள். தாமும் அத்தகைய மாற்றங்களுக்கு உள்ளானார்கள்.

தமது தாயகத்தின் பெருநிலப்பகுதி பெரும்பாலும் பயன்படுத்தப்படாத கன்னிநிலமாகவே இருப்பது இப்பொழுது அநேகமாக எல்லா யாழ்ப்பாணத்தாருக்கும் தெரியும்.

அதோடு தமது வாழ்வின் மறக்க முடியாத இந்த ஆறுவருட காலத்திலும் அவர்கள் பெற்ற அனுபவங்களை உலகில் எந்தப் பல்கலைக் கழகத்திலும் படித்துப் பெற முடியாது என்பதும் இனி அவர்களுக்குத் தெரியவரும்.

அது போலவே வன்னியாருக்கும் ஒரு மத்தியதரவர்க்க வாழ்க்கை பற்றிய நேரடி அனுபவம் கிடைத்திருக்கிறது.

இதில் முள்ளியவளை ஏற்கனவே 'குட்டி யாழ்ப்பாணம்' என்று அழைக்கப்பட்டது. அங்கே வித்தியானந்தாக் கல்லூரியைச் சூழ்ந்து ஒரு கல்விப்பாரம்பரியமும் குறிப்பிடத்தக்களவு ஒரு சிறிய மத்தியதரவர்க்கமும் ஏற்கனவே உருவாகி விட்டிருந்தன.

ஆனாலும் முழு வன்னிப்பெருநிலத்துக்கும் பரவலாக யாழ்ப்பாணத்து மத்தியதரவர்க்கத்துடனான உயிருள்ள சந்திப்பெனப்படுவது இதுதான் முதற்தடைவை. இதில் பரஸ்பரம் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்ந்தன.

படித்த கல்வீட்டு யாழ்ப்பாணத்தார் இங்கே விவசாயப்பொருளாதாரத்தின் அதிகம் நகரமயப்படாத ஒரு சூழலின் தன்மை சுதாகரித்துக்கொள்ள வேண்டியிருந்தது.

மாதச்சம்பளத்துக்குள் திட்டமிட்டு செலவு செய்து பழகிய படித்த யாழ்ப்பாணத்தவர் இங்கே விவசாயச் சமூகத்தின் அப்பாவித்தனங்கலந்த விருந்தோம்பற் பண்புகளை அறிய முடிந்தது. அதுபோல வன்னியாரும் மத்தியதர வர்க்கத்தின் நெழிவு சுழிவுகளையும் சேமிப்பியல்பையும் அறியமுடிந்தது.

றிவிரச கொண்டுவந்த மேற்படி அனுபவங்கள் வன்னிக்கும் புதிது யாழ்ப்பாணத்துக்கும் புதிது.

மட்டுமல்ல, இங்கே இன்னுமொன்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். எப்பொழுதும் சர்ச்சைக் குரியதாகவிருக்கும் "யவ்னா செண்ரிக் அரசியல்" யாழ்ப்பாண மைய அரசியல் பற்றியதே அது.

நாங்கள் ஒன்றில் இதைப்பற்றி யோசிப்பதில்லை அல்லது சர்ச்சைக் குரியது என்பதால் இதுபற்றி அதிகம் கதைப்பதில்லை.

வன்னிப் பெருநிலத்தில் குறிப்பிடத்தக்களவு ஒரு மத்தியதரவர்க்கம் வளர்ச்சி பெற்ற முள்ளியவளையை "குட்டி யாழ்ப்பாணம்" என்று அழைப்பதிலிருந்தே எதையும் யாழ்ப்பாணத்து அளவு கோல்களுக்கூடாகத்தான் நாம் சிந்திக்கிறோம் என்பது தெரியவரும்.

இந்நிலையில், றிவிரச இடப்பெயர்வோடு தவிர்க்கவியலாதபடி ஈழப்போரின் யாழ்ப்பாண மையம் இடம் பெயர்ந்து வன்னிமைய அரசியல் தொடங்கியது.

இது ஐ.பி.கே.எவ் காலத்திலும் சிறிதளவு இருந்தது. ஆனாலது ஒரு தலைமறைவு அரசியல் - முறையான அர்த்தத்தில் வன்னி ஒரு அரசியல் நிர்வாக மையமாக உருவாகியது றிவிரச இடப் பெயர்வோடுதான்.

எனவே றிவிரச நடவடிக்கை ஈழப்போரின் அரசியல் நிர்வாக மையத்தை வன்னிக்கு இடம் பெயரவைத்தது மட்டுமல்ல அது எமது சிந்தனை, அணுகுமுறை எல்லாவற்றையுமே இடம் பெயரவைத்துவிட்டது. அது எல்லாவிதத்திலும் ஒரு மனப்பெயர்வுதான்.

இப்பொழுது றிவிரசவின் அகதிகள் வீடு திரும்புகிறார்கள். சமாதானத்தைப் பற்றிய ஐயங்கள் முற்றாகத் தீர்ந்துவிடாத ஒரு சூழலில் அகதிகள் வீடு திரும்புகிறார்கள்.

இப்பொழுது ஒரு சாட்சிபோல சும்மாநிற்கும் சிப்பாய்தான் எப்பொழுதும் இருப்பான் என்றில்லை. இது வீடுதிரும்பும் ஜனங்களுக்கும் தெரியாமலில்லை.

என்றால், எந்த அடிப்படையில் அவர்கள் போகிறார்கள்?

இந்தக் கேள்விக்குரிய விடை ஒரு விடுதலைப்பிரதேசத்தின் களயதார்த்தத்தை சரியாக விளங்கிக் கொள்வதிலிருந்தே தொடங்குகிறது.

பொதுவாக விடுதலைப் பிரதேசங்களின் வாழ்க்கைத்தரத்துக்கும் அரசின் கட்டுப்பாட்டிலிருக்கும் பிரதேசத்தின் வாழ்க்கைத்தரத்துக்கும் இடையில் ஒப்பீட்டளவில் பெரிய வேறுபாடிருக்கும். குறிப்பாக வசதி வாய்ப்புகளைப் பொறுத்த வரை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் கவர்ச்சியானது போலத்தோன்றும்.

உலகில், இதுவரையிலுமான எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் நிலைமை இப்படித்தான் இருந்திருக்கிறது.

இது போராட்டத்திலிருந்து ஜனங்களைப் பிரிக்க அரசுகள் மேற்கொள்ளும் ஒரு வழமையான தந்திரம்.

ஆனால் யுத்தகாலங்களில் வசதிவாய்ப்புக்களா அல்லது உயிரா என்று தெரியவேண்டி வரும் போது ஜனங்கள் இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் போக அஞ்சுவதுண்டு.

பதிலாக, யுத்தமில்லாத ஒரு சூழலில் மேற்படி வாழ்க்கைத்தரம் பற்றிய ஒப்பீடு மேலெழத் தொடங்கும்.

அப்போதெல்லாம் விடுதலைப் பிரதேசவாசிகள் தமது அதுவரையிலுமான வாழ்வனுபவத்தின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கிறார்கள்.

இந்த முடிவுகளைத் தீர்மானிக்கும் பொருளாதாரக் கட்டமைப்பு பொதுவாக விடுதலைப்பிரதேசங்களில் இருப்பதில்லை.

வன்னியிலும் விவசாயப் பொருளாதாரத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட குளக்குடியிருப்புகளே அதிகமுண்டு. தெட்டந்தெட்டமாக சீரற்ற பாதைகளால் முறையாக இணைக்கப்பட்டிராத இக்குளக்குடியிருப்புகளில் அநேகமாகச் சனச் செறிவு குறைவு.

றிவிரச வோடு வந்த சனத்தொகைப் பெருக்கம் அசாதாரணமானது. அது ஒரு திடீர் வீக்கம். இப்பொழுது வடியத்தொடங்கி விட்டது. இந்நிலையில் வன்னியின் ஜன அடர்த்தியைத் திட்டமிட்டு அதிகரிப்பதாயிருந்தால் வன்னியை கைத்தொழில் மயப்படுத்துவதே ஒரே உசிதமானவழி.


முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்டு தொழிற்சாலைகள் பெருகும்போது நகரமயமாதல் விரைந்து நிகழும். உட்கட்டுமானமும் அதற்கேற்ப வளரும்.

இதற்கு யாழ்ப்பாணத்துக் காசோலைக் கலாசாரத்தை விடவும் கவர்ச்சியான ஜனவசியம் மிக்க பொருளாதார அரசியல் திட்டம் ஒன்று தேவை.

விடுதலைப் பிரதேசத்தின் ஜனவசிய சக்தி அதிகரிக்க அதிகரிக்க அதற்கு நேர்வி.'.தமாக போராட்டத்தின் பேரம் பேசும் சக்தியும் அதிகரித்துச் செல்லும்.

இந்த இடத்தில் தமிழர்கள் ஒன்றை மறந்துவிடக்கூடாது. றிவிரசவின் படிப்பினையும் அதுதான். யாழ்ப்பாணத்தின் பலம் அதன் ஜனங்கள் பலவீனம் அது ஒரு குடாநாடாயிருப்பது வன்னியின் பலம் அது ஒரு பெருநிலமாயிருப்பது. பலவீனம் அதன் சனச்செறிவின்மை.

எனவே தமிழர்கள் தமது தாயகத்தின் ஒரு பகுதியில் காணப்படும் இந்தச் சமமின்மைகளைச் சமன் செய்யும் விதத்தில் எதிர்காலத்தை திட்டமிட்டால்தான் தமது பேரம் பேசும் சக்தியை அதிகரிக்கவும் பா[illegible] காக்கவும் முடியும்.



# ஆரிட்டச் சொல்லியழ

அழுவாரும் அழுவாரும் தன் கரைச்சல் திருவன் பெண்டிலுக்கு கட்டியழ ஆள் இல்லையாம். பின்ன என்ன?. புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்திட்டுது எண்டதால எல்லாம் முடிஞ்சுது எண்ட நிணைப்பு கொஞ்சப் பேருக்கு. ஏதோ பத்துப்பயினைஞ்சு வரியமா.... ஊரைக் கண்ட தில்ல உறவுகளைக் கண்ட தில்ல. இந்த இடைக்க ஒருக்கா பாத்திட்டு வருவம் எண்டு வெளிக்கிட்டா... என்ர ரத்த உருத்துச் சொந்தக் காறன் ஒருதன் ஓடிவந்து சொல்லுறான் நீ மட்டும் வீட்ட போயிராத எண்டு.

எட ஆனானப்பட்ட ஆயுதங்களை வச்சு அடிபட்ட ஆமியும் புலியும் இப்ப சத்தமில்லாம இருக்கினம். சாதாரணச் சனம் - நாங்க போனா என்ன. வாறது வரட்டும் எண்டு வெளிக் கிட்டன் பாருங்கோ. நானென்ன நாலு காசு சம்பாதிச்சதோ நாலு இன சனத்தைத்தான் சம்பாதிச்சனோ ஒண்டு மில்லை. நானுண்டு என்ர பாடுண்டு. என்ன ஒரு தேசப்பற்றில... எங்கட புலியள் போற நேரந்தான் நானும் ஊருக்குப் போறதெண்டு ஒரு விதரம்.

நான் வவுனியாவிலதான் பிறந்தனான். இப்ப கொஞ்சக் காலம் அந்தப்பக்கம் இல்லைத்தானே. இப்ப போனன். 1990க்குப் பிறகு - அப்ப எரிஞ்சு கிடந்த வவுனியாவ எட்டியும் பாராம பின் கதவால வந்தநனான் இப்ப முன்கதவால போறன். முதல் என்னக்கண்ட ஆள் கேட்டது. என்ன வயக்கெட்டுப் போனாய் எண்டதுதான். உலகப் புகழ்பெற்ற பொய் அதுதான்.

வவுனியா நல்லா வளந்திருந்தது தான். ஆனா நானும் அதப் பாத்து என்ன சொல்லப் போறன். அது இப்ப நல்லா வயக்கெட்டுப் போச்சு- இனித் தேறாதெண்டளவில தேஞ்சு போச்சு. பளபளக்கிற கடையள் விரிவாக்கி விட்ட ஆசுப்பத்திரி- குண்டும் குழியுமாக் கிடந்த ரோட்டெல்லாம் தார் ரோட்டு. தங்குதடையில்லாம இஞ்ச யுள்ள சந்து பொந்து இண்டு இடுக்கு எல்லாத்துக்குள்ளயும் ரெலிபோனும் கரீண்டும் போயிட்டுது. பிறகென்ன, இதுகளுக்குப் பின்னால நல்ல நல்ல ரீவீயளும் வீட்டுக்குவீடு விளக்குமாறு கிடந்தமாரிக் கிடக்குது.

இந்த ஊரில அயலூரில இருக்கிற ரீவீ வாய்க் காலுகள (Chanal) மறிச்சு திறம் நிகழ்ச்சியள மறு ஒளிபரப்பு செய்யிற நிலையங்களும் இருக்கு. கலோவில பேசினா 'கிலோ'வில காசு வருது அதுகும் 'ஸ்லோ'வில்லாம கிடைக்குது. பிறகென்ன அமர்க்களந் தான். ஏராளமான பெண்கள் வெளிநாடுகளில போய் உழைக் கினம். இவையளின்ர பிள்ளையள்... பரிதாபம். போரின்ால அவலப்பட்ட பிள்ளையளவிட மோசம். உழைக்காம வாற காசை செலவழிக்க ஒரேவழி குடிதான். கசிப்பு, கசிப்பு ராச்சியமே ஒண்டு இஞ்ச நடக்குது. அழகான பெண்கள் இந்த யாவாரத்தில ஈடு படுகினம். ஆக்கியோன் வேறு - இந்தக் கசிப்பில ஒரு கிளாஸ் குடிக்க வீட்டுத் தளபாடங்கள், ஆடு, மாடு, பிள்ளை குட்டியளின்ர உடுப்பு துணிமணி, சட்டி பானை, நகைநட்டு, காணி பூமி எண்டு எவ்வளவோ விலைப்பட்டிட்டுது.

நான் ஊரை விட்டுப் போகேக்க உத்தமனா இருந்தவன், பணக் காரனா இருந்தவன், அடுத்த வீட்டில ஒரு உப்புக்கட்டியும் இரவல் வாங்காதவன் எண்டிருந்த இளந்தாரியள், பிள்ளை குட்டிக்காறர், இந்தக் கசிப்புக்காரிய ளின்ர வீட்டில போய் அவளுக்கு தண்ணியள்ளிக் குடுக்கவும், மீன் வெட்டவும், சமைக்கவும் எண்டு ஏதோ கோயில் தொண்டு போல பயபக்தியாச் சேவை செய்யினம். அதெண்டாலும் பறவாயில்லை. இவங்களட்ட அவை இன்னொரு வேலையும் செய்விக்கினம்.

"ராசா நாளைக்கு பொலிசு வருது நீதான் போகோணும். நான் பின்னேரம் வந்து பிணையெடுப்பன்."

எண்டு சொல்லி கசிப்பு குடிக்க வந்தவனை வடிக்க வந்தவனெண்டு பொலிசோட கூட்டி அனுப்புறதும் நடக்குது. (அது சரி பொலிசு வாற தெண்டு இவைக்கு எப்படி முதலே தெரியும்) தங்கட பங்குக்கு கசிப்புப் பிடிச்சதெண்டு கசிப்பையும் ஒரு ஆளையும் கொண்டே அவை அடைக்க - பின்னேரம் ஒறிஜினல் கசிப்புக்காரன் வங்கு பிீக பிரச்சனை சரி. ஏனெண்டா பொலிசில பிடிபட்டு வந்தவனுக்கு அண்டையநாள் கூலியும் குடுத்து வயித்துக்கு கசிப்பும் குடுப்பினம்.

பெண்டில் பிள்ளையள் சும்மா இருக்குங்களே. கூவா குளங்கரை யெண்டு கத்தி அடியுதையும் படுங்கள். நித்தம் சண்டை. நித்தம் வெட்டுக்குத்து. விடிய ஒற்றுமை. பெண்டிலும் சேந்து குடிக்கிற வீட்டில பெரிய ரகளைதான் பாருங்கோ. ஒருநாள் புரியன்ர அடி உதை தாங்க மாட்டாம பொலிசில சொன்னாளாம் பெண்சாதி. பிடிச்சுக்கொண்டே அடைச்சுப் போட்டாங்கள். இவன் இப்பிடி நெடுகத் தொந்தரவு எண்டு விடமாட்டம் எண்டு போட்டாங்களாம். மற்றநாள் வெறி முறிய பெண்சாதி ரிமாண்டில உள்ள மனிசனுக்கு சாப்பாடு குடுக்க வந்தாள். சாப்பாட்டு பார்சலும் சோடாப் போத்திலுக்க சொதியும் ஒரு வீடிக்கட்டும். பொலிசுக்காறர் பாத்திட்டு சரி எண்ட பிறகு அந்தப் பொம்பிளை புருசனுக்கு சாப்பாடு குடுத்துட்டுப் போனாவாம். சாப்பிட்ட பிறகு பாத்தா ரிமாண்டுக்க கிடந்தபடி ஒரே சத்தமா எல்லாரையும் வாய்க்கு வந்தபடி பேசினானாம். பொலிசுக்காறர் அதட்டி

## மாயா

அடக்கி வச்சிருக்கிறாங்கள். அவனுக்கு வாய் திறந்தா வாறது தூசணந்தான். இப்பிடி மூண்டுநாளா நடக்குது. மூண்டாந்நாத்து ஒரு பொலிசுக்கு கொஞ்சம் மூளை வேலை செய்திருக்கு. இவன் சாப்பி டுந்தனைக்கும் பேசாமத்தானே இருக் கிறான். சாப்பிட்டாப்பிறகுதானே கத்தி றான் எண்டுபாத்தா... இந்தக் காலத் திலும் பத்தாவுக்கேத்த பதிவிரதையள் இருக்கிறது தெரிஞ்சிருக்கு.

இந்த குடிகாரன்ர பத்தினி மத்தியானச் சாப்பாட்டோட கொண்டு வாற சொதிப் போத்தலுக்க சொதியோட கசிப்பும் கலந்திருக்குது. எப்பிடிக்கதை வவுனியாவுக்கு எப்பிடிக்கதை எண்ணுறன்.

இது போச்சே கசிப்பு வித்து வித்தே இவங்கள் கல்வீடு கட்டிவிட்டாங்கள். ஒரு கூட்டம் நாடகம், சினிமா எண்டால் கச்சான் விக்கிறவை கடை போட்ட மாதிரி கசிப்புக் காறரும் கானுகளோட போயி ருக்கினம் எண்டாப் பாருங்கோவன். சாராயமும் அப்பிடித்தான்.

எட ஏன்ரா குடிச்சு நாசமாப் போறியள் எண்டா... அப்ப விக்க வேண்டாமெண்டு சொல்லு. வித்தா நாங்கள் குடிப்பந்தானே.

இந்த ஊரில இன்னொண்டு இந்த கசிப்புக் குடியால வந்த சண்டைய ளால தற்கொலை செய்தவையும் இருக்கினம். வெறிப்பித்தல்ல பெண் டில வெருட்டக் குடிச்சுப்போட்டு அல்க ஹோல் இருக்கப்போய் வயுத்துக்க மாற்று மருந்தும் வேலை செய்யாம செத்துப் போனவை இருக்கினம்.

இளைய சமுதாயத்திலும் மட்டு மருசாதி இல்லைப் பாருங்கோ. பெண்டில் புரியனுக்கடிக்க, புரியன் பெண்டிலுக்கடிக்க தேப்பன் மோனுக்கடிக்க மோன் தேப்பனுக்க டிக்க, வாத்தியாருக்கு மாணவனடிக்க இப்பிடியே இந்தப் பட்டியல் நீளுது.

குடிச்சவன் குடலவிஞ்சது காணாம இஞ்சயுள்ளவையள் அடிச்சு நொருக்கினதாலயும் உடல் வலுவை இழந்து போயிருக்கினம். சும்மா சொல்லக் கூடாது இதால கை முறிஞ்சவை, கால் முறிஞ்சவை, கண் பாதிக்கப்பட்டவை, காது கேளாமப் போனவையெண்டு ஒரு பெரிய கணக்கே இருக்கு.

சரிஇப்பென்ன கசிப்பை ஒழிக்கப் போறியளே - கசிப்புக்காரனப் பிடிக்கப் போறியளே ஏலுமெண்டாப் பண்ணிப் பாருங்கோ. நீங்கள் தடுக்கில பூந்தா அவங்கள் கோலத்துக்க பூருவாங்கள். ஏன் தெரியுமோ எல்லைக் கிராமங்களுக்கயிருந்து எட்டிக் குடுப்பங்கள் எல்லாம் ஒரு அண்டஸ்ராண்டிங்கில தான் நடக்குது.



# ஊர்கோலம்

## வேரும் விழுதும்

அவருக்கு வயது அறுபதின் நடுப்பகுதியாக இருக்கலாம் ஆனால் முகத்தில் விழுந்துள்ள சுருக்கங்களும் அகால முதுமையின் சாயல்களும் எழுபதிற்கும் மேல் இருக்கலாம் என்று எண்ண வைத்தது.

வன்னியிலிருந்து யாழ்ப்பாணம் போய் வந்திருந்தார். ஏழாண்டுக்கும் மேலாகப் பிரிந்திருந்த ஊரில் கால்பதித்து திருப்பிய மெல்லிய நிறைவு அதனையும் மீறிய கடும் சோகமும் அவரில் இழைத்திருந்தது. 'ஐயா எப்ப ஊராலை வந்தது...' நான் கேட்டேன்.

போய் ஒரு கிழமைதான் நிண்டனான்... வந்திட்டன்... மனிசியும் பிள்ளைகளும் அங்கதான் நிக்கினம். அவைக்கு வாற நோக்கமில்லைப் போல கிடக்குது... என்றார் அவர்.

அவையளை அங்க விட்டிட்டு நீங்க மட்டும் தனிய இங்கை வந்து என்ன செய்யப் போறியள். என்னண்டாலும் சொந்த ஊர்மாதிரி வருமே...?

நெற்றியைச் சுருக்கி பெருமூச்சு விட்டபடி 'என்ர வேர் அங்கைதான்... ஆனா விழுதுகள் இங்கைதானே இருக்கு...' என்றார் அவர்.

'நீங்க சொல்லிறது விளங்கேல்லை...'

என்ரை பிள்ளையள் அங்கைதான்... ஆனா பேரப்பிள்ளையள் இரண்டு இங்கைதானே இருக்கு...'

'ஓ... அப்பிடியா.. என்ன செய்யினம்.. கமமோ...? தொழிலோ..?

அவையின்ர வேலை முடிஞ்சுது.. மூத்தவன்ரை மூத்தவள் தேராவில்லை... நடுவிலாளின்ரை மூத்தவன் முள்ளியவளையிலை.. இரண்டு பேரும் துயிலுமில்லத்திலை தான்...'

நெஞ்சை ஏதோ அடைப்பது போன்று அழுத்தியது.

"எல்லாரும் அங்கைபோட்டா அதுகளை இடைக்கிடை போய்ப் பார்த்து நாலு பூப்போட ஆரிருக்கினம்..?"

அவர் பேசிக்கொண்டே கண்களில் துளிர்த்த நீரைத்துடைத்துக் கொண்டார்...

## முரண்பாடுகளும் உடன்பாடுகளும்

'வர... வர இந்தப் பேப்பர் செய்திகள் மனிசரை ஒரே குழப்பிக் கொண்டே இருக்குது.. ஒரு நாளைக்கு சமாதானம் இதோ வந்திட்டுது எண்டுமாப்போலை செய்தி வருகுது மற்ற நாளைக்கு 'சண்டை வரப்போகுது' எண்டு வெருட்டுமாப் போலை செய்தி வருகுது... ஒண்டையும் முடிவெடுக்க முடியேல்லை.. என்றார் அந்த காய்கறிக் கடைக்காரர்.

"பேப்பர்காரன் அப்பிடித்தான் பரபரப்பாக எதையும் எழுதுவான்.. அப்பதானே சனம் வாங்கும்" எதிரே இருந்த தேங்காய் வியாபாரி

'பேப்பர்காரங்களைக் குறை சொல்லியென்ன..? எல்லாம் இந்த அரசியல் வாதிகள் செய்யிறவேலை.. அவங்க தான் உலகத்தையே குழப்பிறவங்க.. அவங்க சொல்லிற தைத் தானே பேப்பர்காரங்களும் தலைகால் வைத்து கொஞ்சம் கூடக் குழப்புறாங்க... எல்லாமே யாவாரம் தான்..' என்றார் இன்னொரு வியாபாரி.

'அதுசரி... இண்டைக்கு பேப்பரிலை வன்னியில் மரக்கறி-மீன் விலை அதிகரிப்பு' என்று சொல்லி எழுதியிருக்கிறாங்கள்... என்ன மாதிரி...? என்றார் ஒரு வாடிக்கையாளர்.

'அதென்னமோ.... உண்மைதான்.. எல்லாத்தையும் யாழ்ப்பாணத்துக்கெல்லே ஏத்துறாங்கள்..' என்று தெளிவாக ஒரே நேரத்தில் குரல் ஏழுப்பினர் மூன்று வியாபாரிகளும்...

## தொடர்புகள்

பற்றைக்காடுகளும் குட்டைக் காடுகளும் மண்டி வீதியின் இரு புறமும் உடைந்தும், சிதைந்தும், நொருங்குண்டும் கிடக்கும் கட்டடங்களையும் வீடுகளையும் உள்ளடக்கி, மிதிவெடிகள் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டு மண்டை ஓட்டு படங்களுடன் எச்சரிக்கை அறிவித்தல்கள் போடபப்பட்டு வரண்டு, கருகிக்கிடக்கும் 'ஏ9' என்று குறியீட்டு மொழியில் கூறப்படும் யாழ் - கண்டி வீதியின் ஆனையிறவு முதல் வவுனியா வரையிலான நெடுஞ்சாலையில் புழுதிப்புகார் எழுப்பியபடி விரையும் நவநவீன வாகனங்களினதும், கனரக பாரஊர்திகளினதும் எண்ணிக்கை எண்ணற்றவை.

புதுமுகங்கள், புதுபுதுத் தோற் றங்களுடன் இந்த வீதியில் நடமாடுகின்றமை புதுமையான புதிரான விடயமே!

காற்றில் அந்நிய மொழிகள் காரணமாக ஐக்கியமாகி அலை கின்றன.

இவர்கள் அனைவரும் இங்கு எதைத் தேடி விரைந்து வருகிறா ர்கள் கிளிநொச்சியிலும் ஆனை யிறவிலும் இறங்கி நின்று எதை தேடுகின்றார்கள்? எதனை வீடி யோப்படமும், புகைப்படமும் எடுக்கிறார்கள்? இவர்களின் தேடல் எதனை நோக்கமாகக் கொண்டுள் ளது? இந்தப் பிரதேசத்திற்கும் இவர்களுக்குமான தொடர்பு தான் என்ன..? இவர்கள் வெறும் சுற்றுலாப் பயணிகளா? அப்படியென்று தெரியவில்லை.

இவர்களின் பலரது முகத்தில் எதனையோ இழந்து விட்ட துயர அழுத்தத்தின் சாயல் தென்படு வதை ஊன்றி அவதானித்தால் புரியும்.

ஆனையிறவில் இறங்கி நின்ற அந்த சிங்கள குடும்பத்தில் இரு முதிய பெண்கள் இரு இளைஞர் கள் ஒரு இளம் பெண், ஒரு சிறுமி ஆகியோர் நின்றிருந்தனர்.

'நீங்கள் சுற்றிலா வந்தீர்களா? எனக்கு தெரிந்த சிங்கள மொழியில் கேட்டேன்.

'இல்லை...' சிங்களத்திலேயே பதில் வந்தது..

'அப்ப யாழ்ப்பாணம் போகிறீர்களா?'

'இல்லை....' மீண்டும் அதே பதில்.'அப்ப..' அதே கேள்வி.

'எங்கட மகன் இங்கு தான் சண்டையிலை காணாமல் போய் விட்டார்..' பதில் மெதுவாகவே அடைக்கும் குரலில் வந்தது.

'காணாமல் போய் விட்டாரா...?'

'அப்பிடித்தான் அரசாங்கம் சொல்லுது...?'

'அதை நீங்கள் நம்பவில்லையா..?'

'ஆனையிறவும் விடப்படவில்லை எண்டுதான் அது சொன்னது!'

'அப்ப...?'

இவ்வளவு அழிவையும் செய்த, ஆமியோட எங்கடை பிள்ளையும் இருந்திருக்கிறான்.. அதுதான் வேதனையாக இருக்கிறது..'

'......?'

'ஆனாலும் எங்கட மகன், இந்தப் பெண்ணுடைய கணவன் இந்தப் பிள்ளையின் தந்தை... அவன்... அவனுக்காக அவன் இறந்த மண் ணில் ஒரு பிரார்த்தனை... பக வானே அடுத்த பிறவியில் அவன் இத்தகைய கொடிய வேலையில் இருக்க வேண்டியவனாகப் படைக்காதே...' 'என்ற வார்த்தைகள் விசும்பலுடன் வெளிவந்தன.

பாதசாரி

# சுமையாகும் கல்வியை சுவையாக்க வேண்டும்

மு.திருநாவுக்கரசு

இது அறிவின் யுகம். ஆதலால் அறிவிலிருந்தே வாழ்வும் எதிர்காலமும் உதயமாகின்றது. முதலாவது அர்த்தத்தில் இந்த அறிவை ஈட்டுவதற்கான ஒரு வழிவகையாக கல்வி உள்ளது. கல்வியானது இரண்டு பிரதான அம்சங்களைக் கொண்டுள்ளது. முதலாவதாக, மனிதனின் தேவைக்கும் பொருத்தப்பாட்டிற்கும் ஏற்ப மனிதகுலத்தினது இருபது லட்ச வருடகால அறிவுத் தொகுதியை சமகாலச் சந்ததியினருக்கு திட்டமிட்ட வகையில் கைமாற்றும் ஒரு முறைமையாக கல்வி உள்ளது. இரண்டாவதாக, இத்தகைய அறிவனுபவ கைமாற்றத்துடன் இணைத்து ஒவ்வொரு சிறாரிடமும் காணப்படுகின்ற இயல்பான திறன்களைத் தூண்டி செயற்பாட்டைப் புரியவல்ல ஆளுமை விருத்தியை ஏற்படுத்தலும் பண்படுத்தலும் என்பனவாகும்.

அறிவிற்குள் அனுபவமும், அனுபவத்துள்ளும் ஆளுமைக்குள்ளும் பண்பாடென்பது அடங்குமாயினும் விளக்கம் கருதி அறிவு, அனுபவம், ஆளுமை, பண்பாடு என அவற்றை விரிக்க நேர்ந்துள்ளது.

இவ்வாறு பெறப்பட்ட கல்வியின் துணைகொண்டு நாம் வாழ்விற்கான ஆக்கங்களில் ஈடுபடுகின்றோம். இந்த ஆக்கங்கள் பல வகைப்படினும் இங்கு இரு முக்கிய கூறுகளாக மட்டும் பிரித்தெடுத்து நோக்குவோம். ஒன்று, ஆராய்ச்சி இது ஆக்கங்களுக்கான அடிப்படையாய் அமைவது. இந்த

**** பாலர் பராயத்தில் ஏற்படும் எண்ணங்கள், நல்லதாகவோ அன்றில் கெட்டதாகவோ, பாலர்களின் அடிமனங்களிற் பதிந்து அவர்களின் எதிர்காலப் போக்கை நிர்ணயிக்கும் நிரந்தரச் சாரதிகளாகி விடுகின்றன. இந்த அடிமனப் படிமங்களின் தரமே பிற்கால வளர்ச்சிக்கான முன்னிலைக் கிண்ணமாகிவிடுகின்றது. அந்தப் கிண்ணத்தின் அல்லது பாத்திரத்தின் அளவிலும் தன்மையிலுமிருந்தே எதிர்காலத்திற்கான சேகரிப்புக்களும், நடத்தைகளும், பலாபலன்களும் அமைகின்றன.**

வகையில் இது ஓர் அடிப்படையாக்கம் ஆகிறது. இரண்டாவது, பண்ட, நிர்மாணிப்பு மற்றும் மகிழ்ச்சி ஆக்கங்கள். மேற்படி இவ்விரு வகை ஆக்கங்களுக்கும் கல்வி ஒரு முக்கிய துணைச் சக்தி ஆகின்றது. கல்விக்கு வெளியே விஞ்ஞானிகளும், மேதைகளும், தலைவர்களும் வரலாற்றில் உண்டாயினும் கல்வியானது அறிவிற்கான வாய்க்காலாய் உள்ளது.

ஆனால் வாழ்வைத் திட்டமிடுவது என்று எடுத்துக் கொண்டால் அது அறிவைத் திட்டமிடுவதிலேயே ஆரம்பமாகின்றது. அது கல்வி, ஆராய்ச்சி ஆகிய இரு அம்சங்களையும் திட்டமிடுவதில் உதயமாகின்றது.

பாலர்கல்வி, அப்பாலர் கல்விக்கான ஆய்வு ஆகிய இரு அம்சங்களையும் கருவாகக்கொண்டு அவற்றின் பால் ஒரு தூண்டலை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதே இக்கட்டுரையாகும்.

இப்போது நாம் வைத்திருக்கும் கல்வியும் கல்வி முறையும் எமக்கு மேற்குலகத்தாற் தரப்பட்ட கல்வி தான். மேற்குலகின் நவீன கல்வி முறை எம்மத்தியில் எமது கலாச்சாரத்தின் மீதே பதியவைத்துச் செயற்படுத்தப்படுவதால் மேற்கின் கல்வி, எமது கலாச்சாரம் ஆகிய இரண்டையும் பற்றிப் பேசாமல் எமது கல்வி பற்றிப் பேசமுடியாது.

தமிழர் ஒரு தொன்மையான இனம் என்ற வவகையில் தொன்மைக்கேயுரிய பலத்தையும் பலவீனத்தையும் கொண்டுள்ளனர். தொன்மையானது ஒருபுறம் சிறந்த தொடர் அனுபவத் தொகுதிகளைக் கொண்டிருக்கும் அதேவேளை மறுபுறம் இறுகிக்கட்டி பற்றிப்போன பழமைகளையும் பிற்போக்குக்களையும் தன்னகத்தே கூடவே கொண்டிருக்கும். ஏற்றத்தாழ்வு சாதி அடுக்குகள், இணக்குழுத் தன்மைகள், கூட்டுக் குடும்ப நிற்பந்தங்கள் போன்ற பல அம்சங்களும் இவற்றுடன் சேர்ந்த கண்ணோட்டங்களும் சேர்ந்து ஒரு பாரம்பரியமாகிவிடும். ஆதலால் எமது சமூகத்தின் நல்லதான அல்லது கெட்டதான சமூக, கலாச்சாரப் பாரம்பரியங்களிலிருந்தே கல்வி நோக்கப்படுகின்றது. அணுகப்படுகின்றது, பெறப்படுகின்றது. ஆதலால் மேற்கின் நவீன கல்வியும் எமது பாரம்பரியங்களும் சேர்ந்து திருக்கிமுறுக்கி எடுக்கப்படும் ஒரு பொருள்தான் எமது கல்வி.

எனவே எமது கல்வியைப் பற்றிச் சிறப்பாக யோசிக்க வேண்டுமென்றால் எமது பாரம்பரியம் சார்ந்த பிரச்சினைகளிலிருந்தும் அவற்றின் நல்ல கெட்ட அம்சங்களிலிருந்தும் சிந்திக்கவேண்டியதுடன் நவீன கல்வியின் வரவை ஏற்றுக்கொண்டு அதனை மேற்கின் நோக்கு நிலைக்கும் தேவைக்கும் அப்பால் எமது தேவைகளுடன் இணைத்துப் புடமிடவும் வேண்டும். மனிதன் பூகோளப் பிராணியாகிவிட்டான் என்ற யதார்த்தத்தை கருத்தில் எடுத்தும், இதில் எமது சிறப்பான வாழ்விற்கான வழிவகைகள் எவை என்பதைக் கண்டறிந்தும் அவற்றிற்கேற்ற ஒரு சிறப்பான கல்விமுறை பற்றி நாம் அதிகம் சிந்திக்க வேண்டும். அதாவது பூகோள யதார்த்தத்திற்கு முகம் கொடுத்தல் என்பதுடன் எமக்குப் பொருத்தமான உயர்ந்தபட்ச நலன்களை அடையத் திட்டமிடல் என்பதே எமது கல்வித் திட்டமிடலாக அமையமுடியும்.

எமது சமூகத்தில் பாரம்பரியமாக நிலவிவந்த ஏற்றத்தாழ்வுகளும், விருப்பு வெறுப்புகளும், விழுமியங்களும் எமது கல்வியில் ஒன்று கலந்துள்ளன. இப்பின்னணியில் நின்றுகொண்டே எமது கல்வியில் உள்ள பிரச்சினைகளையும் இவற்றைத் தீர்க்கவல்ல வழிவகைகளையும் நோக்க வேண்டும். கல்வியில் “முன்பள்ளியும்” ஆரம்பப்பள்ளியும் மிக முக்கியமானவை. இக்கட்டுரை “முன்பள்ளியை மட்டுமே பொருளாகக் கொள்கிறது.

“பள்ளி, முன்பள்ளி”ஆகிய இரண்டினையும் எமக்கு வெள்ளையனே தந்தான். பள்ளி அறிமுகப்படுத்தப்பட்டு மிக நீண்ட காலத்தின் பின்பே எமக்கு “முன்பள்ளி” அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் பள்ளிக் கலாச்சாரத்திற்குள்ளாலும், பள்ளி அனுபவத்திற்குள்ளாலுமே “முன்பள்ளியை” அணுகும் துரதிஷ்டம் எமக்கேற்பட்டது. ஆங்கிலத்திலுள்ள “முன்பள்ளி” என்ற பதப்பிரயோக த்தைக்கூட நாம் ஏற்கமுடியாது.



மேற்குலகில் கைத்தொழில் அபிவிருத்தியின் விளைவால் ஆண், பெண் இருபாலாரும் தொழில் புரியும் நிலை வரவே இந்த முன்பள்ளிகளும்”சேர்ந்து வளர்ந்தன. அது அங்கு ஒரு பராமரிப்பு அர்த்தத்துடனும் கல்வியுடனும் கலந்து பெருவளர்ச்சி அடைந்தது.

இதில் ஒரு கல்வி உண்டேயாயினும் அது பள்ளிக் கலாச்சாரத்திலிருந்து முற்றிலும் வேறானது. இங்கு முதல் நிலையில் குழந்தைகள் பூசிக்கவும் போசிக்கவும் படுபவர்களாகின்றனர். அந்தப் பூசிப்புடனும் போசிப்புடனும் இணைந்து ஒரு பக்கமாக கல்வியும் ஒட்டிக்கொள்கின்றது. இவ்வாறு ஒட்டிக்கொள்ளும் கல்விப் பகுதியை பிழையாக விளங்குவதிலிருந்தே இதன் பிரதான பிழைகளும் ஆரம்பமாகின்றன.

அதாவது பள்ளி ஆசிரியர்களுடன் இணைந்து “முன்பள்ளி” ஆசிரியர்களைப் பார்க்கின்றோம். ஆதலால் ஒரு பள்ளி ஆசிரியர் படிப்பிக்கும் கணக்கின் தரத்துக்குள்ளாலும், எழுத்தின் அளவுக்குள்ளாலும் இந்த “முன்பள்ளி” ஆசிரியர்களையும் பார்க்கின்றோம், எடைபோடுகின்றோம். அப்போது “முன்பள்ளி” ஆசிரியர் பள்ளி ஆசிரியரை விடவும் தரம் குறைந்தவராக மதிக்கப்படுகின்றார். இது அந்த ஆசிரியர் பற்றிய மதிப்பீடுமட்டுமல்ல பாலர் கல்வி, பாலர் விருத்தி பற்றிய மதிப்பீடும் தான். இது முற்றிலும், மிக முற்றிலும் தவறானது.

**கல்வி என்பது ஒரு சுமையல்ல, திணிப்பல்ல, அது விருப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் உரியது என்ற மனநிலையை இப்பாலர்களிடம் போசிப்பிற்கூடாக உருவாக்க முடிந்தால் அதுவே இதன் அடி நிலை சாதனையாகும்.**

குழந்தைகளைப் போசிப்பது - விருத்திக்கு இட்டுச் செல்வது என்பது ஒரு தனிக்கலை. குழந்தைகள் பூமிக்குப் புத்தம் புதியவர்கள். அவர்களது மன உணர்வுகளை விளங்கிக்கொள்வது, அவர்களது எண்ண ஓட்டங்களை புரிந்துகொள்வது என்பனவும் அந்த எண்ண ஓட்டங்களையும் உணர்வுகளையும் மேல்நோக்கி இட்டுச் செல்வதும் மிகக் கடினமான பணியாகும். இதற்கு அதிவிசேட திறமை வேண்டும்.

இந்தப் பாலர் பராயத்தில் ஏற்படும் எண்ணங்கள், நல்லதாகவோ அன்றில் கெட்டதாகவோ, பாலர்களின் அடிமனங்களிற் பதிந்து அவர்களின் எதிர்காலப் போக்கை நிர்ணயிக்கும் நிரந்தரச் சாரதிகளாகி விடுகின்றன. இந்த அடிமனப் படிமங்களின் தரமே பிற்கால வளர்ச்சிக்கான முன்னிலைக் கிண்ணமாகிவிடுகின்றது. அந்தப் கிண்ணத்தின் அல்லது பாத்திரத்தின் அளவிலும் தன்மையிலுமிருந்தே எதிர்காலத்திற்கான சேகரிப்புக்களும், நடத்தைகளும், பலாபலன்களும் அமைகின்றன.

இப்படியான ஒரு கிண்ணத்தை முதல் நிலையில் உருவாக்கும் “முன்பள்ளி ஆசிரியர்”களின் பணி அதி நுணுக்கமானதும் தனி விசேடமானதுமாகும்.

முதலாவதாக இதனை “முன்பள்ளி”என்ற எண்ணத்தில் இருந்தும் “முன்பள்ளி ஆசிரியர்” என்ற எண்ணத்தில் இருந்தும் நீக்குவோம். இது குழந்தைகள் பூசிக்கவும் போசிக்கவும்படும் ஓர் ஆலயம். அதாவது குழந்தை ஆலயம். அது ஒரு பள்ளியுமல்ல: அதில் பணியாற்றுவோர் ஆசிரியருமல்ல. அதில் பணியாற்றுவோர் குழந்தைகளைப் பூசிப்போரும் போசிப்போரும்தான். இதனை ஒரு பள்ளியாகவும் ஆசிரியக் கலாச்சாரமாகவும் பார்ப்பதனால் முன்பள்ளி ஆசிரியர் என அழைக்கப்படும் இப்போசிப்பாளர்களுக்கு ரூபா 500 தொட்டு 2000 வரையே ஊதியம் வழங்கப்படும் நிலையுள்ளது. இதனால் இப்பணிக்கு திறமைசாலிகளும் தகுதியானவர்களும் வரமுடியாது போகின்றது. இவர்களுக்கு ஆகக் குறைந்தது மாதம் ரூபா 7500 ஆவது இன்றைய நிலையில் ஊதியமாக வழங்கப்பட வேண்டும்.

இதனை மிகவும் தகுதிவாய்ந்த ஆக்கபூர்வமான தொழிலாகக் கருதி இதற்கு குறைந்தது மூன்றாண்டுகால கல்வியும் பயிற்சியும் அளிக்கப்பட வேண்டும். இவற்றிற்கான ஆராய்ச்சிகள் அதிக முனைப்புடன் ஊக்குவிக்கப்பட வேண்டும். உளவியல், விஞ்ஞானம், கலாச்சாரம் சார்ந்த விடயங்களுடன் குழந்தைகளின் தேவைகள் நுணுக்கமாகப் புரிந்து இணைக்கப் பட்டு அவற்றின் பொருட்டான சிறப்பான ஆய்வுகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

கிராமங்களில் கோவில்களை முழுமூச்சுடன் செயற்படுத்தும் பாரம்பரியத்தைக் கொண்ட மக்கள் நாம். அந்தப் பாரம்பரியத்தைக் கொண்ட மக்களிடம் இந்தக் குழந்தை ஆலயம் எனும் அம்சம் இலகுவாகவே தோற்ற முடியும்.

இங்கு கூறப்படும் போசிப்பென்பது குழந்தைகளை அவர்களுக்குரியதும் அவர்களாற் செய்யக்கூடியதுமான வேலைகளைச் செய்ய விடுவதிலும், செய்யத் தூண்டுவதிலும், செய்ய உதவுவதிலும் இருந்து கருக்கொள்ள வேண்டிய பணியாகும். பெரியவர்களிடமில்லாத அல்லது இதுவரை நாம் காணாத தனிச் சுயம் பாலர்களிடம் இருக்கலாம் என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களின் சுயம், சுய நம்பிக்கை, சுயசெயற்பாடு என்பனவற்றையும் தூண்டி துணை நிற்பதே போசிப்பின் முதன்நிலை அர்த்தம். அவற்றுடன் இணைந்ததாக அவற்றிலிருந்து வெட்டிப் பிரித்துப் பார்க்கமுடியாததாக அவர்களின் உடல் நலன்களும், தேவைகளும், அன்பும், மகிழ்ச்சியும், ஓய்வும், ஆடல், பாடல், விளையாடல் என அனைத்தும் இணைகின்றன.

கல்வி என்பது ஒரு சுமையல்ல, திணிப்பல்ல, அது விருப்பிற்கும் மகிழ்ச்சிக்கும் உரியது என்ற மனநிலையை இப்பாலர்களிடம் போசிப்பிற்கூடாக உருவாக்க முடிந்தால் அதுவே இதன் அடி நிலை சாதனையாகும். அத்துடன் அவர்களை உற்சாக மிக்கவர்களாய் வாழ்வில் நம்பிக்கையும் பிடிப்பும் செயலார்வமும் மிக்கவர்களாய் பூமியிற் பிரவேசிக்கச் செய்ய வேண்டும். இத்தகைய அரும்பணியாற்றுவதற்கு சிறப்பான திட்டமிடலும், பயிற்சியும், திறமையும் சிறந்த ஊதியமும் சமூகக்கூட்டுப் பொறுப்பும் அவசியம். குழந்தைகளுக்கு நாம் அவர்களின் வழியில் வழிகாட்டுவதுதான் எமது பணியும் வழிகாட்டலுமாகும்.

இங்கு குழந்தைகள் புது மலர்கள் என்பதாலும் பூமிக்கு புதியவர்கள் என்பதாலும் “முன்பள்ளி ஆசிரியர்” எனப்படும் போசிப்பாளருக்கும் பெற்றோருக்கும் இடையே ஒரு தன்மை வாய்ந்த கையாளல்களும் இருக்க வேண்டும். வீட்டிற் பெற்றோரின் கையாளல் ஒரு மாதிரியாகவும் போசிப்பாளரின் கையாளல் இன்னொரு மாதிரியானதாகவும் இருக்குமிடத்து குழந்தை திணறித் தறுக்கணித்து விடும். இத்தறுக்கணிப்புகளை பிற்காலத்தில் எத்தகைய உயர்கல்வியினாலும் சீர்செய்தல் கடினம். ஆதலால் பெற்றோருக்கும், போசிப்பாளர்களுக்கும் (முன்பள்ளி ஆசிரியர்) கூட்டான கலந்துரையாடல்களும் பொதுப் பயிற்சிகளும் அவசியம். மாதத்தில் ஒரு நாளாவது இத்தகைய பொதுப் பயிற்சிப் பாசறைகள் அவசியம். பெற்றோர் எத்துணை கல்விமானாக இருப்பினும் இப்பொதுப் பயிற்சியிற் கலந்து கொள்வது நல்லது. ஏனெனில் அவர் கற்றிருந்த கல்வி காலாவதியாகி இப்போது புதுக் கோட்பாடுகளும் அணுகு முறைகளும் வந்திருக்கலாம்.

கல்வி அறிவைத் தேடுவதற்கான ஒரு வழியே. ஆனால் கல்வியின் பெயரால் மேற்கொள்ளப்படும் சுமைகளும், சித்திரவதைகளும் குழந்தைகளின், சிறுவர்களின், இளைஞர்களின் மனதில் வெறுப்பை விதைத்து கல்வியை அறிவின் எதிர்நிலைக்கு தள்ளாது வளர்ச்சியின், மகிழ்ச்சியின் உயர் நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும்.



# தீவகம் நோக்கிய பயணம்

**பகுதி 1**

புரிந்துணர்வு உடன்பாட்டு கைச்சாத்திட்டதன் பின் தமிழர் தாயக பிரதேசங்களில் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வுகள் நடந்தேறி வருகின்றன ஆனால் தீவகம் நோக்கிய பயணம் என்பது வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு என்பதை விட வரலாறு எம் மீது சுமத்திய பொறுப்பு மிக்க நிகழ்வாகவே அமைந்து விட்டது

மக்கள் வாழும் யாழ் மாவட்ட சகல பிரதேசங்களிலும் புலிகள் செல்லலாம் என்பதையே புரிந்துணர்வு உடன்பாடு சொல்லி நிற்கிறது. ஆனால் புலிகள் யாழ் குடாவில் அரசியல் செயலகம் திறந்தபோதும் தீவகப் பகுதிக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை. தீவகமக்கள் பல தடவைகள் புலிகள் வருவார்கள் எம்பிள்ளைகள் வருவார்கள் என்று எதிர்பார்த்து காத்திருந்தது மட்டுமல்லாமல் வரவேற்க காத்திருந்தனர் எனும் குற்றத்திற்காகவே சிறிலங்கா படையினரால் பல் தடவைகள் துன்புறுத்தப்பட்டும் இருந்தார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளும் இரண்டு தடவை தீவகம் நோக்கி புறப்பட்டவேளை சிறிலங்கா இராணுவத்தினரால் தடுக்கப்பட்டது மட்டுமல்லாமல் நிபந்தனைகள் விதித்தும் அவமானப்படுத்தும் வேளைகளிலும் சினத்திற்குள்ளாக்கப்பட்டனர். இவற்றுக்கெல்லாம் புலிகள் அமைதிகாத்த அதேவேளை விடாமுயற்சியினாலும் போர்நிறுத்த கண்காணிப்பு குழுவினரின் துணையுடனும் இறுதியாக 6ம் மாதம் 17ம் நாள் தீவகத்துக்குள் செல்லலாம் எனும் அனுமதியையும் பெற்றுகொண்டனர்.

அதற்கமைய அவர்களின் தீவக பயணத்திற்கான நிகழ்ச்சி நிரலின் பிரதிகள் கண்காணிப்பு குழுவினருக்கு வழங்கப்பட்டது மட்டுமல்லாமல் சிறிலங்கா இராணுவம், ஸ்ரீலங்கா கடற்படையினரின் அனுமதியும் பெறப்பட்டது. அந்த நாளும் வந்தது. நாங்களும் இணைந்து புறப்படுகிறோம்.

17ம் திகதி காலை 9.30 (எமது நேரம்) பொற்பதி வீதியில் உள்ள எமது அரசியல்துறை செயலகம் பரபரப்பாகிறது. மூன்று வாகனங்கள் பல மோட்டார் சைக்கிள்கள் என வீதி நிறைந்திருந்தது. போராளிகள் மிகுந்த உற்சாகத்தோடு வாகனத்தில் பொருட்கள் மற்றும் தமது உடமைகளை ஏற்றிக் கொண்டு இருந்தார்கள். வாகனத்திலே புலிக்கொடிகள் கட்டப்படுகின்றன. தமிழீழ தேசியத்தலைவரின் திரு உருவப் படங்கள். தமிழீழ எழுச்சிப் பாடல் ஒலிப்பேழைகள், வீடியோ ஒளி நாடாக்கள் என பல பொருட்கள் ஏற்றப்படுகின்றன. அரசியல் பணிக்கான போர்ாளிகள், படப்பிடிப்பாளர்கள், செய்தியாளர்கள் அனைவரும் மகிழ்வோடு வாகனங்களில் ஏறுகின்றனர். யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பருதி, யாழ் மாவட்ட பரப்புரைப் பொறுப்பாளர் பாப்பா, தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோரின் தலைமையில் தீவகம் நோக்கிய பயணம் சரியாக 10 மணியளவில் எமது செயலகத்திலிருந்து ஆரம்பமாகிறது. 'தலைவர் சமாதானத்துக்காக கையொப்பமிட்டு எங்கள் அனுப்பி இருக்கிறார். இண்டைக்கும் தீவுக்க போக விடாமல் திருப்பி அனுப்பினால் அவன் விடுறவரைக்கும் றோட்டிலேயே இருப்போம் இவ்வாறு போராளிகள் வாகனத்திற்குள் கதைத்துக் கொள்கின்றனர்.

நேரம் 10.15 ரெலிகொமினிகேஷனடியில் எமது வாகனங்கள் தரிக்கின்றன. 10 நிமிடங்களின் பின் கண்காணிப்பு குழுவினரும் வந்து எம்முடன் இணைந்து கொள்கின்றனர். 10.30 மணிக்கு பயணம் ஆரம்பமாகிறது பண்ணைப் பால சோதனைச்சாவடி சிறிலங்கா இராணுவச் சிப்பாய்கள் இருவர் கையசைத்து எமது வாகனங்களை உள்ளே விடுகின்றனர். உப்புக் காற்று உடல் மேல் பரவத் தொடங்க உணர்வுகள் ஒன்றிக்க பயணத்தை தொடர்கின்றோம். "கார்த்திகை 27" பாடல் வாகனத்துள் ஒலித்துக் கொண்டிருக்கிறது. காற்றிலே புலிக்கொடி படபட என ஓசை எழுப்பிக் கொண்டிருந்தது. கணிசமான நேரத்தில் பின் அல்லைப்பிட்டி இராணுவ முகாமை அண்மிக்கிறோம். வீதிக்கு குறுக்காக துலா போடப்பட்டு வாகனங்கள் மறிக்கப்படுகின்றன. எமக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் வந்த போராளிகளுக்கு சோதனை செய்யப்படுகிறது. மிகவும் நாகரிகமற்ற முறையில் வீதியோரத்தில் வைத்தே மறைப்புகள் எதுமின்றி உடற்பரிசோதனை செய்யப்படுகிறது. உடமைகளும் அப்படியே. இதனால் எமக்குள் ஓர் மனக்கசப்பு தோன்றலாயிற்று. உடனேயே கண்காணிப்புக் குழுவினரின் உதவியுடன் இவ் அவமானத்தை தடுக்க நினைத்து பெரும் பிரயத்தனங்களின் பின் வெற்றி கண்டோம். சோதனை முயற்சி கைவிடப்படுகிறது. ஆனால் எமது பெண்போராளிகள் இடுப்பில் அணிந்திருந்த இடுப்பு பட்டியை கழற்றி விட்டுத்தான் உள்ளே செல்லலாம் என படையினர் கூறிவிட்டனர். அது இராணுவ சாதனமாம் கொண்டு செல்லக்கூடாதாம் என காரணமும் கூறப்பட்டது. அப்ப ஏன் "முகமாலையூடாக அப்பிடியே விட்டீர்கள்" என கேட்டபோது தமிழ் தெரியாததுபோல் மௌனம் காக்கப்பட்டது. இருந்தும் எமது கொள்கைகளுக்கேற்ப அவர்களுடன் முரண்படா வண்ணம் எமது பெண் போராளிகள் இடுப்புப் பட்டியை கழற்றி விட்டு சிறிய பட்டிகள் அணிந்து வந்தனர்.

ஒருவாறு அல்லைப்பிட்டி ஊடாக பயணித்தோம். பின்னால் இரண்டு பிக்கப் வாகனங்களில் 25 ற்கு மேற்பட்ட படையினர் தொடர்ந்த வண்ணமிருந்தனர். நாம் சாட்டி துயிலுமில்லம் நோக்கி செல்வதற்கான பாதையில் திரும்பியபோது படையினர் மறித்து "போக முடியாது" என்று கூறினார்கள். பொதுமக்கள் பாவனைக்குள்ள சகல வீதிகளும் எமது பாவனைக்கும் உண்டு என கடுமையாக வாதிட்டு பின் அனுமதி பெற்று உள்நுழைந்தோம். அதேவேளை எம்மை வரவேற்க வந்திருந்த பாடசாலைப்பிள்ளைகளையும் அங்காலே வரவிடாமல் மறித்து வைத்திருந்தார்கள். அதையும் கண்டு நாம் எடுத்துக்கூற கண்காணிப்பு குழுவினர் கதைத்து பின் பிள்ளைகளை அனுப்பி வைத்தார்கள்.

ஓடிச்சென்று அவர்களை அன்போடு தழுவிக் கொண்டோம். எங்களை காணவேண்டும் எனும் துடிப்பும் ஏக்கமும் அவர்கள் முகங்களில் அப்பிக்கிடந்தன. மகிழ்ச்சி வெள்ளத்தில் நாம் நனைந்து கொண்டிருந்தபோது இராணுவச் சீருடைகள் கைகட்டி பார்த்தவண்ணம் இருந்தன. பின்னர் அவர்களையும் அழைத்துக் கொண்டு சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்திற்குப் போனோம். அங்கும் இராணுவத்தினர் பின் தொடர்ந்தனர். இதனால் கூடியிருந்த மக்களும் மாணவர்களும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகினர். நாம் நிலைமைகளை விளக்கி கண்காணிப்பு குழு ஊடாக படையினருக்குத் தெரிவித்தோம். அதேவேளை எங்களுடைய இந்தப் பயணத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த யாழ் மாவட்டத்துக்கான பாராளுமன்ற உறுப்பினர் திரு.சிவாஜிலிங்கமும் வந்திருந்தார்.

சென்ற தேர்தல் பிரச்சாரத்திற்காக தீவகம் வரும்போது தான் திரு.சிவாஜிலிங்கம் அவர்கள் துரோக சக்திகளால் தாக்கப்பட்டு காலில் காயமடைந்திருந்து இன்னும் காயம் மாறா நிலையிலும் வந்திருந்தார். அவருக்கான பாதுகாப்பிற்காக நாங்கள் வருகிறோமே தவிர உங்களுக்காக வரவில்லை என இராணுவத்தினர் எம்மிடம் தெரிவித்தனர். அதைக் கேட்ட சிவாஜிலிங்கம் எனக்கு பாதுகாப்பு தேவையில்லை அப்படியும் வருவீகளானால் நான் உள்ளே போகவில்லை. புலிகள் மட்டும் செல்லட்டும் என்றார். ஆனால் படையினர் ஏற்றுக்கொள்ளவில்லை. இங்கும் முரண்படுவதை தவிர்த்தோம். ஒருவாறு சாட்டி துயிலுமில்லத்தில் ஈகச்சுடரேற்றி அகவணக்கம் செய்து தீவகத்தில் வித்தான எமது மாவீரர்களை மீண்டும் நெஞ்சிலிருத்திக் கொண்டு பயணத்தை தொடர்ந்தோம்.

பங்களாவடி பாடசாலையை நாம் அண்மிக்க முன்பாகவே இராணுவத்தினரால் பாடசாலைப்பிள்ளைகள் மக்கள் அனைவரும் கலைக்கப்பட்டிருந்தனர். நாம் வந்தடைந்து எஞ்சியவர்களோடு உரையாடிவிட்டு அங்கிருந்து புறப்பட்டு தம்பாட்டி பாடசாலையை அடைந்தோம். நாம் தீவகத்தில் இருந்து புறப்பட்ட 11 ஆண்டுகள் வரை எமது ஏனைய போராளிகளை பொத்தி பாதுகாத்து உணவு கொடுத்து வளர்த்து வருகின்ற அதே உறவுகளின் கையில் அப்பாடசாலையில் எமக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. கண்ணீரோடும் புன்னகையோடும் ஏற்றுக்கொண்டோம்.

இதற்கிடையில் ஒரு பஸ்ஸில் சுமார் 80க்கு மேற்பட்ட இராணுவத்தினர் இன்னும் எம்முடன் இணைக்கப்பட்டு பந்தோபஸ்து பலப்படுத்தப்படுகிறது. இதனால் ஒரு கிராம மக்களே வரவாய்ப்பில்லாது போய்விட அவர்கள் சுத்தி வேறுபாதையில் வந்து எங்களை வரவேற்றனர்.

என்ன இருந்தும் மக்களது எழுச்சியோ அடங்கவில்லை என்பதற்கு இது ஒரு உதாரணம். சரியாக 2 மணியளவில் அதே பாடசாலையில் மாபெரும் பொதுக்கூட்டம் ஆரம்பமாகிறது. சுமார் 11 ஆண்டுகளின் பின் தீவகத்தில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் முதலாவது எழுச்சிக்கூட்டம். இதில் சமகால நிலைபற்றி யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி, நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் உட்பட பலர் உரையாற்றினர்கள். கூட்டத்தை நிறைவு செய்து மக்களின் உணர்வு பெருக்கை கண்டு புல்லரித்த உடம்புகளாய் புறப்பட்டோம். ஊர்காவற்துறை சந்தியில் பாடசாலை மாணவர்களுடன் அளவளாவினோம். வரும்போது அவர்கள் எமது தேசியத் தலைவரின் படங்களை தாங்கி வந்திருந்தார்கள். அதை இராணுவத்தில் பறித்துள்ளனர். இதையறிந்த எமது நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா அவர்கள் இராணுவத்தினருடன் கதைத்த பொழுது அவர்கள் உங்களுடைய தலைவர் இந்தப் படங்களிலே வரிச்சீருடையில் காட்சி தருகிறார். எனவே அவற்றை அனுமதிக்க முடியாது. சாதாரண உடையில் உள்ள படங்களை கொண்டு வாருங்கள் என்றார். அங்கும்சிரமத்துடன் பொறுமை காத்தோம். அங்கிருந்து தொடர்ந்து நெருஞ்சிமுனையை வந்தடைந்

**வீரா**

தோம். அங்கு மக்களின் எழுச்சி எம்மை திகைப்படைய செய்தது. வாகனத்தோடு அப்படியே கட்டித் தழுவினார்கள்.

ஒவ்வொரு போராளிகளாக தோளில் தூக்கி ஆனந்தக் கூச்சலிட்டார்கள். பலர் சந்தோஷ மிகுதியால் ஓரமாக நின்று அழுதுகொண்டார்கள். உணர்வுகள் வழிந்து உருகும் நேரமது. எங்கும் ஆனந்த அலை பாய்ந்தது குளிர்பானங்கள் வழங்கினார்கள். அவர்களிடம் இருந்து விடைபெறுவதே பெரும் பாடாகிவிட்டது. நாங்கள் தொடர்ந்து வருவோம் இனி இங்கு தான் நிற்போம் எனும் கூற்றுக்களை சொல்லிச் சொல்லித்தான் விடை பெற்றோம். தொடர்ந்து புளியங்கூடல் சந்தியில் உள்ள மாவீரர் நினைவுத் தூபியில் சுடரேற்றி அப்படியே கரை றோட்டால் வேலணை துறையூரை வந்தடைந்தோம். துறையூர் இராணுவ முகாமிற்கும் துறையூர் ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கும் அருகே உள்ள சன சமூக நிலையத்தில் மாபெரும் எழுச்சிக் கூட்டம் மாலை 4.00 மணிக்கு துவங்கியது. அப்போது துறையூர் இராணுவ முகாமிலிருந்து இன்னும் நிறைய இராணுவத்தினர் சுற்றி முழு இடங்களிலும் ஆயுதங்களுடன் நடமாடிக்கொண்டு இருந்தனர். சுமார் 200 வரையான இராணுவத்தினர் அந்த இடங்களைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்தனர். எனினும் மக்களது எழுச்சி குன்றவில்லை. அதுவே எமக்கு பேரதிசயத்தை தந்தது. அங்கு நடைபெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சிவாஜிலிங்கம் அவர்கள் தனது உரையின்போது சற்று முன்னர் பாடாசாலை பிள்ளைகளிடம் தலைவரின் படத்தை இராணுவம் பறித்த நிகழ்வு நடந்ததை அந்த மக்களுக்கு சொல்லி இராணுவத்தை பார்த்து *தலைவரின் வரிபோட்ட படத்துக்கே உங்களுக்கு இவ்வளவு பயமெண்டா தலைவரின் பிள்ளைகள் வரியோட வாறநிலைமை இஞ்சை வந்திருக்குமெண்டா உங்களுக்கு எப்படி இருந்திருக்கும் என்றபோது மக்களின் ஆரவாரக்கூச்சலும் கரகோஷமும் உணர்வின் வெளிப்பாடுகளும் வானை முட்டின.*

இதில் விடயம் என்னவென்றால் நின்ற இராணுவத்தினரில் அந்த படங்களை பறித்த இராணுவமும் தலையை குனிந்து கொண்டு நின்றமை தான். தொடர்ந்து இக்கூட்டத்தில் இளம்பருதி யாழ் மாவட்ட மகளிர் அரசியல் பொறுப்பாளர் தமிழ்விழி. தீவக அரசியல் பொறுப்பாளர் செம்மணன் உட்பட பலர் உரையாற்றினர்

அன்று கூட்டம் முடிவுடன் இராணுவத்தினர் எம்மைவிட்டு சென்றனர். அன்றைய இரவை வேலணையிலேயே கழித்தோம்.

மறுநாள் காலை 18-06-2002 செவ்வாய்.

காலை உணவை முடித்துக்கொண்டு துறையூர் இராணுவ முகாமைத்தாண்டி கனகாம்பிகை மகாவித்தியாலய மாணவ மாணவிகளை எமது வாகனத்தில் ஏற்றியவாறு எமது பயணம் ஆரம்பித்தது. அப்படியே புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் அவர்களை இறக்கிவிட்டு கூட்டத்திற்கான ஒழுங்கு நடைபெறும் அதேவேளை நாங்கள் சுற்றி இடங்கள் பார்த்து வரப் புறப்பட்டோம். அப்படியே புங்குடுதீவு ராஜராஜேஸ்வர கண்ணகை அம்பாள் ஆலயத்திற்குச் சென்றோம். கடலோடு அண்மித்த அந்த ஆலயம் பாழடைந்த நிலையில் இருந்தது. அங்கே பூசையில் ஈடுபட்டு கொண்டிருந்த குருக்கள் ஐயாவுடன் உரையாடினோம். அவர் சொன்னார் இந்த கோயிலை சுத்தி பெரிய பண்ட் அடிக்கப்பட்டு இருந்தது. இப்ப ஒரு 5 நாளுக்கு முதல் தான் எல்லாம் இடிக்கப்பட்டு சீராக்கப்பட்டது என்றார். இருந்தும் அங்கே ஒரு ஆலமரம் பிரட்டப்பட்டு இருந்தது. தேர் முட்டியும் தேரும் சிதைக்கப்பட்டு இருந்தன. அவரிடம் கதைத்து விடைபெற்று புறப்படும்போதுதான் எங்களுடன் வந்த ஒருவர் சொன்னார் இவர்தான் முன்பு சிறிலங்கா கடற்படையிலும் விரோதிகளாலும் கற்பழித்து கொல்லப்பட்ட சாரதாம்பாள் எனும்பெண்மணியின் கணவர் என்றார். கலங்கிய விழிகளோடு அவரிடம் கையசைத்து எமது பயணம் தொடர்ந்தது..

(மறுவாரமும் வரும்)

# இன்னொரு போர்முகம்



அடுத்து தனா நெஞ்சில் கிளைமோரை கட்டி தன்னுடன் எதிரி தடைகளை அழித்து தாக்குதலுக்கு வழியெடுத்து கொடுக்கப் போகிறவள் வருகின்றாள். பெண்ணின் வரலாற்றுத் தடைகள் தகர்த்து வருவதால் இளமைக்கால இனிமை உணர்வுகளைச் சுமக்க வேண்டியவள் நெஞ்சு எப்படி உயர் சக்தி வெடிமருந்து நிரம்பிய உருக்கிரும்புப் பெட்டியை சுமக்க துணிந்தது. மின்சார பார்வை உடை யோர் என்றவளே எப்படி நேரோட்ட மின்சாரத்தை உருவாக்கி வெடிமருந்தை இயக்கி வைத்து பூகம்பத்தை பிறப்பிக்க துணிந்தாள் ''அண்ணா போயிற்று வாறன்'' ஈழமண்ணின் புலிமகளிவள் மரண தேவனுக்கு மாலையிட மூன்று சொற்களில் விடைபெற்று. புன் சிரிப்பு ஒன்றை உதிர்த்துப்போகுகின்றாள். அவளுடன் மங்கை சக்கையுடன் எப்படி இவர்களால் குதுகலிக்க முடிகின்றது. தன்னை அறிந்து தலைவனை உணர்ந்ததால் கால அழுத்தம் உருவாக்கிய சுதந்திர வைரங்கள் "ஏ காட்டுமரங்களே என்ன பார்த்துக்கொண்டு நிக்கின்றீர்கள் உங்களுக்கு... தெரியுமா? புரட்சிக்கவி பாரதிகூட நெட்டை மரங்களென நின்று புலம்பினார். பெட்டை புலம் பல் பிறருக்கு துணையாமோ'' என்று கூறினான். அவனைக் கூட்டிவந்து இங்கு ஒரு முறை காட்டுங்கள் எம் செல்வங்கள் எங்கே போகின்றார்கள் என்று கேட்டுச்சொல்லுங்கள் முடிந்தால் கால குகையினூடு பயணம் செய்து கம்பனையும் இளங்கோவையும் கூட்டிவந்து காவியங்கள் எழுதிக் கொட்டிவிடச் சொல்லுங்கள்.

அடுத்து நிவேதன், புலிக்குட்டி, இளங்கோ என வரிசையாக கரம்கொடுத்து மரண வாயிலுக்கு மங்கள தோரணம் கட்ட பாசக் கயிறைசாச்சர்களாக சுமந்து செல்லுகின்றார்கள் "நீங்கள் முன்னே செல்லுங்கள் நான் பின்னே வருகின்றேன்" எனும் அண்ணனின் வரலாற்று வரிகளுக்கு உருவம் கொடுக்கப்போகின்றார்கள்.

மாலை 6 மணி கொழும்பு 'றோட்'க்கு சற்றுத் தூரத்தில் குணமண்ணையுடன் வந்த இருபது பேரும் தாம் சுமந்து வந்த பாரப் பொதிகளை இவர்களிடம் கொடுத்து விடைபெறுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் சுமக்கும் பாரம் 40 கிலோக் கிராமைத்தாண்டிவிட்டது. பொதி செய்து கொடுத்துவிடப்பட்ட மஞ்சல் சோற்றையும், மான் இறைச்சிக் கறியையும் சுவைக்கின்றனர். அவர்களில் ஒருவன் "இறைச்சிக்கு கொஞ்சம் காரம் கூடியிருந்தால் இன்னும் நல்லாயிருந்திருக்கும்'' அதற்கு

**தூயவன்**

மற்றவன் "ஏன் உன் நாக்குக்கென்ன இரும்பு கவசம் போட்டிருக்கின்றாயா? '' என கேட்கின்றான்.

நன்றாக இருட்டிய பின்னர் அவதானமாக கொழும்பு றோட்டைக் கடக்கின்றார்கள். கும் இருட்டில் அவர்கள் வரிசையாகச் செல்லும் இலாவகத்தில் இருந்து இரவிற்கு அவர்கள் கண்கள் பழக்கப்பட்டு விட்டதை உணரமுடிகிறது. பின் புகையிரதப் பாதை ஒன்றைக் கடந்து தொடர்ந்து செல்கின்றார்கள்.

இரண்டு மணித்தியால நடையின் பின்னர் தண்ணீர் உள்ள சிறு குட்டையடியில் தங்கி ஓய்வெடுத்து மீண்டும் செல்கின்றார்கள். இப்பொழுது அருண் சொல்கிறான். "கவனமாகப் போகவேணும் கிட்ட ஒரு சிங்களக்கிராமம் வருகிறது.'' அவன் சொல்லி முடிக்கவும் அவர்களுக்கு இடப்பக்கமாக 50 மீற்றர் தொலைவில் டோச் வெளிச்சம் ஒன்று தெரிகின்றது. இவர்கள் தங்களைப் பற்றைகளோடு பற்றைகளாக உரு மறைத்துக் கொள்கின்றனர். வேட்டைக்கு வந்த சிங்கள ஊர்காவல் படையினர் இவர்களைத் தாண்டிச் செல்கின்றனர். மீண்டும் இவர்கள் பயணத்தை தொடர்கின்றனர். அளவுக்கு அதிகமான பாரத்தைச் சுமப்பதினாலும் அடிக்கடி குனிந்து வளைந்தும் இடங்களுக்கேற்ப செல்வ தாலும் களைப்பு இவர்களை விரைவாகவே ஆட்கொண்டு விட்டது. 11.30 மணியளவில் "உப்புக்கரைச்சி எனப்படும் சதுப்புநில வெட்டையை அடைகின்றனர். சுமார் 500 மீற்றர் விஸ்தீரணம் கொண்ட தங்கள் காலடித் தடங்களை அடையாளம் காண்பவர்கள் திசை திருப்பப் படுவதற்காக இவர்கள் பின்பக்கமாக நடக்கின்றார்கள். இதன் போது இவர்களில் இருவர் தவறவிடப் படுகின்றனர். அவர்களை மீண்டும் அழைத்து அப்பகுதியை கடக்க ஒரு மணித்தியாலம் எடுக்கின்றது. மீண்டும் காட்டினுள் ஏறியவர்கள் வனதேவதையின் மடியில் சற்று ஓய்வெடுக்கின்றனர். ஈவிரக்கம் பாக்காமல் தாக்கும் பனியரக்கன் அடாவடித்த னங்களை அலட்சியம் செய்கின்றனர். தொடர்ந்து சென்றவர்கள் சிங்கள கிராமம் ஒன்றின் ஓரம் வந்தடைகின்றனர். எல்லோரும் அமர்ந்து இருந்து அக்கிராமத்தை அவதானிக்கின்றனர். இதனைக் கடக்கும் போது நாய்கள் குலைக்கலாம் வேட்டைக்குப் புறப்பட்டவர்கள் திரும்பலாம் பட்டிமாடுகள் வெருளலாம் ஊர் உசாரடையலாம். செய்தி எதிரியின் செவிக்கு சேர்ந்து இவர்கள் திட்டம் பாழடையலாம். எனவே அவதானம் மிக அவசியமானதாகும்.

இரவுப் பார்வைச்சாதனம் மூலம் சில யார் தூரங்களாக "கிளியர் பண்ணி அவர்கள் பாதம் பதிக்கும் சத்தம் அவர்களுக்கே கேட்காது. அவதானத்துடன் அவ் ஊரை ஊடறுத்து அடுத்து இருந்த வனத்தை சரணடைகையில் காட்டு வீட்டுச் சேவல்கள் கரங்களால் தம் மார்பில் அடித்து கூவுகின்றன. அப்பகுதியில் நித்திரை செய்கின்றனர்.'' இனி என்ன இவர்களை நிரந்தரமாகவே எனக்குரியவர்கள் ஆக்கப்போகின் றேன் என்று நித்திரா தேவியின் இறுமாப்பு அவர்கள் அடித்து போடப்பட்டவர்கள் போல தோன்றுவதில் தெரிகிறது.

அதிகாலை விமானம் ஒன்றின் பேர்இரைச்சல் அக்கானகத்தில் பள்ளி யெழுச்சியாகின்றது. அவர்களில் ஒருவன் கேட்கின்றான் "இதுக்கு நேரேயா ஏயாபோட்'' இருக்கிறது. ஆம் என அருண் தலையாட்டுகிறான். தங்கள் காலைக் கடமைகளை முடித்து அவர்கள் மீண்டும் கூட காலை 7 மணியிருக்கும் இயற்கை வல்லரசு தன் பனிப்படைகளை இன்னும் முற்றாக "வாபஸ்'' பெற வில்லை. சிக்கிரட் குடிக்காமலே மாறிமாறி புகை விட்டு பம்பல் அடிக்கின்றனர். பயணக்களைப்பு கரும்புலி முகங்களில் பிரதி பலிப்பதற்கு பதிலாக மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரள்கின்றது. ஆனால் மற்றவர்களோ, மௌனவிரதத்தை கடுமையாக கடைப்பிடிக்க முனைகின்றனர். தேவை ஏற்படும் போது மட்டும் அத்திபூத்தாற் போல் ஒருசில வார்த்தைகளில் விடை பகர்கின்றனர். தங்கள் காலை ஆகாரத்தை கூடியிருந்து அருந்துகின்றனர். பிஸ்கட் பக்கட், சீஸ், பழடின் என்பவற்றை பிரித்து மாறி மாறி மற்றவர்களுக்கும் பரிமாறித்தாங்களும் உண்கின்றனர்...

(தொடரும்)

> ஈழமண்ணின் புலிமகள் மரண தேவனுக்கு மாலையிட மூன்று சொற்களில் விடைபெற்று. . புன்சிரிப்பு ஒன்றை உதிர்த்துப்போகின்றாள்.

# இப்பொழுது முடியாதென்றால் எப்பொழுதும் முடியாது



மொர்வின்

நாம் ஒரு செயலைச் செய்ய நினைத்தால் அதை இன்றே இப்பொழுதே செய்து விட வேண்டும். நாளை என்பது நீண்ட இடை வெளி யுடையது.

நமக்கு இருப்பது இன்று மட்டும்தான். இந்த நேரம் மட்டும்தான் நமது உபயோகத்திற்காகக் கிடைத்துள்ளது.

அதனால் அதை உடனடியாகப் பயன்படுத்திக் கொள்வது முக்கியம். நம்முடைய குறுகிய கால வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் விலைமதிப்பற்றது. காரியத்தைத் தள்ளிப் போட நினைத்தால்பின்னர் மிகத்தாமதமாகி விட்டதை உணர்ந்து வருந்த நேரிடும்.

நம்மால் ஏற்கெனவே கடந்து போன அருமையான சந்தர்ப்பத்தை மீண்டும் பிடிக்க முடியாது. இப்பொழுது முடியாது என்றால் எப்பொழுதும் முடியாதுதான். நாளை இதைச் செய்யலாம் என்பது ஆபத்தான சொல். காலம் நம்மைக் கண்டு சிரிக்கும்படி நடந்து கொள்ளக் கூடாது. காலத்தையும் வென்ற கர்ம வீரனாக - செயல் வீரனாக விளங்க வேண்டும்.

காலம் நமக்காகக் காத்துக்கொண்டிருக்காது. காலத்தைக் களிப்புடன் பயன் படுத்தினால் கண்ணியமாக வாழலாம்.

காலத்தின் நிலையை அறிந்துகொள். காலமே உன் உயிர். அதை வீணாக்குவது உன்னையே நீ கொலை செய்தது போலாகும்! என்கிறார் ஜேம்ஸ் ஆலன்.

செய்வதை இன்றே இப்பொழுதே செய்ய வேண்டும். வெற்றி நமக்காகத்தான் காத்துக்கொண்டிரு க்கிறது. நாம் மனத்தை ஒரு முகப்படுத்தி நடக்கத் தொடங்கினால், வாழ்க்கையின் குறிக்கோள் என்னவென்று உணர்ந்தால் நாம் நிச்சயமாக வெற்றியுடன் வாழ முடியும். இதை நன்கு உணர்ந்த அறிஞர் லாங்பெல்லோ கூறுகிறார். உன் சக்தியைக் கட்டுப்படுத்தி மனத்தை அடக்கியா ளவில்லையா னால் நீ போகும் வழியில் எப்போதும் ஒன்று காத்திருக்கிறது. உன்னைத் திசை திருப்ப எப்போதும் ஒரு தடை காத்திருக்கிறது. உன் னைத் தாமதிக்கச் செய்ய!

எப்போதும் ஏதாவதுதொரு எதிரி இருக்கிறான் உன்னைத் தாக்க! எப்போதும் காத்திருக்கிறது வேறு அவசியமற்ற பணி - உன்னுடைய நேரத்தைத் திருடிக் கொள்ள! ஏதாவது பலவீனம் காத்திருக்கிறது.. உனது சக்தியை அபகரித்துக் கொள்ள!

ஆகவே உனது குறிக்கோள் என்னவென்று தீர்மானம் செய்துகொள். வழியைத் தேர்ந்தெடு. ஒவ்வோர் எதிர்ப்புக்கும் எதிர்பாராத திருப்பத்திற்கும் தயாராக இரு. உறுதியுடன் நட உனது இலட்சியத்தை அடைவாய்! இவருடைய பொன்மொழியைக் கடைப்பிடித்தால் என்ன?





## சிறுகதை

# முகத்திரையிட்ட மெழுகுகள்

இரவு 9.00 மணியிருக்கும், வீட்டு முற்றத்தில் ஜிம்மி கலவரமடைந்து குரைக்கும் சத்தம் கேட்க நானும், அம்மா வும் திடுக்கிட்டு எழுந்திட்டம். ஜன்னல் பக்கமாக ஆரோ நடந்துவரும் ஓசை கேட்க எனக்கு நெஞ்சு படபடக்க பயமாயிருந்திச்சு அம்மாவ இறுக்கி கட்டிப் பிடிச்சிருந்தன். இந்த நேரத்தில அப்பாவு மில்ல, பாட்டியும் இன்று காலையிலதான் மாமா வீட்ட போனவ..?

ஜிம்மியின் குரல் சற்றுக் குறைந்து குழைவுச்சத்தம் போல சிணுங்கியது. கால்களின் மெல்லிய ஓசை பின்கதவுப்பக்கமாக கேட்க நான் அம்மாவ திரும்பிப் பாத்தன். முதலில் பயந்த வளாகக் காணப் பட்டவர் பின்னர் தெளிந்த சிந்தனையில் பின் கதவுப் பக்கமாக எழுந்து போனாள். நானும் பயத்தில எழும்பி அவ பின்னாலே போனேன். பின்கதவில யாரோ தட்டுமோசை கேட்க அம்மா அருகில் சென்று"ஆரது...? "

"அக்கா...நான்தான்..தம்பி சங்கர்"

அந்தக்குரலைக் கேட்டதும் அம்மா கதவ திறந்து பாத்தா, சங்கர் மாமாவும், இன்னொரு மாமாவும் வந்தார்கள். எனக்கு ஒரே சந்தோசம்.

"உள்ளவாவன்...என்ன?.. இண்டைக்கு இங்காலப்பக்கம்"

"நாங்கள்...அலுவலாக வந்தனா ங்கள்... அதுசரி ஏதும் சாப்பிட இருக்கோ.?".

"இருவாறன்" என அம்மா குசினிப் பக்கம் செல்ல மாமா உள்ளே வந்து "அடிசங் கீதாக் குட்டி"என என்னைத் தூக்கி கொஞ்சியபடி

"பிள்ள இன்னும் நித்தா கொள்ளேலயா..?"

"நாங்கள் இப்பதான் படுத்தனாங்க... ஜிம்மி பெரிசா குரைச்ச சத்தத்தில •நாங்க பயந்திட்டம்... ஆமிக்காரங்கள் வாறாங்களாக்குமெண்டு"

நான் எனக்கேற்பட்ட பயத்த அப்படியே ஒப்பு வித்தன். அவர் என்னைத் தூக்கி மடியில வைச்சிருந்தார். அவரோட அணைப்பில இருக்க இதமாத்தான் இருந் திச்சு. மாமா எப்பவாவது இங்காலப்பக்கம் வந்தால் வீட்ட வந்து சாப்பிட்டுத்தான் போவார். சங்கர் மாமா வெண்டால் எனக்கு நல்ல விருப்பம், அம்மாவின்ர கடைசித்தம்பி அம்மாவும் மாமாவில நல்ல பாசம். மாமா தமிழீழ விடுதலைக்காக போராடுறாராம் பகலில ஆமிக்காரங்கள் திரியிறதால இரவிலதான் இருந்திட்டு வருவார். அவர் வ்ரற நாளில எனக்கு எங்கள் நாட்டின் விடுதலை உணர்வு கலந்த வீரக்கதைகளும், மாவீரர் 'களின் தியாகங்கள் பற்றியும் இந்த மண்ணின் விடுதலைக்கு உயிராயுதமாகி உருகிய மெழுகுதீபங்களின் வீரக்கதை கள் பற்றியும் கூறுவார். அவை அப்படியே என்மனதில் உறைந்து கொள்ளும்.

மாமாவை சாப்பிட்டு முடிஞ்ச பின்னால மாமாவின்ர மடியில இருந்தபடி அவரை பார்த்துக் கேட்டன்.

"நீங்க ஏன்?.. பகலில வரக் கூடாது... பகலில வந்தா என்ர பிரன்ஸ் நிலாவுக்கு உங்கள அறிமுகப்படுத்தலாம் தானே" "மாமா.. ஆமிக்காரங்களெல்லாரையும் துரத்திப்போட்டு சங்கீதாக் குட்டி போன்றவர்களெல்லாம் எங்கட மண்ணில சுதந்திரமாக வாழும்போது அந்த சுதந்திர மண்ணில் பாக்கிற இடமெல் லாம் மாமாவை காண முடியும்"

"எப்ப மாமா திரத்துவிங்க... அவங்கள இங்கயில்லாம திரத்த வேணும். அப்பதான் எனக்கு சந்தோசம், இவங்க ளாலதான் நிலாவின்ர அம்மாவும், தம்பிப்பாப் பாவும் செத்துப்போனாங்க"

என்று சொல்லும்போதே என்ர கண்கள் கலங்கி விட்டதை மாமா பாத்து விட்டார். என்னை கொஞ்சிய படி அம்மாவை ஆச்சரியத் துடன் பார்த்தபோது "ஓமட தம்பி... சிவம்மாஸ்ரரின்ர மனுசி பிரசவ வேதனையில இரவு கத்தினா. இரவு கேவியோடர் போட்டதால வெளியில வெளிக்கிடேலாது. மாஸ்ரரும், பக்கத்து வீட்டுக்காரரையும் கூட்டிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதற்கு அனுமதிக்கும்படி ஆமிக் காம்பில போய் கதை்ச வர். அவங்கள் அனுமதி கொடுக்க வில்லை. காலையில கொண்டு போகும்படி கூறிவிட்டு அனுப்பி விட்டாங் 'கள்" எனக்கூறி எச்சிலால் அடித் தொண்டையை நனைத்துக் கொண்டு

"பிறகு மாஸ்ரர் வீட்டவர மனிசி குத்துவலி தாங்கேலாம குறைபிரசவத்தில செத்துப் போயிட்டா. அவற்ற மகள் தான் இவளோட படிக்கிற நிலா என்ற பிள்ள...பாவம்... அந்தப்பிள்ள குடுத்துவச்சது அவ்வளவுதான்.." என்று கூறியபடி கண்களில் கசிந்த கண்ணீரை துடைத்தாள். அவளின் குரல் தழுதழுத்தது அம்மாவை பாக்க பாவமாக இருந்தது.

"அப்படியில்லக்கா இவங்கட அரக்கத்தனத்தால எங்கட சந்ததியே

"மாமா செத்துப்போனா... சங்கீதா க்குட்டி அழுமா? " என்று கேட்டபோது என்னால் தாங்கவே முடியவில்லை உடனே வீரிட்டு அழுதேன். அவர் இதை எதிர்பார்க்க வேயில்ல உடனே

அழிஞ்சு போகுது. இவங்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்கத்தான் போறம் எங்கட மண்ணில நாங்கள் சுதந்திரமாக, கௌரவமாக வாழத்தான் போறன். நாங்கள் இல்லாட்டியும் எங்கட' சந்ததியாவது சுதந்திர காற்றை சுவாசிக்கத்தான் போகினம்" என உணர்ச்சிவசமாக பேசிய அவர் வார்த்தையில் ஒருவித தெளிவும் மாறுதலும் தென்பட்டது அவர் என்னைப் பார்த்து

"மாமா செத்துப்போனா... சங்கீதாக்குட்டி அழுமா?" என்று கேட்டபோது என்னால் தாங்கவே முடியவில்லை உடனே வீரிட்டு அழுதேன். அவர் இதை எதிர்பார்க்கவே யில்ல உடனே

"இல்ல... பிள்ளையில்ல...மாமா பவுடிக்கு சொன்னா... பிள்ள அழுகிறதா... மாமா பிள்ளைய விட்டிட்டு போகமாட்டன்..இங்க இங்க ..மாமாவைப்பார்.."என்று சிரிப்புக் காட்டியபடி பொக் கற்றுக்குள்ளிருந்த செப மாலையை எடுத்து" இது மாமாவுக்கு, பாதர் தந்தவர் இதக் கழுத்தில போட்டிருந்தா மாமா எப்பவும் பிள்ளை யோடயே இருப்பன் என்ன?" என ஒரு அழகான செப மாலையை கழுத்தில போட்டுவிட, அம்மா கோபத்துடன் "உனக்கு சின்னப் பிள்ளை களோட என்ன? கதைக்கிற தெண்டு தெரியாதா! அவள் உன்னில உ்யிரையே வச்சிருக்கிறாள் உன்னைப் பற்றி நான் குறையாச் சொன்னாலே அவளுக்குப் பிடிக்காது. உனக்கு விளையாட்டாயிருக்கு"

எனக்கூறியபோது வீதிப் பக்கமாக இரைச்சல் கேட்டவுடன் மாமா வந்தவர் யன்னல் பக்கமாக எட்டிப்பாத்தபடி "மச்சான்... ஆமிக்காரங்கள் ரோந்து போறாங்கள்... நாங்கள் வெளிக்கிடுவம்" எனக் கறுத்தபாக் ஒன்றை தோளில் கொழுவியபடி மாமாவை பார்த்தார்.

"அப்ப அக்கா நான் வாறன்.. சங்கீதாக்குட்டி மாமா போட்டு வாறன் என்ன" "ஓம்... பிறகு கட்டாயம் வர வேணும்"

மாமா என்ர கன்னத்தில முத்தமிட்டார், நானும் அவற்ற கன்னத்தில முத்தமிட்டபோது அந்த கறுப்பு மச்சம் தெளிவாகத் தெரிந்தது கன்னத்துக்கும் கண்ணுக்கு மிடையில் வடிவான பெரிய மச்சம் இருக்கு. அது மாமாவுக்கு நல்ல வடிவு அது அதிஸ்ட மச்சமாம் பாட்டி தன்ர மகனைப்பற்றி பெருமையாக சொல்லுவா நானும் அதிலதான் முத்தமிடுகிற நான். அம்மா பின்கதவ திறந்தபடி

"தம்பி கவனமாப் போங்க... இடையில இங்காலப்பக்கம் வந்தா வந்துட்டுப்போ.. தம்பி கவனம்... உவங்கள் எங்கயும் பதுங்கியிருப்பாங்கள் ... பாத்துப் போங்க" அம்மாவின் கரிசனை அவள் வார்த்தையில் தெரிந்தது. அவள் முகத்தைப் பார்த்தேன் இவ்வளவு நேரமும் இருந்த பிரகாசம் இளையோடி மறைந்து போனது.

அன்று மதியம் பாடசாலை முடிந்ததும் பக்கத்து வீட்டு ரீச்சருடன் வந்தன். மற்ற நாட்களில அம்மா இல்லாட்டி அப்பா வந்து கூட்டிப் போவார். அவர்கள் வராட்டி நானும் நிலாவும் ரீச்சரோடதான் போவம். அண்டைக்கும் அப்படித்தான் நாங்கள் பள்ளிக்கூடம் விட்டு வந்து கொண்டிருந்தபோது ஆமிக் காரங்கள் ரோந்து போனாங் கள். ஆரும் பெரிய அதிகாரி ஜீப்பில போறதெண்டால் ஆமிக்காரங்கள் வீதியால ரோந்து போ்வாங்கள். அடிக் கடி ஒரு ஜீப்பில் கண்ணாடி போட்ட ஆமிக்காரன் தான் போவான். எனக்கு அவன பாக்க பயம் வரும். அதோட நிலாவின்ர அம்மாவும் தம்பிப்பாப்பாவும் சாகிறத்துக்கு அவன்தான் காரண மாம்.

நாங்கள் வீதிக்கு கரையால போனம் எங்க ளுக்குப் பின்னால ஆமிக்காரங்கள் வந்துகொண்டிருந்தார்கள். அப்பதான் பாத்தன் ஒருவர் எதிர்ப்பக்கமாகப் பாத்தவாறு நின்றார். தூரத்தில பாத்த போது சங்கர்மாமாவின்ர தோற்றம்,வடிவாப்பாத்தன் சங்கர் மாமாவேதான் அவர் எதேச்சையா வந்தபோது இவங்கள் வருவாங்களென்று எதிர்பாக்கேல போல அவற்ற நிலையை பாத்தபோது தெரிஞ்சுது. எனக்கு என்ன? செய்யிறதெண்டு தெரியல ஆமிக்காரன் கிட்டகிட்ட வாறான். மாமாவும் என்ன செய்வதென்று தெரியாத நிலையில் நிக்கிறார் போல. ஆமிக்காரன் ஒவ்வொருத்தரா விசாரித்து செக்பண்ணிக் கொண்டு வாறான். அப்படி யென்றால் மாமா ஆமியிட்ட பிடிபடப் போறார். இல்ல அவர் பிடிபடக் கூடாது. என்மனதில் ஏதோவொரு வைராக்கியம்.

ரீச்சற்ற கையை விட்டுட்டு மாமாவை நோக்கி ஓடிச்சென்று அவரது கையை பிடித்தபோது திடுக்கிட்டுத் திரும்பியவர் என்னைப் பார்த்தவுடன் சுயநினைவுக்கு வந்தவராக "சங்கீதாக்குட்டி... எங்க பள்ளிக்கூடம் போட்டா வாறியள்" எனக்கூறி என்னைத் தூக்கினார். எனது புத்தகப்பையை அவரது தோளில் கொழுவிவிட்டேன். ஆமிக்காரன் எமக்கு அருகில் வந்து மாமாவை பார்த்து.

"ஏய்... எங்க போறது"



"வீட்டபோறம்... என்ன கூட்டிக் கொண்டு போக வந்தவர்"

என முந்திரிக்கொட்டை மாதிரி முந்திக்கொண்டு பதில் சொன்னதும் அவன் என் கன்னத்தைக் கிள்ளி விட்டு "சரிசரி.. போங்க..போங்க.." என்று கூறினான்.மாமாவுக்கு நான் கூறிய பதிலில் ஆச்சரியமாக இருந்திருக்கும் எனது புத்தி சாலித்தனத்தை யெண்ணி என்னை மனதுக்குள் பாராட்டியிருப்பார் என நினைக்கிறேன். என்னுடன் வீடுவரை வந்துவிட்டு அவரது நண்பர் வர சென்றுவிட்டார்.

வழக்கம் போல பாடசாலை முடிவடைந்ததும் நானும் அம்மாவும் வந்து கொண்டிருந்தம். எதிரில அம்மாவுடன் படித்த நண்பியொருவர் வந்து கொண்டிருந்தார். அம்மா அவருடன் கதைத்துக்கொண்டிருந்த போது எங்களைத்தாண்டி அந்த ஜீப் போனது. அதில் அந்த கறுத்தக் கண்ணாடி யணிந்த அதிகாரியும், வேறு ஆமிக்காரன்களும் சுற்று முற்றும் பாத்தபடி சென்றனர். எனக்கு அவனைக் காணும் போதெல்லாம் நிலாவின்ர அம்மாவின் ஞாபகம்தான் வரும்.

**மருதநிலா**

"டமார்" என்ற வெடிச்சத்தம் பெரிசாக் கேட்டதும் அம்மா வும்,நானும் நிலத்தில விழுந்து படுத்திட்டம். அம்மா என்னை அணைத்தபடியிருந்தா எங்களைப் போலவே எல்லோரும் விழுந்து படுத்திட்டினம். சற்று தூரத்தில ஒரே புகை மண்டலம். திடீரென எங்கிருந்தோ ஜீப்புகளிலும், றக்குகளிலும் ஆமிக்காரங்கள் வந்து இறங்கி அவ்விடத்தைச் சுற்றி நின்றனர். எனக்கு பயமாயிருந்திச்சு நெஞ்சில ஏதோ செய்வது போல இருந்திச்சு. எங்கள சுத்தியெல்லாம் ஆமிக் காரங்கள். அம்மா பயத்தில உறைந்து போனாள். பருந்திடம் காக்கும் கோழி போல அவள் அணைப்பிற்குள் இருந்தேன்.


எல்லோரையும் வரிசையாகச் செல்லும்படி ஆமிக்காரங்கள் கூற அம்மாவும் பேசுக்குள் இருந்த அடையாள அட்டையை கையில் எடுத்துக்கொண்டு வரிசை யாகச் சென்றோம். அந்த நீண்ட வரிசை மெல்ல மெல்ல நகர்ந்தது.

குண்டு வெடிச்ச இடத்துக்குக் கிட்ட வந்தபோது அந்த ஜீப் சிதைந்து கிடந்தது. அதற்குள் பித்தெறியப்பட்ட நிலையில் அந்த அதிகாரியும், ஆமிக் காரன்களின் உடல்களும் அவ் விடத்தைச் சுற்றி இரத்தமும் சதைச்சிதறல் களும். எம்முடன் வரிசையில் வந்தவர்கள் தமக் கிடையே இரகசியமாக "கரும்புலி தாக்குதல்" போல என முணு முணுப்பது தெளிவாகக் கேட்டது.

நாங்கள் மெல்ல மெல்ல அவ் விடத்தை நெருங்கியபோது ஒரு தலையைச் சுற்றி அவங்கள் நோட்டமிடுவது தெரிந்தது பின்னர்அவர்கள் அவ் விடத்தை விட்டு நகர நாங்க ளும் அவ்விடத் துக்கு அருகில் சென்றபோது எனக்கு அதை பாக்கவேணும் போலக் கிடந்தாலும் பயத்தில திரும்பி வேறுபக்கம் பார்த்தேன். அம்மா அதைப் பார்ப்பது தெரிந்தது. சற்றுநேரத்தில் அம்மாவின் உதட்டில் "தம்பி..." என்ற வார்த்தை எழுந்து மறைந்து போக நான் உடனே திரும்பிப் பார்த்தேன். கழுத்துக்குக் கீழே துண்டித்து சிதைந்த நிலையில் சங்கர் மாமாவின் தலை அவர் கன்னத்தில் அந்த கறுத்த மச்சம் சிதையாதபடி. எனக்கு உடம் பெல்லாம் விறுவிறுத்தது. உடல் நடுங்கியது ஐயோ.! மாமா என்ர மாமா... என்னால தாங்க முடியவில்லை வீரிட்டு அழ 'வேணும் போலிருந்தது. தொண்டை காய்ந்து நா வறண்டுபோக சத்தம் போட முடியவில்லை. ஆனால் நான் அழவில்லை. அம்மா என் முகத்தை தன் கழுத்துடன் அழுத்திக் கொண்டாள். நான் அழுது தன்னைக் காட்டிக் கொடுத்து விடுவேனென்றோ? அல்லது மாமாவின் சிதைந்த முகத்தைக்கண்டு நான் ஏங்கி விடவேன்னென்றோ?

எனக்குத் தெரியவில்லை. ஆனால் அம்மாவால் எப்படி தாங்கிக்கொள்ள முடிந்தது. தன் அன்புத்தம்பியின் நிலையைக் கண்டு அவ கலங்கிய மாதிரி தெரியவில்லையே ஒருவேளை அம்மாவின் உள்மனத்தினை யார்?தான் அறியமுடியும். என் கழுத்தைத் தடவிப் பார்த்தேன் மாமா தந்த செபமாலை தட்டுப்பட்டது. மாமா சாகவில்லை என்னுடன் இருக் 'கிறார். இன்னும் எமது சுதந்திரத்தின் விடிவிற்கு மாமாக்களின் வெப்ப மூச்சுக் காற்றலை எழும் அழிவு செய்யும் அரக்கர்களைச் சுட்டெரிக்கும்.அப்பொழுது சங்கர் மாமாவை சுதந்திர மண்ணில பாக்கிற இடமெல் லாம் காணுவேன். மாமா கூறிய வார்த்தைகளின் உண்மை அப்பொழுது மனதில் நிழலாடியது.



நூல்: முல்லைமணியின் வன்னியியற் சிந்தனை
வெளியீடு: பிரியா பிரசுரம் எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம், மட்டக்களப்பு
விலை:150 ரூபா

கிளைநதிகள் எவ்வாறு ஒரு மகாநதியை வளப்படுத்து கிறதோ அவ்வாறே பிரதேச இலக்கிய வளர்ச்சி தேசிய இலக்கியத்தை வளப்படுத்தும் என்பது யதார்த்த ரீதியான உண்மையாகும். அந்தவகையில் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் வெளியே உள்ள மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு. மலையகம், மன்னார் முதலிய பிரதேசங்க ளில் இலக்கிய வளர்ச்சியை மதிப்பீடு செய்வதும் ஆவணப் பதிவாக்குவதும் அவசிய மாகின்றது.

வவுனியாவைப் பொறுத்தவரை ஓ.கே.குணநாதனின் 'வவுனியாவும் இலக்கிய வளச்சியும்' என்ற நூல் சில அடிப்படைத்தரவுகளைத் தருகின்றது.

தற்போது முல்லைமணியின் நூலான 'வன்னியியற் சிந்தனை' அம் முயற்சியில் அடியெடுத்து வைக்கிறது. 'வன்னியியல்' என்று சொல்லு மளவிற்கு வன்னிப் பிரதேசம் முக்கி யத்துவம் பெற்றுள்ளதா என்ற கேள்வியைக் கேட்டு அதற்கான பதிலையும் தரு கிறார். இந் நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ள கலாநிதி செ.யோகராசா,

ஒரு பிரதேசத்தின் தனித்துவம் வெளிப்பட வேண்டு மாயின் அப்பிரதேசத்தின் இலக்கிய ங்கள் நுணுகி ஆராயப்பட வேண்டும் என்பதில் கருத்துவேற்றுமை இருக்க முடியாது. அந்த வகையில் முல்லைமணியின் இந் நூல் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்நூலில் வன்னிப்பிரதேசம் தொடர்பான 12 கட்டுரைகள் இடம் பெறுகின்றன. வன்னிப் பிரதேச இலக்கியம், முல்லை மாவட்ட நாட்டார் இலக்கியம், பண்டாரவன்னி யன், கயிலை வன்னியன், முள்ளி யவளை வன்னியர்கள் வன்னி நாட்டின் கறைபடிந்த வரலாற்று நாயகர்கள், கோவலன் கூத்து, பாரம்பரியவாத்தியக்கருவி பறை, வன்னிப்பிரதேச நாவல் இலக்கிய முன்னோடி கைலாசப்பிள்ளை, வ.சு.இராசஜயனார், வன்னியூர்க் கவிராயர், எழுத்துலக அனுபவங் கள்.

இவற்றை நாம் பின்வருமாறு வகுக்கலாம்.
1.வன்னியின் வரலாற்று நாயகர்கள்.
2.வன்னியின் கலை இலக்கியங்கள்/ நாட்டார் இலக்கியங்கள்.
3.வன்னிப்பிரதேசத்தின் எழுத்துலக முன்னோடிகள்.

இம்மூன்று வகைக்கட்டுரையின் கோவையில் வன்னியியல் என்ற தலைப்புக்கான ஒத்திசைவை நாம் காண்கிறோம். இவற்றினூடாக வன்னிப் பிரதேசத்தின் ஆத்மாவை நாம் தரிசிக்க முடிகிறது.

பண்டாரவன்னியன்(முல்லைமணி) நிலக்கிளி (அ.பாலமனோகரன்) ஆகியவற்றுக்கு அப்பாலும் வன்னி யின் இலக்கிய வேர்கள் ஓடியிருக் கின்றன. ஒருவகையில் பார்க்கும் போது வன்னிப்பிரதேசத்தின் ஒரு வெட்டுமுகத் தோற்றத்தை இந்நூல் தருகிறது எனலாம்.

கட்டுரைகளின் பொதுவான சில பண்புகளை நோக்கும் போது!
1. அந்நியர்களுக்கெதிராகக் குரல்கொடுத்த குறுநில மன்னர் களான வன்னியர்களின் சுதந்திர உணர்வலைகளை வெளிப் படுத்துதல்.
2.வன்னி இலக்கியத்தின் பல்வேறு கூறுகளான காப்பியம், பிரபந்தம், கவிதை, சிறுகதை, நாவல், நாடகம், இலக்கியக் கட்டுரைகள் முதலிய வற்றை அறிமுகப்படுத்தல்.
3.வன்னிப் பிரதேசத்தின் முல்லை மோடிக்கூத்து, பறைமேளம் முதலிய நாட்டார் கலைகளை வெளிப்படுத்தல் என்பன அழுத்தம் பெறுவதைக் காணலாம்.

ஒவ்வொரு கட்டுரையிலும் ஏராளமான தரவுகளை நூலாசிரியர் தந்திருப்பது பாராட்டிற்குரியது. ஒரு உதாரணமாகக் கூறுவதானால் 1970 முதல் வெளிவந்துள்ள சுமார் 20 கவிதை நூல்களின் விபரங்களை நூலாசிரியர் தந்துள்ளார். இவை பூற்றி பிறர் அறிந்திருக்கமாட்டார் கள். அவ்வாறே சுமார் 20ற்கு மேற்பட்ட நாவல்களும் வெளிவந்து ள்ளன. அவற்றுள் முல்லைமணியின் 'மல்லிகைவனம்' நாவல் இந்தியா வில் சோமுப்புத்தக நிலையப் பிரசுரமாக 1985இல் வெளி வந்துள்ளது என்ற தகவலும் கவனத்தில் கொள்ளத்தக்கது.


வன்னியர்கள் பற்றிய ஆய்வு தொடர்பாக நுனிப்புல் மேயாது ஆழமான நோக்கில் எழுதப்பட்டி ருப்பதும், மிகையான கூற்றுக்கள் இடம் பெறாமல் இருப்பதும் நூலாசிரியரின் நேர்மையான மதிப்பீட்டுக்குச் சான்று பகர்கின்றன. அந்த வகையில் 'முல்லை மாவட்ட நாட்டார் இலக்கியம்' என்ற கட்டுரை சிறப்பாக அமைந்திருப்பதை இங்கு குறிப்பிடலாம்... இக்கட்டுரை ஆய்வாளர்களுக்குப் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

வன்னியின் சுதந்திரத்துக்காகக் குரல் கொடுத்த பண்டார வன்னியன் கயிலைவன்னியன், முள்ளியவளை வன்னியர்கள் பற்றிய கட்டுரைகளு க்கு நிறைவான சான்றாதாரங்களை நூலாசிரியர் தருகின்றார். காக்கை வன்னியன் என்னும் பெயரில் ஒரு வன்னியன் வரலாற்றில் இல்லை என நூலாசிரியர் சுட்டிக் காட்டுகின்றார்.

கூத்து என்ற கலைவடிவம் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மாவட்டங்களில் பிரபலம் பெற்றுள்ளது. இவை வெவ்வேறு பாணியில் அமைந்தவை. இவ்வாறே வன்னியில் ஆடப்படும் கூத்தும் ஒரு தனிப்பாணியில் அமைந்துள்ளது. இதனை முல்லை மோடிக்கூத்து என முல்லைமணி கூறுகின்றார். மட்டக்களப்புக் கூத்துக்களை வடமோடி,தென்மோடி என அழைப்பது போலவே முல்லைத்தீவுக் கூத்துக்களை முல்லைமோடிக் கூத்து என அழைப்பது பொருத்தமானதே.

கோவலன் கூத்து கண்ணகை அம்மன் வழிபாட்டுடனும் காத்தான் கூத்து (சிந்துநடைக்கூத்து) முத்து மாரி அம்மன் வழிபாட்டுடனும் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது என்பது புதிய செய்தியாகும் முல்லை மோடிக்கூத்துப் பற்றி மிக விரிவாக நூலாசிரியர் எழுதியுள்ளார். கிழக் கிலங்கையில் கண்ணகி வழிபாடு ஆழமாக வேரூன்றிய போதும் கண்ணகிகூத்து ஆடப் படுவதில்லை. 'கண்ணகி வழக்குரை' என்றும் மட்டக்களப்பில் அழைக்கப்படும். காப்பியம் பிற இடங்களில் கோவலனார் கதை, சிலம்பு கூறல் என்னும் பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இக்கதையே முல்லைமோடிக் கோவலன் கூத்திலும் இடம் பெறுகின்றது.

பறைமேளம் பற்றிய விரிவான ஆய்வை நூலாசிரியர் எமக்குத் தருகிறார். பறைமேளக்கலை கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்றுள்ளது. சங்க காலத்தில் பறை என்றே பல்வகைத்தோல் வாத்தியங்கள் அழைக்கப்பட்டன. தமிழ் நாட்டில் மட்டுமல்லாது உலகின் பல பாகங்களிலும் பறை என்னும் வாத்தியம் பயன்படுத்தப்பட்டதை நூலாசிரியர் சுட்டிக் காட்டுகின்றார்.



இதில் இடம்பெறும் ஆய்வுத் தகவல்கள் விரிவாக உள்ளன.

இலக்கிய முனைப்புகள் தொடர்பில் ஒரு முக்கியமான தகவலை நூலாசிரியர் தருகிறார். "இலங்கைத்தீவு முழுவதையும் சமூக பண்பாட்டுப் பிரதேசங்களாக வகுக்கும் பணியில் ஈடுபட்ட BRYCE RAYAN என்னும் சமூக வியலாளன் சமூகக் குழுக்கள் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணத் தீபகற்பம், கிழக்கிலங்கை, வன்னிப்பகுதி என பிரித்துள்ளார். கொழும்பு இதில் இடம்பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது. தற்போது தென்னிலங்கை, மலைய கம் என்ற பிரிவுகளையும் நாம் சேர்த்துக் கொள்ளலாம்.

திருகோணமலையின் முதல் நாவல் மோகனாங்கி 1895 (தி.த.சரவணமுத்துப்பிள்ளை) மட்டக்களப்பின் முதல் நாவல் அரங்கநாயகி 1935 (ஏரம்பமூர்த்தி) வன்னியின் முதல் நாவல் இன்பவதி 1902. பிரசுரம் 1942 (கயிலா சபிள்ளை)


ஆனால் இவற்றுள் 'இன்பவதி' நாவல் மட்டுமே பிரதேச உணர்வு டன் எழுதப்பட்டது என்பது கவனத் திற்குரியது.

வன்னியின் நாவல் இலக்கிய முன்னோடி த.கயிலாசபிள்ளை, தனித்தமிழ் வல்ல மூதறிஞர் வ.சு.இராச ஐயனார், வன்னியூர்க் கவிராயர் ஆகியோரைப்பற்றி ஆதார பூர்வமான தகவல்களுடன் காய்தல் உவத்தல் இன்றி எழுதப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. இவ்வாறே வன்னியில் எழுந்த மண்வாசனை வீசும் சிறுகதைகள் பற்றியும் நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

நூலாசிரியரின் "எழுத்துலக அனுபவங்கள்" இந்நூலின் நிறைவு அத்தியாயமாக இடம்பெறுகின்றது. நாவல், நாடகம், சிறுகதை, கட்டுரை, பாடநூல், பக்திப் பாமாலை என்னும் பல்வேறு துறைகளில் இதுவரை 11நூல்களை எழுதியவர். இந்நூல் கள் மூலம் பல இலக்கிய விருது களைப் பெற்றவர். இத்தகைய ஆய்வுநூலை எழுதுவதற்கு எல்லா வகையிலும் தகுதி பெற்றவா என்ப பதை நிறைவு அத்தியாயம் எடுத்துக்காட்டுகின்றது.

அன்புமணி

## நீர்த்தாவரம்




பரிதிச்சக்கரம் எரிந்தழியும் ஒரு அந்திப் பொழுதில்
நீர்க் கரையோரம் அமர்ந்தேன்.
எப்போது வந்தாய் என காற்று தலையைக் கோதி
நீரின் மேல் நடக்கும்.
மெல்லிய சலசலப்போடு குறுகுறுக்கும்
சிறு பெண்ணைப்போல
சிணுங்கிக்கொள்ளும் நீர்க்கோளம்.
காற்றின் திசையில் அல்லுப்பட்டு மிதக்கும்
அன்றொருநாள் பார்த்த
வேரறுந்த சிறு தாவரம்.
கேள்விக்குறிகள் புழுக்களாய் மாறி
அரிக்கத் தொடங்கும் மனச் சுவரெங்கும்.

அண்ணாந்து பார்த்தேன். வானம் இருண்டது.
தொடுவானமொன்றில் சுருண்டும் வளைந்தும்
நீண்டும் வந்த கோடுகள்
நீர்க்காகங்களாய் உதிர்ந்தன.பரந்த நீர்வெளியில்.
சடுதியாய் கலங்கும் தெளிந்திருந்த நீர்.
ஏதோ சத்தம் கேட்டோ உணர்ந்தோ
காதுகளைக் கூர்மையாக்கி விறைத்தெழும்பி
நின்றது பக்கத்தில் படுத்திருந்த நாய்.

மீண்டும் உன்னிப்பாய் நோக்கினேன்.
தாழ்ந்தும் மிதந்தும் ஆழமாய் வேர்விட
தரையைத் தேடியது தாவரம்.

ப்ரியா ஜெயக்குமார்

## மாத்திரைக் கதைகள்



### மதிப்பு

'வாழ்ந்தால் குயிலைப்போல வாழவேண்டும்' என்றது பட்டாம்பூச்சி. இன்னொரு பட்டாம்பூச்சி கேட்டது:-
'ஏன்?' அதோபார்.... மா மரத்தில் பாடுகிறது குயில்.
மா மரத்துக்காகத்தான் அது பாடுகிறது. பின்பு மாங்கனியைச் சாப்பிடுகிறது, பறக்கிறது.'
'புரியவில்லையே...'
'யாருக்கும் கடமைப்படக்கூடாது. கொடுத்துப் பெறு. தங்கி வாழாதே.'
'ஓ! இப்போது புரிகிறது!' என்றது இரண்டாவது பட்டாம்பூச்சி.
தனக்குள்ளேயே அது சொல்லிக் கொண்டது:-
மரத்துக்கு ஒரு பாட்டு
குயிலுக்கு ஒரு பழம்.'



### இரவல்

கிழட்டு அணில் மற்ற அணிலைப் பார்த்து 'அடுத்தவர்களின் உழைப் பில் வாழ்வதே சிலருக்கு வாழ்க்கை யாகி விட்டது பார்...' என்றது.
'ஏன் அப்படிச் சொல்கிறாய்?' என்று கேட்டது இரண்டாம் அணில்.
கிழட்டு அணில் சொன்னது:-
'ஓணானைப் பார்த்தேன்.... யாரோ ஒரு மனிதன் புதுவீடு கட்டிக் கொண்டிருக்கிறானாம்... பக்க த்தில் குப்பைமேட்டில் ஒரு பல்லி இருந்ததாம்... அது ஓணானிடம் ஏதோ சொன்னதாம்.
'என்னவாம்?' என்றது இரண்டாம் அணில். கிழட்டு அணில் சொன்னது:-
'எனக்குத்தான் வீடு கட்டுகிறான் என்றதாம் பல்லி.

கவிஞர். காசிஆனந்தன்

# A. BAUR & CO., LTD.

இதோ

## கிளிநொச்சி, முல்லைத்தீவு வாழ் மக்களுக்கு மகிழ்ச்சிகரமான செய்தி.



ஏ பவர் அன் கொம்பனியினரின் அங்கீகரிக்கப்பட்ட
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட
ஏக விநியோகஸ்தர்களான

"லலிதா பல்வகை வாணிப நிலையத்தினரால் உரவகை, கிருமிநாசினி, தெளிகருவி (SPRAYERS) மொத்தமாகவும் சில்லறையாகவும் விவசாயிகளுக்கு ஏற்ற கலப்படமற்ற பொருட்கள் நேரடியாக விற்பனைக்குண்டு.

மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, பிரதேசங்களுக்கு 30 வருடங்களாக எவரெடி பற்றரி ஏக விநியோகஸ்தர்களாக சேவையாற்றி வந்த இந் நிறுவனத்தினர் மீண்டும் சாவகச்சேரி உட்பட்ட இப்பிரதேசங்களுக்கான எவரெடி பற்றரி விநியோகத்தினை ஆரம்பித்துள்ளனர்.

+++++++
++++++++++

# மகாவலி மரைன் சிமெந்து

மற்றுமொரு நற்செய்தி



- தன்னம்பிக்கையே வாழ்க்கையின் இரகசியம்.
- மகாவலி மரைன் சிமெந்து. கட்டடத்தின் உறுதியின் இரகசியம்.
- சிறந்த தரத்தின் சின்னம் மகாவலி மரைன் சிமெந்து.

மகாவலி மரைன் சிமெந்து நிறுவனத்தினர்களான அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர் லலிதா பல்வகை வாணிப நிலையத்தினரால் விரைவில், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ் மக்களின் கரங்களில் புழக்கத்திற்கு வரவுள்ளது.




*விரைவில் உங்கள் கைகளில்*

**LTC**

*C. Sivasamy & Company*

For Kilinochchi Sales
Person to be details contocted in Colombo
Mr.Sivasamy Selvakumar
Lalitha Trading Company
A.G.3,Sanchi Arachchi Garden,
Colombo -12,
Sri Lanka.
**Phone : (941)449371, 324615**
**Fax : 470187**
**E-Mail:ssie@itmin.com**

**எல்.ரி.சி.**

மேலதிக விபரங்களுக்கு கிளிநொச்சியில் தொடர்பு கொள்ள வேண்டியவர்:-
திரு.சிவசாமி சிவகுமார்,
லலிதா பல்வகை வாணிப நிலையம்,
பரவிப்பாஞ்சான் (சிவசுந்தரம்வீதி),
கிளிநொச்சி.

(சி.6931)



# இந்தியா; தீராதகாய்ச்சலும், தணியாதவலியும்

முடிவேயில்லாமற் தொடரும் இந்திய-பாகிஸ்தான் பிரச்சினையில் இப்போது மீண்டுமோர் உச்சநெருக்கடி ஏற்பட்டுத் தணிந்திருக்கிறது. இரு நாடுகளுக்குமிடையில் இம்முறை யுத்தம் மூளக்கூடுமோ என்ற அச்சம் எங்கும் மேலோங்கியிருந்தது. ஆனால் இந்திய-பாகிஸ்தான் யுத்தம் மூளாது. அதை மேற்குலகம் விரும்பவுமில்லை.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்த பின் பகைமை அல்லது முறுகல்நிலை. என்பதே இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு. எதற்கெடுத்தாலும் ஒன்றையொன்று குற்றம் சாட்டுவதும் பகைமை கொள்வதுமே வழமையாகி விட்டது. எல்லைப் பிரச்சினை தொடக்கம் உள்நாட்டுத் தலையீடுகள் வரையில் இருநாடுகளுக்குமிடையில் ஏராளம் பிரச்சினைகள்.

உண்மையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு மிடையிலான பிரச்சினை என்பது மேற்குலகுக்கும் இந்தியாவுக்குமான பிரச்சினையாகவே இருந்தது. இந்தியாவின் துரிதமான விரிந்த வளர்ச்சியையும் ஸ்திரத் தன்மையையும் மேற்குலகம் விரும்பவில்லை. இந்தியாவின் வளர்ச்சி என்பது மேற்குலகின் தென்னாசியப் பிராந்தியம் மீதானபிடிக்கு ஏற்படும் பெரும் அச்சுறுத்தலாகவே இருந்தது. இதனை நீண்ட காலமாகவே மேற்குலகம் உணர்ந்து செயல்பட்டு வந்தது. தென்னாசியப் பிராந்தியம் மீதான தனது ஆதிக்கத்தையும் பிடியையும் மேற்குலகம் நிலைநிறுத்த வேண்டுமெனில் இந்தியா பலவீனப் பட்டிருக்க வேண்டும். இந்தியாவைப் பலவீனப் படுத்தவே மேற்கு பாகிஸ்தானைப் பயன்படுத்தியது.

இந்தியாவின் துரித அபிவிருத்தி யென்பது மேற்குலகின் கொள்கை வகுப்பிலும் செயற்பாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. இந்தியாவின் புதிய ஆராய்ச்சிகளும், கண்டுபிடிப்புகளும், உற்பத்தியும் அதனை புதிய ஸ்தானத்துக்கு உயர்த்தியுள்ளன. ஒரு பக்கம் கடுமையான விமர்சனங்களுக்குள்ளான பொருளாதாரக் கொள்கையை இந்தியா கடைப் பிடித்தாலும் அதன் மறு பக்கத்தில் அது தன்னை வலுவாக ஸ்தாபித்துக் கொள்ளும் தன்மையைப் பெற்றிருக்கிறது.

ஏறக்குறைய நூறு கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்தியா ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஏழை ஜென்ம பூமி. இன்றோ அது உலகம் வியக்கும் நிலைக்கு பொருளாதாரத் திலும் அபிவிருத்தியிலும் மிகவளர்ந்த தேசம். இந்த வளர்ச்சி இந்தியர்களின் தேசப்க்திக் கூடாகவே எட்டப்பட்டிருக்கிறது.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது ஊட்டப்பட்ட இந்தத் தேசபக்தி பின்பு இந்தியாவைக் கட்டியெழுப்ப பயன்பட்டிருக்கிறது. மிகவும் பரந்த தேசமாகவும் பல இன, மத பிரிவுகளையும் கொண்ட இந்தியாவை இந்தத் தேசபக்தியே பெருமளவுக்கு இணைத்தும் வைத்திருக்கிறது. இந்த இணைப்புக்குள் எண்ணற்ற முனகல்களும் உள்வலிகளும் நிறைவின்மைகளும் இருக்கின்றனதான். ஆனால், இவற்றுக்கப்பால் ஸ்திரம் பெற்றிருக்கும் இந்தியா என்ற வடிவம் அதனை உயர்த்தியிருக்கிறது என்பது தவிர்க்கமுடியாத உண்மை.

இந்தியாவை பலவீனப்படுத்தும் முயற்சிகள் இன்று நேற்று தொடங்கியதுமல்ல அது எப்போதோ தொடங்கி தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் ஒரு தொடர் முயற்சித் திட்டம்.

முதலில் இந்தியாவை வலுவுடனும் உள்நிறைவோடும் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற கனவோடு இந்தியத் தலைவர்கள் முயன்றிருக்கிறார்கள். இதில் நேருவின் பாத்திரம் முக்கியமானது. அப்போது ஒரு கட்சி ஆட்சி அவசியமாயும் பொருத்தமாயும் இருந்தது. ஒரு எல்லைவரை இது தவிர்க்க முடியாதிருந்தது. மேற்குலகின் இந்தியா மீதான அணுகுமுறையைக் கவனத்திற் கொண்டு நேரு ரஷ்யாவுடன் தனது உறவை தொடங்கி வளர்த்து வைத்திருந்தார். அதேவேளை நேரிடையாக மேற்குலகை அவர் பகைத்துக்கொள்ளவும் இல்லை. (மேற்குலகம் இந்தியாவை பிற்படுத்தியே வைத்திருந்தது. ஐ.நா சபையில் கூட இந்தியாவுக்கு நிலை அந்தஸ்த்து இல்லை.)

பின்வந்த காலங்களிலும் பெரும்பாலும் இந்தக் கொள்கையே சிறு நெகிழ்ச்சிகளுடன் நடைமுறை யிலிருந்தது. அந்த நெகிழ்ச்சிகள் கூட உலகப் போக்கிற்கேற்பவே நிகழ்ந்தன அல்லது நிகழ்த்தப்பட்டன.

மேற்குலகின் முயற்சியில் முதலாவது இந்தியாவை பொருளாதார ரீதியில் ஒரு தங்குநிலை நாடாக வைத்திருப்பது. அப்படி இந்தியா இருந்தால் அதன் கூடிய சனத்தொகைக்குத் தேவையான பண்டங்களை-பொருட்களை அது இறக்குமதி செய்யவேண்டும். அபிவிருத்திக்கும் மக்கள் வாழ்வுக்கும் தேவையானவற்றை அது வெளியுலகில் கையேந்திப் பெறும் நிலை ஏற்படும். இது உள்நாட்டில் பெரும் நெருக்கடியைத் தோற்றுவிக்கும். இந்த நெருக்கடி என்பது எப்போதும் அத்தேசத்தின் ஸ்திரத்தன்மைக்கும் வளர்ச்சிக்கும் தடையாக அல்லது நோய் தாக்கியாக இருக்கும். அத்துடன் ஒரு வலுமிக்க அரசியல் கட்டமைப்போ பொருளாதாரக் கட்டமைப்போ, தேசக்கட்டமைப்போ ஏற்படாது போய்விடும்.

ஆனால், இந்தியா தன்னை முழுமையாக மாற்றி அமைத்து விட்டது- எல்லாச் சவால்களையும் எதிர்கொள்ளும் விதமாக அது இன்று விஞ்ஞானத்தில் துரித வளர்ச்சியைப் பெற்று வருகிறது. தொழில் நுட்பத்தில் அபாரமான சாதனைத் தளத்தை எட்டிக்கொண்டிருக்கிறது. இந்தியாவின் கண்டுபிடிப்புகளும் உற்பத்திகளும் அதனை எங்கும் பரப்பி மிக உயர்த்தி வலுவாக்குகின்றன. இந்த வலுவும் ஸ்திரமும் ஒரு வகையில் மேற்குலகுக்குச் சவாலே.

இன்றைய உலக அமைப்பு முறையில் சந்தையைக் கைப்பற்று வதும் தொழில்நுட்பம் மற்றும் தகவல் பரிமாற்ற வளர்ச்சியில் முன்னணியில் இருக்கும் தரப்பே உலகை ஆளத்தகுதி பெறுகின்றது. இவற்றை அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமே பெருமளவுக்கும் சாதித்து வருகின்றது. யப்பான், சீனா போன்ற நாடுகள் உற்பத்தியில் உயர்ச்சி பெற்றிருந்தாலும் இன்னும் அவை உலக வலுப்பெற்ற தரப்பாக மாறவில்லை. யப்பானை பெருமளவுக்கும் அமெரிக்க தனது கூட்டாளியாக்கி அமைதிப்படுத்தி வைத்திருக்கின்றது. சீனா ஒரு நெருக்கடி தரும் சக்தியாகவே இருக்கிறது. அடுத்தது இந்தியா.

இந்தியா நேரடியாக மேற்குலகை பகைக்க விரும்பவில்லை. அதே வேளையில் தனது பிடியை விடவும் தயாரில்லை. இன்னுமின்னும் தான் வலுப்பெறுவதிலும் ஆதிக்கம் பெறுவதிலுமே அது நோக்காயி ருக்கிறது. இந்தியாவின் உற்பத்திகளே இன்று தென்னாசியப் பிராந்திய நாடுகளில் விற்பனையாகின்றன. அதற்கமைவான பொருளாதார உறவுகளையும் ஏற்படுத்துகிறது அது பொருத்தமான பொருளியல் கொள்கையையும் அது வரைந்திருக்கிறது.

இந்த நடைமுறைப் பரவலால் யப்பான் உட்பட மேற்குலகத்துக்கு பெரும் நெருக்கடி. முன்பு மேற்குலகின் உற்பத்திகளே அதிகளவில் இப்பிராந்தியத்தில் குவிக்கப்பட்டன. பின்பு மெல்ல மெல்ல யப்பான் இதை கணிசமான அளவுக்கு தன்வசப் படுத்தியது. ஆனாலும் யப்பான் இப்பிராந்தியத்தின் அரசியல் மேலாண்மையை நிலைநாட்டும் சக்தியாக உருவெடுக்கவில்லை. இப்போது இந்திய உற்பத்தியும் இந்தியா சார்பான பொருளாதாரப் போக்குமே இப்பிராந்தியத்தில் பரவி வருகிறது. இது இந்தியா நீண்டகாலமாக முயற்சித்து வரும் இந்திய மேலாண்மைக்கு இலகுவில் வழியேற்படுத்தும்.

பொருளாதார ரீதியிலும் அரசியலாண்மை ரீதியிலும் இந்தியா வலுப்பெற்று பிராந்தியத்திலும் தன்னை ஸ்தாபிக்குமானால் பல வழிகளிலும் தென்னாசியப் பிராந்திய முக்கியத் துவத் தேவையைக் கோரும் இந்தியாவின் இந்த வளர்ச்சி அருகிலிருக்கும் சீனாவுக்கும் ஒரு சவாலே.

இதனால் அதன் வளர்ச்சி யையும் வலுவையும் உடைப்பதற்கு பாகிஸ்தானை மேற்குலகம் பயன்படுத்துகிறது. சீனாவும் பயன்படுத்த விளைகிறது. இஸ்லாமிய எழுச்சியைத் தணிப்பதற்கு பாகிஸ்தானைப் பயன்படுத்தி ஆப்கானை சிதைத்ததுபோல இந்தியாவை மட்டுப்படுத்தவும் மேற்குலகு பாகிஸ்தானைப் பயன்படுத்து கிறது.பாகிஸ்தான் தொடர்ந்து மேற்குலகின் கருவியாகவே இருந்து வருகிறது. அது அப்படி இருந்து வரும்வரையில் அயல் நாடுகள் நிம்மதியுடனிருக்கப் போவதில்லை. (பாகிஸ்தானை ஸ்திரப்படுத்தி சுயத்துவத்துடன் அதனை வளர்க்க விரும்பும் எந்த அரசியல் தலைமையையும் சக்தியையும் மேற்குலகம் விரும்பாது. இதனாலேயே அங்கே அடிக்கடி இராணுவப் புரட்சிகளும் அரசியல் மீறல்களும் சிதைவுகளும் ஏற்படுகின்றன. இல்லை, மேற்குலகால் ஏற்படுத்தப்படுகின்றன.

பாகிஸ்தானைத் தூண்டி இந்தியாவுடன் அதனைச் சீண்ட வைப்பதன் மூலம் இந்தியாவின் நிம்மதியைக் கெடுக்கலாம். இதனால் இந்தியா தனது பொருளாதாரத்தில் பெரும்பகுதியை பாதுகாப்புக்குச் செலவிட வேண்டியிருக்கும். தனது சிந்தனையிலும் பெருமளவுக்கு இந்தச் சிக்கலை எதிர்கொள்ளச் செலவிட நேரும். ஆளணி மற்றும் சகலவற்றிலும் ஒரு பகுதியை இந்த நெருக்கடியின்

**கருணாகரன்**

பால் வைத்தே தீரவேண்டும். இவையெல்லாம் இந்திய வளர்ச்சியை மட்டுப்படுத்தும் ஸ்திரத் தன்மையை தளம்பலடையச் செய்யும். இது இந்தியாவை மட்டுப்படுத்தி இப்பிராந்தியத்தின் பிடியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க மேற்குலகுக்கு உதவும். இந்தியா ஆக்கிரமித்துவரும் சந்தையிலிருந்து அதனை அகற்றவும் முடியும். அதேவேளையில் இந்தியாவுடன் நேரடியாக பகைக்க வேண்டிய அவசியத்தையும் தவிர்க்கிறது மேற்குலகம்.

இந்தியா தனது சிக்கல்களையும் தனக்குவரும் நெருக்கடியையும் வெற்றிகொள்ள வேண்டுமாயின் அது தனக்குள்ளும் வெளியிலுமான பிரச்சினைகளுக்கு நியாயபூர்வமான தீர்வை . எட்டவேண்டும். உள்ளேயிருக்கும் மாநில நெருக்கடிகளுக்கு உரிய தீர்வை முன் வைப்பதன்மூலம் வெளிச்சக்திகள் மாநிலப் பிரச்சினைகளைக் கையாள்வதைத் தவிர்க்க முடியும்.

◆

## மதவடி மயிலர்

**செய்தி:-** அமெரிக்க- சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்தம் இருதரப்பினரதும் இராணுவ உறவை மேலும் வலுப்படுத்தும்.

**மயிலர் :-** சிறிலங்காவுடன் அமெரிக்கா. சீனா. பிரிட்டன். இந்தியா. பாகிஸ்தான் எண்டெல்லா நாடுகளுமெல்லே ராணுவ பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்யினம். இதெல்லாம் பாதுகாப்புக்கான ஒப்பந்தமாத் தெரியேல்லை பாதிப்புக்கான ஒப்பந்தமாத்தான் தெரியுது பாருங்கோ... ஊர்ப் பொலிஸ்காரன் வீட்டுக்குள்ளும் உலகப்பொலிஸ்காரர் நாட்டுக்குள்ளும் நுழையிறது நல்லதுக்கில்லைப் பாருங்கோ...

**செய்தி:-** பேச்சுவார்த்தைகள் எப்போது தொடங்குமென்றோ எப்போது முடியுமென்றோ இப்போது வரையறை செய்ய முடியாது... எல்லாமே படிபடியாக பிரதமரால் முன்னடுக்கப்படும்- அமைச்சர் பீரிஸ்.

**மயிலர் :-** காலவரையறைக்குள் பேசவேண்டும் எண்டதும் அரசாங்கம்தான் இப்போ காலங்கடத்துவதும் அரசாங்கம் தான்... காலாகாலத்திலை செய்ய வேண்டியதை காலங்கடத்தி செய்யத் தவறியதன் விளைவை தானே இப்ப அனுபவிக்கினம் பாருங்கோ... காலங்கடந்த ஞானோதயங்கள் கவலைகளையே தரும்... எதையும் காலமாவதற்கு முன் செய்து முடிப்பதென்பது அது காலாவதி யாகிப் போகாமல் இருக்க உதவுமெல்லே...!

**செய்தி:-** ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த மேலும் பலர் கைது. மேலும் சிலர் தேடப்படுகின்றனர்.-செய்தி.

**மயிலர் :-** தன்னைப் பாதுகாக்க குற்றவாளிகளைத் தேர்ந்தெடுத்த ஒரேயொரு சனாதிபதி அம்மணியாத்தான் இருப்பார்... பாருங்கோ... கொலைகாரா, கொள்ளையா, சமூகவிரோதிகள், கைக்கூலிகள, பாதாள உலகத்தவர் என ஒரு வேதாள உலகத்தையே தன்னைச் சுற்றி பாதுகாப்புக்கு வைத்திருக்கும் இவர் எதைத்தான் செய்ய அஞ்சமாட்டார்... அதுசரி வீடு கொளுத்திற ராசாவுக்கு நெருப்பெடுத்துக் கொடுப்பவன் தானே மந்திரியாக வருவான்...

**செய்தி:-** 'இடைக்கால நிர்வாகம் நாடு பிரிய வழிவகுக்கும்' கதிர்காமர்.

**மயிலர் :-** கனகாலத்திற்கு பிறகு கதிர்காமத்தையா புதுக்கதை விட்டிருக்கிறார் பாருங்கோ... இடையாலை எம்.பியாகி, இடையாலை நுழைந்து அமைச்சரானவருக்கு இடையிலை புகுந்து குழப்புற வேலை புதிசில்லை. கிடைக்கிற எலும்புத் துண்டுக்கேற்ப இடைக்கிடை குலைக்கத்தானே வேண்டும்...

செய்தி:- தீவுப் பகுதியில் புலிகள் மீது கடற்படையினர்- ஈ.பி.டி.பியினர் தாக்கு...

**செய்தி:-** ஓடி ஒதுங்கிய கடைசி மூலையும் ஒண்டுவதற்கு வாய்ப்பற்றுப் போன உக்கிரம் இப்படித்தான் செய்யும்... ஆனால் கடற்படைக்கும் ஏன் இந்த கையாலாகாத்தனம்... புலிகளின் கைகள் இப்போது கட்டப் பட்டிருக்கலாம். உலகத்தின் கண்கள் கட்டப்படவில்லைப் பாருங்கோ... அது கண்காணித்துக் கொண்டு தான் இருக்குது... பாருங்கோ... தண்ணீரும் மூண்டுமுறைதான் பொறுக்கும்... கடல்லை நிக்கிறவைக்கு இது விளங்கத்தானே வேண்டும்...!



**செய்தி:-** அநுருத்த ரத்வத்தை பிணையில் விடுதலை. பிள்ளைகள் தொடர்ந்து விளக்கமறியலில்.

**மயிலர் :-** தகப்பன் எட்டடிபாய புத்திரர்கள் பதினாறடி பாய்ஞ்சிருக்கினம் போலை... பழிபாவங்களுக்கு பயப்படாதவன்... பாவிகளை பிள்ளைகளாகப் பெறுவான் எண்டொரு பழமொழி இருக்குப் பாருங்கோ... ர்த்வத்தையாரின்றை கதையிலை அது சரியாத்தான் இருக்குப் பாருங்கோ...!



# இளையநாதம்

## ஊதாரித்தனம் உண்மையைக் காட்டும்

ஓர் ஊரில் அடுத்தடுத்த வீடுகளில் இரண்டு பெண்கள் இருந்தார்கள். ஒருத்தி பெயர் பொன்னம்மா. இன்னொருத்தி பெயர் முனியம்மா.

பொன்னம்மாவிடம் இருபது மாடுகள் இருந்தன. முனியம்மாவிடம் இரண்டு மாடுகள் இருந்தன.

நிறைய மாடுகளை வைத்திருந்த பொன்னம்மா ஊதாரியாக இருந்தாள். எவ்வளவு வருவாய் வந்தாலும் அதைச் செலவு செய்து விடுவாள்.

ஆனால் முனியம்மாவோ மிகவும் சிக்கனமாக இருந்தாள். வருவாய் குறைவாக இருந்தாலும் அதிலும் ஓரளவு சேமித்து வந்தாள்.

ஒருநாள் முனியம்மாவின் வீட்டிற்குப் பொன்னம்மா வந்தாள். "எனக்கு அவசரமாக ஒரு கிலோ நெய் தேவைப்படுகிறது. கடனாகத் தா. ஒரு வாரத்தில் திருப்பித் தந்து விடுகிறேன்" என்றாள்.

ஒரு கிலோ நெய்யை அவளிடம் தந்தாள் முனியம்மா.

ஒரு மாதம் ஆயிற்று. பொன்னம்மா நெய்யைத் திருப்பித் தரவில்லை.

அவள் வீட்டிற்குச் சென்ற முனியம்மா "ஒரு வாரத்தில் தருவதாகச் சொல்லி ஒரு கிலோ நெய் கடன் வாங்கினாய். ஒரு மாதம் ஆயிற்று. இன்னும் திருப்பித் தரவில்லை. எப்பொழுது தரப் போகிறாய்?" என்று கேட்டாள்.

கோபம் கொண்ட பொன்னம்மா, "என்னிடம் இருபது மாடுகள் உள்ளன. உன்னிடம் இரண்டு மாடுகள் தான் உள்ளன. நான் ஏன் உன்னிடம் நெய் கடன் வாங்கப் போகிறேன்?" என்றாள்.

'இப்படி ஏமாந்து விட்டோமே என்ன செய்வது?' என்று நினைத்தாள் முனியம்மா. நீதிபதி மரியாதை ராமனிடம் சென்று வழக்குத் தொடுத்தாள்.

பொன்னம்மாவை நீதிமன்றத்திற்கு வரவழைத்தார் மரியாதைராமன்.

பொன்னம்மாவைப் பார்த்து அவர், "நீ இவளிடம் ஒரு கிலோ நெய் கடனாக வாங்கினாயா?" என்று கேட்டார்.

"நீதிபதி அவர்களே! என் வீட்டில் இருபது மாடுகள் உள்ளன. இவளிடம் இரண்டே மாடுகள் உள்ளன. நான் ஏன் இவளிடம் ஒரு கிலோ நெய் கடன் வாங்கப் போகிறேன். நான் வளமாக வாழ்கிறேன். என்று பொறாமை இவளுக்கு. என் மீது பழி போடுவதற்காகவே இவள் இப்படிச் சொல்கிறாள்" என்றாள் பொன்னம்மா.

'இருவரில் யார் பொய் சொல்கின்றனர்? எப்படிக் கண்டுபிடிப்பது?' என்று சிந்தித்தார் அவர். "நீங்கள் இருவரும் நாளை இங்கே வாருங்கள்" என்று அவர்களை அனுப்பி வைத்தார்.

ஏவலர்களை அழைத்த அவர் "நீதிமன்றத்திற்கு வரும் வழியில் தண்ணீர் ஊற்றிச் சேறாக்கி வையுங்கள். நாளைக் காலையில் அந்தப் பெண்கள் இருவரும் இங்கே வருவார்கள். அவர்கள் கால்களைக் கழுவுவதற்காகப் பானையில் தண்ணீரும் அருகே செம்பு ஒன்றும் வையுங்கள்" என்று கட்டளையிட்டார்.

மறுநாள், முதலில் பொன்னம்மா அங்கு வந்தாள். சேறாகி இருந்த தன் கால்களைக் கழுவத் தண்ணீர்ப் பானையின் அருகே சென்றாள். செம்பில் தண்ணீர் எடுத்துத் தன் கால்களில் ஊற்றினாள். பானையில் இருந்த நீர் தீர்ந்தது. அவள் கால்களிலிருந்த சேறு முழுமையாகப் போகவில்லை. அப்படியே நீதிமன்றத்திற்குள் நுழைந்தாள்.

சிறிது நேரத்தில் முனியம்மா அங்கு வந்தாள். அவள் கால்களைக் கழுவுவதற்காக ஏவலர்கள் பானையில் தண்ணீர் கொண்டு வந்து வைத்தார்கள்.

ஆனால் அவளோ ஒரு செம்பு நீரிலேயே கால்களை நன்றாகத் தூய்மை செய்து கொண்டாள். அந்தச் செம்பில் சிறிதளவு நீரும் இருந்தது. நீதிமன்றத்திற்குள் நுழைந்தாள் அவள்.

நடந்த எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தார் நீதிபதி மரியாதைராமன்.

பொன்னம்மாவைப் பார்த்து அவர் "பானை நிறையத் தண்ணீரைப் பயன்படுத்தியும் நீ உன் கால்களை நன்றாகக் கழுவவில்லை. இதிலிருந்து நீ ஊதாரி. எவ்வளவு வருவாய் வந்தாலும் பொறுப்பின்றி வீண் செலவு செய்பவள் என்பது தெரிகிறது.

மாறாக முனியம்மாவோ அரை செம்பு நீரிலேயே கால்களை நன்றாகத் தூய்மை செய்துள்ளாள். இதிலிருந்து அவள் சிக்கனமும் குடித்தனப் பாங்கும் உள்ளவள் என்பது தெளிவாகிறது.


உங்கள் இருவர் இயல்பையும் பார்க்கும் போது நீதான் முனியம்மாவிடம் நெய் கடனாக வாங்கியிருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது.

ஆகவே நீ முனியம்மாவிற்கு ஒரு கிலோ நெய்யைத் திருப்பித் தர வேண்டும். மோசம் செய்ய முயன்றதற்காக அவளுக்கு நூறு பணம் இழப்புத் தொகை தர வேண்டும்" என்றார்.


தான் செய்த மோசம் வெளிப்பட்டு விட்டதே என்று தலை கவிழ்ந்தபடி வெளியேறினாள் பொன்னம்மா.

நீதிபதிக்கு நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்டாள் முனியம்மா.

# கண்டுபிடியுங்கள்




இந்தப் படங்களில் இரண்டு படங்கள் ஒரே மாதிரியானவை. அவை எவை எனக் கண்டுபிடியுங்கள்.



இப்படத்தில் காணப்படும் 10 - முகங்களில் இரு முகங்கள் வேறுபட்டவை அவற்றைக் கண்டு பிடிக்கவும்.

## வட்ட நிலாவே கிட்ட வாரும்


வட்ட வட்ட நிலவே ஏனோ  
எட்ட நிற்கின்றாய் - நீ  
எட்ட எட்ட நின்று என்ன  
புதினம் பார்க்கின்றாய்.

பக்கம் வரக் கேட்கும் எம்மைப்  
பார்த்துச் சிரிக்கின்றாய் - என்ன  
வெட்கத் தாலா முகிலுக் குள்ளே  
முகத்தை மறைக்கின்றாய்.

பாட்டி உன்னைக் காட்டிக் காட்டி  
அமுதை ஊட்டுறாள் -முகத்தைக்  
காட்டிக் காட்டி நீயோ எம்மை  
மகிழ்வில் ஆழ்த்திறாய்.

பால் நிலாவே சின்னப் பாப்பா  
பக்கம் வாறீரோ - உன்னைப்  
போல் நாமும் உயர வழிகள்  
சொல்லித் தாறீரோ

**வேலணையூர் சுரேஷ்**



## பீவர்

♦ பீவர்கள் ஐரோப்பா, ஆசியா, வடஅமெரிக்கா கண்டங்களில் வாழ்கின்றன.

♦ இவை 'கொறி விலங்கு' (Rodent) வகையைச் சார்ந்தவை.

♦ மீனுக்கு இணையாக நன்றாக நீந்தக்கூடியவை.

♦ குட்டி போட்டு பால் கொடுக்கும்.

♦ பகலில் விளையாடவும் ஓய்வெடுக்கவும் செய்கின்றன.

♦ இரவில் உணவிற்காகவும் அணைகட்டவும் மரத்தை வெட்டி கடுமையாக உழைக்கின்றன.

♦ மரத்தை கடிப்பதால் பல் ஆரஞ்சு வண்ணத்தில் இருக்கும்.

♦ தாய் பீவர் ஆண்டுதோறும் குட்டிகளை ஈனுகிறது. ஒரு முறைக்கு இரண்டிலிருந்து எட்டு குட்டிகள் வரை பிறக்கின்றன.





## ரதனும் சுதனும்

விண்ணிலுள்ள நட்சத்திரங்களில் சில நீல நிறமாகவும் சில சிவப்பு நிறமாகவும் ஒளிர்வது ஏன்?

நட்சத்திரத்தின் மேற்பரப்பில் நிலவும் வெப்பநிலையானது அதன் நிறத்தை நிர்ணயிக்கிறது. சூரியனில் மேற்பரப்பு வெப்பநிலை 6000°C சூரிய ஒளியில் மஞ்சள் நிறம் அதிகம். இதைவிட அதிக மேற்பரப்பு வெப்ப நிலையிலுள்ள நட்சத்திரம் நீல நிறமாகவும் குறைந்த வெப்பநிலையிலுள்ள நட் சத்திரம் சிவப்பு நிறமாகவும் ஒளிரும்.

# எண் தமிழ்

நீலாம்பிகை

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பது சான்றோர் வாக்கு. எனினும் எழுத்தின் வளர்ச்சிப்படிகள் தொடர்பான பல்வேறு ஆய்வுகள் வெளிவந்துள்ளன. தொடர்ந்து வெளிவந்தவண்ணமுள்ளன. ஆனால் எண்ணின் வளர்ச்சி தொடர்பான கருத்துக்கள் மிக அரிதாகவே வெளியிடப்படுகின்றன.

"ஒரு மொழியில் எண்ணியல் எந்தளவிற்கு வளர்ந்திருந்தாலும் சரி, எண்களைக் குறிப்பதற்குப் பயன்படும் சொற்கள் அம்மொழியின் வரலாற்றின் ஆரம்பகட்டத்திலேயே தோன்றிய பிறகு அவை கடந்த காலத்தில் மாறாமல் அப்படியே இருந்து வந்துள்ளதாகத் தோன்றுகின்றது. எண்களுக்கு அளிக்கப்பட்ட பெயர்கள் அவை உருவானதன் அடிப்படை பற்றியும் கோடிட்டுக்காட்டுகின்றன" என பிரான்சிய நாட்டு அறிஞரான டோனி டேவி கூறுகின்றார்.

பொதுவான எண்ணலின் ஆரம்பகாலப் பண்பு கை, கால்கள், விரல்களைப் பாவித்து எண்ணுதல் ஆகும். இலக்கங்களைக் குறிக்கும். digits என்பது digitus எனும் இலத்தீன் சொல்லிருந்து பிறந்ததாகும். இச்சொல் இலத்தீன் மொழியில் விரல்களைக் குறிக்கும்.

ஒரு கை விரல்களின் எண்ணிக்கையில் ஐந்தாக எண்ணும் பண்பு, தென் அமெரிக்க அரோவக் மொழி பேசும் மக்களிடையேயும், உரோம, மாயா நாகரிக மக்களிடையேயும், இலத்தீன் மொழியிலும் காணப்பட்டுள்ளது.

இரு கைவிரல்களின் எண்ணிக்கையில் பத்துப்பத்தாக எண்ணும் பண்பு நதிக்கரை நாகரிகம் உட்பட உலகின் எல்லா நாகரிக பிரதேசங்களிலும் காணப்பட்டுள்ளது.

இரு கைவிரல்களுக்கு பத்தும் இரு கால்களுக்கு இரண்டும் எனப் பன்னிரண்டாக எண்ணும் பண்பு சில ஆபிரிக்க மக்களிடையேயும் (the Huka, the Bulanda, the Hpko) ஆங்கிலேயரிடமும் காணப் பட்டுள்ளது. ஆங்கி லேயர், 12 பொருள் ஒரு டசினாகவும், 12 டசின் ஒரு குரொசாகவும், 12 அங்குலம் ஒரு அடியாகவும், ஒரு நாளை இரு 12 மணித்தியாலங்களாகவும், 12 மாதம் ஒரு வருடமாகவும், 12 பென்ஸ் ஒரு சிலிங்காகவும் கணக்கிட்டுள்ளனர். பதின்மூன்றிலிருந்து teen எனும் பதம் இணைக்கப்பட்டுள்ளது. லச்சத் தீவுகளுடன் அமைந்த மினிக்காய் தீவிலும் 12, 12 ஆக எண்ணப்பட்டுள்ளது.

கை, கால் விரல்களின் எண்ணிக்கையில் எண்ணும் முறை பொதுவான ஐரோப்பிய மொழிகளிலும், மத்திய அமெரிக்காவிலும்,இந்திய எல்லைப்புறங்களிலிலும், அவுஸ்திரேலிய பிரதேசங்களிலும் காணப்பட்டுள்ளது. மொசொபத்தேமியாவிலும் இப்பண்பு காணப்பட்டுள்ளதாகப் பிரித்தானிய கலைக்களஞ்சியத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. வேல்ஸ் மொழியில் Ugain என்பது இருபதைக் குறிக்கும். இருபதுடன் பத்து எனும் கருத்துப்பட முப்பது deg ar ugain எனவும், இரு இருபது எனும் கருத்தில் நாற்பது deugain எனவும் அறுபது மூ இருபது எனும் பொருள்பட tri ugain எனவும் குறிப்பிடப்படும். இம்முறை பிரான்சிய, கோதிக், டனிஸ், பாஸ்க், டச்சு மொழிகளிலும்; காகாசஸ் மலைப்பிரதேச மொழிகளிலும் காணப்பட்டுள்ளது.

ஒன்பது, இந்தோ-ஐரோப்பிய மொழிகளிலும் சமஸ்கிருதத்திலும் "புதிய" எனும் பொருள் கொண்ட உரிச்சொல்லை ஒத்ததாக உள்ளது. இலத்தீன் மொழியில் "நொவெஸ்" பிரான்சு மொழியில் "நியூப்" ஜேர்மன் மொழியில் "நியூ" சமஸ்கிருத மொழியில் "நாவ்ஸ்" என்பன புதிய எனும் கருத்தைக் குறிக்கின்றன.

செமிற்றிக் மொழிகளான அக்காடிய, எபிரேய, சிரிய, அரேபிய, எதியோப்பிய மொழிகளில் ஒன்பதைக்குறிக்கும் சொல் "வாசா ஆ" எனும் வேர்ச் சொல்லிருந்து பிறந்ததாகும். இச்சொற் கருத்தும் "புதிய" என்பதாகும் என குறிப்பிடப்படுகின்றது. (யுனெஸ்கோ கூரியர், 1994 தை, பக் 11)

ஆனால் திராவிட மொழிகளில் ஒன்பது 'பழைய' எனும் கருத்தைக் கொண்டுள்ளது.ஒன்பதைக்குறிக்க ஆரம்பத்தில் பயன்பட்ட சொல் "தொண்டு" ஆகும். இது பின்வரும் அடிகளிலிருந்து புலனாகின்றது.

"தொடி திரிவன்ன தொண்டுபடு திவவின்" (மலைபடு கடாம்-21)

"இரண்டென மூன்றென நான்கென ஐந்தென ஆறென ஏழென எட்டெனத் தொண்டென"

(பரிபாடல் -3 ஆம் பாடல் 78, 79ஆம் வரிகள் இதனைத்) தொண்டுக் கிழவர் என்பதில், தொண்டு எனும் பதம் வயதில் மிகவும் முதுமையடைந்த எனும் கருத்தை வெளிப்படுத்துவதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

மேலும் பொதுவாக எல்லா இந்தோ ஐரோப்பிய மொழிகளிலும், சமஸ்கிருதத்திலும் ஒன்றுக்கள் முதலிலும், பத்து அதைத் தொடர்ந்தும் கூறப்படுகின்றது. உதாரணமாக பதினொன்று, இலத்தீன் மொழியில் Undecim எனவும், சமஸ்கிருதத்தில் ஏகாதச எனவும் வழங்கப்படுகின்றது. இப்பண்பு ஸ்பானிய, பிரான்சிய, போர்த்துக்கீசிய, டச்சு, ஜேர்மன் மொழிகளிலும் காணப்படுகின்றது. செமிற்றிக் மொழிகளிலும் இவ்வியல்பு உள்ளதை, அரேபிய மொழியில் 24 எனும் எண்ணைக் குறிப்பிட 4 (அர்பஆ) முதலிலும், 20 (இஸ்ரூன்) அதை அடுத்து வர, அர்பஆ இஸ்ரூன் எனக் குறிப்பிடுவதிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

ஆனால் திராவிட மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு ஆகிய அனைத்திலும் பத்து முதலிலும், ஒன்றுக்கள் அதைத் தொடர்ந்தும் வாசிக்கப்படுகின்றன.

எண் குறியீடுகளைக் கருத்தில் எடுத்தால் இலத்தீன், மாயா, உரோம எண்களில் 5க்கு தனிக்குறியீடுகள் உண்டு. ஆனால் பத்தின் மடங்குகளுக்கோ (10, 20, 30, .....90), பத்தின் வலுக்களுக்கோ (10, 100, 1000, .....) தனிக் குறியீடுகள் இல்லை.

சீன, அராபிய, கிரேக்க, எபிரேய, சிங்கள, சமஸ்கிருத எண்களுக்கு பத்தின் மடங்குகளுக்கு (10, 20, 30,.... 90) தனிக் குறியீடுகள் உண்டு. ஆனால் தமிழ், எகிப்திய எண்களுக்கு மாத்திரம் பத்தின் மடங்குகளுக்கு குறியீடுகள் இல்லாது, பத்தின் வலுக்களுக்கு (10, 100, 1000, .....) மாத்திரம் குறியீடுகள் உள்ளன. நவீன எண்பெறுமதி, பத்தின் வலுக்களுக்கு அமைய அதிகரிப்பதால் நவீன எண்கள் தமிழிலிருந்து அன்றேல் எகிப்திய குறியீடுகளிலிருந்து பெறப்பட்டிருக்க வேண்டும். எனினும், தமிழில் 30ஐக் குறிக்க 3x10 எனும் கருத்தில் மூன்றிற்கு உரிய குறியீடும், 10 இற்குரிய குறியீடும் எழுதப்படும். எகிப்திய முறையில் 30ஐக் குறிப்பிட பத்திற்குரிய குறியீட்டை 10+10+10 எனும் கருத்துப்பட மூன்று தடவை எழுதிக் குறிப்பிடப்படும். ஆதலால் எகிப்திய எண்ணில் இடப்பெறுமானப் பண்பு இல்லை. ஆதலால் நவீன எண்களுக்குரிய பண்புகளான

1. 1-9 வரையான ஒற்றைப்படை எண்கள்

2. 10 இன் வலுக்களுக்கு (10, 100, 1000) அமைய எண் பெறுமானம் அதிகரித்தல்

3. இடப்பெறுமான அடிப்படையில் எண்களைக் குறிப்பிடல்

ஆகிய மூன்று பண்புகளும் ஒருங்கே தமிழ் எண்களில் மாத்திரம் காணப்படுவதால் நவீன எண்கள் தமிழிலிருந்தே பிறந்திருக்க வேண்டும்.

மேலும் நூறாயிரம் எனும் பதப்பிரயோகம் 18ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் நெப்போலியன் சீர்திருத்தங்கள் அடிப்படையில் முதலில் பிரான்சிலும், பின் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் படிப்படியாகப் பரவி இன்று உலகெங்கும் பிரயோகிக்கப்படுகின்றது.

எனினும் தசமபண்பின் அடிப்படையிலான இப்பதப்பிரயோகம் சங்ககாலத்திலிருந்தே வழக்கில் இருந்துள்ளதை பின்வரும் அடிகள் எடுத்துக்காட்டுகின்றன. தமிழின் முதன் நூலாகக் கருதப்படுவது தொல்காப்பியமாகும். தொல்காப்பியத்தில்

'நூறாயிரம் முன் வரூ உங் காலை
நூறனியற்கை முதனிலைக் கிளவி'
(எழு குற் புணரியல் 66)

எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

பரிபாடலில்

"நூறாயிரங்கை ஆறறி கடவுள்"
(பரிபாடல் 3ஆம் பாடல் வரி43)

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'ஏழ் பிறப்படியேம் வாழ்க நின் கொற்றம்.......................
பன்னூராயிரத்தாண்டு வாழியர்'

என மணிமேகலையிலும்

"உறை சேரும் எண்பத்தி நான்கு
நூறாயிரமாம் யோனி பேதம்"

எனத் தேவாரத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. லட்சம் எனும் வடசொல் மணிப்பிரவாள காலத்திலேயே நூறாயிரத்தின் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

நவீன எண்கள் தொடர்பாக கிடைக்கக்கூடிய முக்கிய ஆதாரமாக செவரஸ் சீபொக் எனும் மெசொபத்தேமிய வரலாற்றாசிரியரின் குறிப்பைக் குறிப்பிடலாம்.இவர் கி.பி.662 இல் இந்தியாவில் பின்பற்றப்பட்ட 9 குறியீடுகள் தொடர்பாகவும் அவற்றின் விகிதமுறும் இயல்பு தொடர்பாகவும் மிகவுயர்வாகத் தமது கருத்தை வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக பிரித்தானிய கலைக்களஞ்சியத்தில் குறிப்பிட்டவாறு பூச்சியத்தையோ தசமப் பண்பையோ இவ் வரலாற்றாசிரியர் குறிப்பிடாததால், ஒன்பது அடிப்படை எண் குறியீடுகளைப் பயன்படுத்தியே கி.பி 7 ஆம் நூற்றாண்டில் எண்ணப்பட்டு வந்ததை உணர முடிகின்றது.

மேலும் இவ்வெண்ணல் முறையைத் திடீரென உருவாக்கியிருக்க முடியாது. இதனை நான் மற்றையோரிலும் தூரப்பார்க்கக் கூடியவனாயுள்ளேன் என்றால் அதற்குக் காரணம் நான் மாமேதைகளின் தோள்களில் ஏறிநிற்கக்கூடியவனாக இருந்ததேயாம்' என ஐசாக் நியூட்டன் கூறியுள்ள கருத்தும் உறுதி செய்கின்றது.



# குதூகலம்

உளவளத்தை அறிந்து கொள்கள்

குதூகலம் என்றால் என்ன என்று கேட்கிறீர்களா? அது தான் குதூகலம்.

குதூகலமாக இருப்பதற்கு என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்கிறீர்களா?

குதூகலமாக இருப்பதே அதற்கு ஒரே வழி.

நீங்கள் குதூகலமாக இருக்க வேண்டுமாயின் மாற்றவர்களையும் குதூகலப் படுத்துங்கள். அதாவது உங்கள் அயலவர்கள், நண்பர்கள், நண்பிகள், உறவினர் கள் யாராவது ஏதாவது ஒரு பிரச்சினையில் சிக்கித் தவிக்கும்போது அவர்கள் அதிலிருந்து விடுபட உதவி செய்யுங்கள் அதாவது அவர்களுக்கு உங்களால் முடிந்தளவு ஆறுதல் சொல்லுங்கள். ஆற்றுப்படுத்துங்கள் இதைத்தான் ஊவினம் (Ounsellin) என்றும் கூட சொல்கிறார்கள்.

இன்றைய நிலையில் எமது உறவுகள் பல்வேறு அழுத்தங்களுக்கு உள்ளாகியிருப்பது நாம் ஒன்றும் அறியாமலில்லை. அதிர்ச்சி, மனச்சோர்வு, பிரிவு, தற்கொலை, கலாச்சார சீரழிவு, திருமணம், காதல் என்றெல்லாம் உருவெடுக்கும் பல கோளை பிரச்சினைகளில் ஏதாவது ஒரு விதமாக நீங்கள் நிச்சயமாக பாதிக்கப்பட்டிருக்கலாம் இவ்வாறான சந்தர்ப்பங்களில் தான் ஆற்றுப் படுத்தல் என்பது முக்கியமாகியுள்ளது.

சொந்த முயற்சியில் தனக்கு ஏற்படும் ஒரு பிரச்சினைக்கு தீர்வு காண முடியாத நிலையிலுள்ள ஒருவருக்கு உதவி செய்ய முனைவது தான் ஆற்றுப்படுத்தல். ஆற்றுப்படுத்தலை பெறுபவர் மனப்பாதிப்புகளுக்கு உள்ளானவராக அதாவது பாதிக்கப் பட்டவராக இருப்பார். (Client)

மனப்பாதிப்புகளுக்கு மன அதிர்ச்சிக்கும் உட்பட்டவர்கள் பல பிரச்சினைகளுடன் வாழ்கின்றனர். கடினமான முடிவெடுப்பதில் பிரச்சினை, உடல் ரீதியான பிரச்சினை, கொடூரமான அனுபவங்களுக்கு பின்னால் ஏற்படும் பிரச்சினை, தீர்வு ஒன்றை காண முடியாத பிரச்சினை ஆகியன முக்கியமானவையாக அமைகின்றன.

இவ்வாறான பிரச்சினைகளில் ஏதாவது ஒன்றை சந்தித்துக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு கொஞ்ச நேரத்திற்கு தனது மூளையையும், அறிவையும் பயன்படுத்தி உதவுவது போன்றது தான் இந்த ஆற்றுப்படுத்தல்.


பாதிக்கப்பட்டவருடைய அறிவையும் ஆற்றுப்படுத்துனருடைய அறிவையும் பயன்படுத்தி ஆழமாக சிந்தித்து பிரச்சினைக்கு தீர்வு காணும் வழிமுறையை தேடிக்கொள்வது பின்பு பாதிக்கப்பட்டவர் தனது முயற்சியினாலேயே தனது பிரச்சினைக்கு தீர்வு காண உந்து சக்தியாக ஆற்றுப்படுத்துனர் செயற்பட வேண்டும்.

ஆற்றுப்படுத்துனர் என்பவர் ஒரு மருத்துவச்சியாகவே செயற்பட முடியும்.. அழுதாலும் பிள்ளை அவள் தான் பெற வேண்டும் என்பதற்கு அமைய பிரச்சினைக்குரியவரே தனது பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான கரம் அமைத்து கொடுப்பது தான் (Ounsclling) நோக்கம்.

இவ்வாறு ஒருவர் பிரச்சினைக்கு ஒருவர் ஆற்றுப்படுத்துனராக இருக்கும்போது அனைவரினது வாழ்விலும் குதூகலம் தானே

ஏன் தாமதம்! இந்த நிமிடத்திலிருந்து நீங்களும் பாதிக்கப்பட்டவராக அல்லாமல் ஆற்றுப்படுத்துன ராக இருங்களேன் வாழ்வின் நாளடைவில் ஒரு முன்னேற்றத்தை அவதானிப்பீர்கள். நன்றே செய்யுங்கள் அதை இன்றே செய்யுங்கள்.

## உங்களின் சிந்தனைக்கு



# தொடரும் தொண்டராசிரியர் நிரந்தர நியமனப் போராட்டம்

19.06.2002 அன்று வன்னியில் வாழும் கல்விச் சமூகத்தின் மற்றுமொரு சாத்வீகப் போர் வன்னியிலுள்ள கல்வி வலயங்களில் நடைபெற்றுள்ளதானது கல்வியியலில் அடிப்படை வாய்ப்பு போதாது என்பதை மீண்டும்வெளிச்சத்திற்கு கொண்டு வந்து மேலும் ஒரு அழுத்தத்தை பிரயோகித்துள்ளது.

பல வருடங்களாக இவ் சாத்வீகப் போராட்டம் தொடர்ந்து வருகின்றது. இருப்பினும் இம்முறை மிகப் பெரும் பலத்துடன் வன்னியிலுள்ள அனைத்துக் கல்வி வலயங்களிலும் ஒரே நாளில் நடாத்தப்பட்டிருப்பது ஆவேசமான போராட்டமாக காட்சியளித்தமை குறிப்பிடத்தக்க அம்சமே.

தொண்டர் ஆசிரியர்கள் மிகக் குறைந்த கொடுப்பனவுடனும் கொடுப்பனவு இல்லாமலும் நிரந்தர நியமனம் கிடைக்கும் எனும் நம்பிக்கையின் அடிப்படையில் பல ஆண்டுகளாக தங்களை அர்ப பணித்து இச்சமூகத்திற்கு அளப்பரிய அறிவூட்டல் அசாதாரண சேவையை ஆற்றி வருகின்றார்கள்.

வன்னி பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மாணவர்களின் கல்வியியல் சார்ந்த செயற்பாடுகள் பலவற்றை இன்று இத்தொண்டர் ஆசிரியர்களே நிறைவேற்றி வருகின்றார்கள் என்பதை மாகாண கல்வி அமைச்சோ அன்றி வன்னி கல்விச் சமூகமோ மறுக்க முடியாமல் ஏற்றுக்கொள்ள வேண்டிய விடயம்.

இது ஒருபுறமிருக்க தற்போது 2002 -2003ஆம் ஆண்டுக்கான ஆசிரிய பயிற்சி கலாசாலைக்கென தெரிவாகியுள்ள ஆசிரிய மாணவர்கள் பலர் வன்னியிலிருந்தும் அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு, கோப்பாய், கோப்பாய், கொட்டகலை, பலாலி ஆகிய பயிற்சி கலாசாலைகளுக்கு பரவலாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி நெறி வகுப்புகள் யூலை முதலாம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியிலிருந்து ஒரு தொகுதி ஆசிரியர்கள் பயிற்சி கலாசாலைக்கு செல்லவுள்ளதால் அவர்கள் தாங்கி வந்த பணிகள் கூட தற்போது தொண்டர் ஆசிரியர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

வன்னி கல்வி வலய பாடசாலைகளில் 1350க்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்களும் 155க்கும் மேற்பட்ட ஒப்பந்த அடிப்படையிலான பகுதி நேர ஆசிரியர்களும் கல்விச் சேவையை தளராது மேற்கொண்டு வருகின்றனர். இதற்குள் பகுதி நேர ஆசிரியர்கள் என்று சொல்லப்படுபவர்கள் கூட மாணவர்களின் தேவைகருதி முழு நேரமாகவே செயற்படுத்தப்பட்டு வருகின்றனர்.

உச்சக்கட்ட போராட்ட காலத்திற்குள்ளும் மாணவர்களின் கல்வியியற் செயற்பாடுகளை சறுக விடாது பாதுகாத்ததில் பெருமளவான பங்களிப்பை இவர்களே நிறைவேற்றி சவாலான வெற்றியை நிலைநாட்டியுள்ளனர். இச்சேவைக்கு பெற்றோர்களும், வன்னி கல்வி சமூகத்தினரும் கடமைப்பட்டவர்கள் என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

இருந்தும் இவர்களது நிரந்தர நியமனம் தொடர்பான சாத்வீகப் போராட்டம் மட்டும் தொடர்ச்சியான தோல்வியை சந்தித்து வருவதானது வருத்தத்திற்குரியதும் அனுதாபத்திற்குரியதுமாகும்.

"வடகிழக்கில் மூவாயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான பூர்வாங்க பணிகளை ஆக்கபூர்வமாக மேற்கொண்டுள்ளோம் மாகாண கல்வி அமைச்சின் அசமந்த போக்கே நியமனம் வழங்காமைக்கு காரணம்" என சில மாதங்களுக்கு முன்பு வன்னிக்குள் வந்திருந்த இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க

***தொண்டர் ஆசிரியர்களின் சேவையால் இந்த மண்ணின் கல்வி வளர்ச்சியில் கடமைப்பட்டுள்ள வன்னி கல்வி சமூகம் இவர்களுக்கான நிரந்தர நியமன விடயத்தில் தட்டிக்கழிக்க முடியாத ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கு உந்துதலாக செயற்பட வேண்டும் என்பது கட்டாய தேவை.***

பொதுச் செயலாளர் தி.மகாசிவம் எமக்கு தெரிவித்திருந்தார்.

திறப்பிற்கு பின்பு பல சொகுசு வாகனங்களில் வன்னி கல்வி வலயங்களுக்கு விஜயம் செய்த மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளின் முந்நிலையிலும் கூட இத் தொண்டர் ஆசிரியர்கள் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை நேரடியாக கையளித்திருந்தனர்.

வன்னியில் தொண்டர் ஆசிரியர்களின் பங்களிப்பு, பின்தங்கிய கல்விச் செயற்பாடுகள் போன்ற பல்வேறு அம்சங்களை இவர்கள் நேரில் பார்த்த பின்பும் கூட தொண்டர் ஆசிரியர்களின் எதிர்பார்ப்பு வெற்றியளிக்காதது தான் வேதனைக்குரிய விடயம்.

32500க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 1400 வரையான ஆசிரியர்கள் தேவையாக உள்ளனர். தற்போது தொண்டர் ஆசிரியர்கள் உட்பட 950 வரையான ஆசிரியர்களே கடமையில் உள்ளனர். இங்குள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டாலும் கூட 450க்கும் மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறை தொடர்ந்தே இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

துணுக்காய் கல்வி வலயத்தில் 158 தொண்டர் ஆசிரியர்களும் 42 ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்கள் உட்பட 200 ஆசிரியர்கள் நிரந்தர நியமனத்தை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர். இவ்வலயத்தில் 14,432 மாணவர்கள் மாந்தைகிழக்கு, ஒட்டுசுட்டான், துணுக்காய் ஆகிய கோட்ட பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர்.

முல்லை வலயத்தின் தொண்டர் ஆசிரியர்கள் மடு, வவுனியாவடக்கு வலயங்களின தொண்டர் ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து வலயத்தினரும் மனுக்களைக் கையளித்துள்ளனர்.

பட்டியலில் உள்ள அனைத்து தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குமாறும், பட்டியலில் தவறிய மாகாண கல்வி அமைச்சினால் நேர்முகத்தேர்வு நடாத்தப்பட்டோரையும் இப்பட்டியலில் இணைத்து நியமனம் வழங்குமாறும், 1998-11-24ம் நாளுக்கு பின்னர் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குமாறும் கோரி இம்மனுக்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

கற்றல் வளங்கள் என்ற வகையில் வன்னியின் சில பாடசாலைகளுக்கு கணனி வசதிகளை வழங்கியிருப்பினும் கற்பித்தல் வளமான ஆசிரிய பற்றாக்குறை இடைவெளி நிரப்பப்படாதுவிடின் கல்வியியற் செயற்பாடுகளின் பெறுபேறு பூச்சியமாகவே அமையும்.

இது இவ்வாறிருக்க வன்னி கல்வி வலயங்களின் மெல்லக்கற்கும் மாணவர்களை இனங்கண்டு பாடசாலை தவிர்ந்த ஏனைய நேரங்களில் விசேட வகுப்புகளை நடாத்தும் செயற்திட்டம் ஒன்றினையும் மாகாண கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளதாம்.

இதற்கான வன்னி கல்வி வலயங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், போர் சூழலில் பின்தங்கி மன நிலை பாதிக்கப்பட்டு கல்வியியலிலும் பாதிக்கப்பட்ட மாணவர் களை கைதூக்கி விடுவதாகவும் உளரீதியான ஊக்குவிப்புக்களையும், தூண்டுதலையும் வழங்கவே இச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னி பாடசாலைகளில் உரிய பாடவேளைகளிலேயே மாணவர்களுக்கு கற்பிப்பதற்கு போதிய ஆசிரிய வளம் இல்லாத நிலையில் பாடசாலை தவிர்ந்த நேரங்களில் இம்மாணவர்களுக்கு கற்பிப்பது யார்? மெல்லக் கற்கும்மாணவர்கள் உருவாவதற்கு காரணமே ஆசிரிய வளப்பற்றாக் குறை தான் என்ற உண்மையை சம்பந்தப்பட்ட அனைவரும் ஏற்றுக் கொண்டேயாகவேண்டும்.

எனவே மெல்லக்கற்கும் மாணவர்களின் செயற்திட்டத்திற்கு முன் ஆசிரிய நியமன செயற்திட்டத்தை நிறைவேற்ற மாகான கல்வி அமைச்சு துரிதமாக செயற்பட வேண்டும் என்பது கல்வியியலாளர்களின் கருத்தாக உள்ளது.

தொண்டர் ஆசிரியர்களின் சேவையால் இந்த மண்ணின் கல்வி வளர்ச்சியில் கடமைப்பட்டுள்ள வன்னி கல்வி சமூகம் இவர்களுக்கான நிரந்தர நியமன விடயத்தில் தட்டிக்கழிக்க முடியாத ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்கு உந்துதலாக செயற்பட வேண்டும் என்பது கட்டாய தேவை.

எனவே நிரந்தர நியமனத்தை கனவுகளில் சுமந்து வாழ்நாளில் பெரும்பகுதியை கல்விச் சேவைக்காகவே வரவின்றி அர்பணித்த இவர்களுக்கு நிரந்தர நியமனம் தான் கிடைக்காது விடினும் காலத்தை வீணடிக்க அனுமதித்த குற்றத்திற்காவது தகுதியான அரச சேவைகளில் அமர்த்தும் செய்ய வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் இந்த கல்வி சமூகத்திற்கே உரித்தானது என்பதை மறந்துவிட முடியாது.

**எஸ்.வி.ஆர். கஜன்**

# தங்க காலணி யாருக்கு?

2002 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கால்பந்து போட்டி 17 ஆவது தடவையாக ஐரோப்பிய ஆபிரிக்க கண்டங்களை தாண்டி முதல் தடவையாக ஆசியாவில் மையங்கொண்டு உலகத்தின் கவனத்தை தன்பால் ஈர்த்த உலக உதைபந்தாட்ட போட்டிகள் தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்து விட்டது. இறுதிப் போட்டியில் நாளை மறுதினம் ஜேர்மனி அணியை எதிர்த்து பிரேசில் அணி மோதுகின்றது.

இந்நிலையில் நடந்து முடிந்த அரையிறுதி போட்டிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தமையால் அவற்றை நோக்குவது சிறப்பாக இருக்கும். அதாவது முதல் தடவையாக இரு அணிகள் (துருக்கி - தென்கொரியா) அரையிறுதிக்கு முன்னேறியமை.

ஏனெனில் உலகக் கிண்ணத்தை இம்முறை தாங்களே சுவீகரிப்போம் என்று ஆசியாவை ஆக்கிரமித்த அணிகளின் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் தவிடுபொடியாகி அணிகளும் ரசிகர்கள் கூட்டமும் வெறுங்கையுடன் நாடு திரும்பிக்கொண்டிருக்கும் நிலையில் முன்னர் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிய இரு அணிகள் எஞ்சிப்போக உதைபந்தாட்ட வரலாற்றில் முதல் தடவையாக ஆசிய நாடு ஒன்று மூன்றாம் அல்லது நான்காவது இடத்தை தனதாக்கிக்கொள்ளும் பாக்கியத்தை அடைந்துள்ளது.

தென்கொரியா தான் சந்தித்த ஒவ்வொரு போட்டியிலும் அதிரடியான மாற்றங்களை ஏற்படுத்தி அரையிறுதி வரை முன்னேறி, தமது நாட்டு மக்களுக்கும் ரசிகர்களுக்கும் இம்முறை தாங்களே கிண்ணத்தை கைப்பற்றுவோம் என்ற கனவை ஏற்படுத்திய போதிலும் அரையிறுதி ஆட்டத்தின் இறுதிக் கட்டத்தில் ஜேர்மனியின் மத்திய கள வீரர் மைக்கல் பெல்லே அடித்த கோலால் தென்கொரியாவின் கனவு முடிவுக்கு வந்ததுடன் ஜேர்மனி ஏழாவது தடவையாக இறுதியாட்டத்துக்கான வாய்ப்பைப் பெற்றுக்கொண்டது.

இத் தோல்வியை அந்த நாடு தாங்கிக்கொள்ள முடியாத போதிலும் இதுவரை ஐந்து



மிரோசவ்



ரிவால்டோ



ரொனால்டோ

தடவைகள் உலகக்கிண்ண இறுதிச் சுற்றில் கலந்து கொண்டுள்ள தென்கொரிய இதையிட்டு பெருமிதம் கொள்வதாக விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏனெனில் இவ் அணி ஐரோப்பாவின் பலம் பொருந்திய அணிகளான இத்தாலி, போத்துக்கல், ஸ்பெயின் போன்றவற்றை உதைத்து தள்ளியமை உதைபந்தாட்ட ரசிகர்களின் எதிர்பார்ப்புகளை முறியடித்ததுடன் கால்பந்தில் ஆசியாவின் தரத்தை மேலும் உயர்த்தியுள்ளதுடன் இனிவரும் காலங்களில் உலகக்கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் ஆசியாவில் இருந்து அதிக அணிகள் கலந்து கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுத்துள்ளது.

மற்றைய அணியான துருக்கி உலகக்கிண்ண இறுதிச் சுற்றுக்கு இரண்டாவது தடவையாக கலந்துகொண்டு (முதல் தடவை 1954 இல) போட்டியை நடாத்தும் ஜப்பானை தோற்கடித்து கால் இறுதிக்குள் பிரவேசித்ததுடன் முதல் தடவையாக உலகக்கிண்ண இறுதிச்சுற்றுக்கு பிரவேசித்து அதிரடியாக முன்னேறி ஒரு கட்டத்தில் உலக கிண்ணத்தை கைப்பற்றினால் கூட ஆச்சரியப் படுவதிற்கில்லை எனப் பேசப்பட்ட செனகல் அணியை தங்கக்கோல் போட்டு தோற்கடித்ததன் மூலம் பிரேசில் அணியுடன் மீண்டும் போட்டியிட வேண்டிய நிலை துருக்கிக்கு ஏற்பட்டது. அது அரையிறுதிப் போட்டியாக அமைந்தது.

முன்னர் விட்ட தவறை சீர்செய்து கடுமையாக போட்டியிடும் என எதிர்பார்க்கப்பட்ட துருக்கி அணி ரசிகர்களின் எதிர்பார்ப்பை திருப்திப்படுத்துமாப்போல் ஆடியபோதும் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை போட்டியின் 49ஆவது நிமிடத்தில் ரொனால்டோ பெற்றுக்கொடுத்த கோலின் மூலம்



*தடைசெய்யப்பட்ட வீரருடன் பெல்லே -குளோஸ்*

இழந்துபோனது. இதன் மூலம் பிரேசில் கடினமான வெற்றி ஒன்றை பெற்று ஏழாவது தடவையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதன் மூலம் இறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளும் இரு அணிகளும் ஏழு தடவைகள் இறுதியாட்டத்துக்கான வாய்ப்பை பெற்றுக் கொண்டது சிறப்பம்சமாகும்.

இது ஒருபுறம் இருக்க இதுவரை ஜேர்மனி அணி மாத்திரமே தொடர்ச்சியாக மூன்று தடவைகள் (1982, 1986, 1990) உலகக்கிண்ண இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய அணி என்ற சாதனை இப்போட்டி மூலம் பிரேசில் அணியால் சமன் செய்யப்பட்டது.1994, 1998 ஆம் ஆண்டில் இறுதிப்போட்டிக்கு பிரேசில் அணி தெரிவாகியிருந்தது.

பிரேசில் இதுவரை எட்டு அரையிறுதி ஆட்டங்களில் ஆடி ஏழு முறை இறுதியாட்டத்துக்கு தெரிவாகி நான்கு முறை கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. ஜேர்மனி ஏழு தடவைகள் இறுதிப்போட்டிக்கு தெரிவாகி மூன்று தடவைகள் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது. எனவே இம்முறை கிண்ணத்தை கைப்பற்றும் பட்சத்தில் பிரேசிலின் நான்கு கிண்ணம் பெற்ற சாதனை சமன் செய்யப்படும்.

இது இவ்வாறிருக்க அதிக கோல் போட்டவருக்கான தங்க பாதணியை பிரேசில் அணியின் முன்னணி வீரர் ரொனால்டோ தக்கவைத்துள்ள நிலையில் மேலும் இரு வீரர்கள் தலா ஐந்து கோல்களை போட்டுள்ளனர். இவர்கள் இறுதிப் போட்டியில் மேலும் கோல்கள் போடும் பட்சத்தில் இரண்டுக்கு மேற்பட்ட வீரர் சம எண்ணிக்கையான கோல்களை அடித்தால் அவர்களின் வேறு பங்களிப்பு கருத்தில் கொள்ளப்படும் என பீபா அறிவித்துள்ளது. இதனால் தங்க பாதணியை பெறப் போகிறவர் யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது. இது தவிர மேலும் இம்முறை புதிதாக நான்கு விருதுகளை பீபா அறிவித்துள்ளது. அதில் ஒன்று சுற்றுப்போட்டியின் சிறந்த வீரருக்கு தங்க பந்து வழங்கப்படவுள்ளது. இவ் விருதுக்குரியவரை சுற்றுப் போட்டியை பார்வையிடச் சென்ற ஊடகவியலாளர்களே தெரிவு செய்யவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

ஒட்டு மொத்தத்தில் நடைபெற இருக்கும் இறுதிப் போட்டி சாதனைகளுடன் கூடியதாகவே அமையப்போகின்றது.

எது எவ்வாறிருப்பினும் பிரேசில் அணிக்கே அதிக வெற்றி வாய்ப்பு இருப்பதாக கணிக்கப்படுகின்றது ஏனனில் பிரேசில் அணியின் அனைத்து வீரர்களும் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு இருப்பதாகவும் ஜேர்மனி அணியில் மத்தியகள வீரரான மைக்கல் பல்லே இறுதியாட்டத்தில் விளையாடுவதற்கு தடை விதிக்கப் பட்டுள்ளது. இது ஜேர்மனிக்கு பாரிய பின்னடைவாகவே அமையப் போகின்றது.எனவே கருத்துக் கணிப்புகளும் ஆருடங்களும் வெற்றியை தீர்மானிக்கப் போவதில்லை. பலத்துடன் கூடிய அதிஷ்டம் யார் பக்கம் என்று பொறுத்திருந்து பார்ப் போம்.

**ஜெயந்திரன்**

# நினைவலைகள்

## 1ம் ஆண்டு நினைவில்...




மலர்வு 17•07•1940 உதிர்வு 26•06•2001

அமரர்

**திருமதி. வேலாயுதபிள்ளை பராசக்தி**

செப்புகின்ற வீரஅண்ணன்
புலிப்படையின் தலைவன்
சிறப்பாக படை நகர்த்த
ஈந்தனளோ மகவை.
அன்பிற்கு இருப்பிடமாம்
எங்கள் அம்மா சக்தி
அகிலாண்ட நாயகியே
எண்ணுகின்றோம் தாயே.

## 7ம் ஆண்டு நினைவில்...



தாயின் மடியில்21-06-1970 தாயகமண்ணில் 28-06-1995

சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி சிறப்புத்தளபதி

**லெப்.கேணல் கில்மன்/காந்தன்**

(வேலாயுதபிள்ளை-சிவகுமார்)

எம் தலைநகரின் வாசலில்
எமது கொடி அசைந்திடும்
என்ற உறுதியோடு
எம் தலைவரின் அணியில்
வித்தான உன் உடலால்
வியாபிக்கும் எம் தமிழீழம்
மலருமடா உன் கனவு
மறந்திடோம் உனது பணி.

கில்மனுடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம். 28-06-2002 நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**உங்கள் நினைவுடன்,**

கணவன், பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், மருமக்கள்.

கண்டாவளை

தந்தை, சகோதரர்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
மருமக்கள்.
சில்வா றோட்,
வட்டக்கச்சி.

(சி.6932)


## பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,

### தென்னை நாற்றுக்கள் விற்பனைக்கு

முறைப்படி தெரிவு செய்யப்பட்டு, நாற்றிடப்பட்ட நல்லின தென்னம் நாற்றுக்கள் விற்பனைக்கு எம்மிடம் உண்டு. ஒன்று-35/=

"50 நாற்றுக்களுக்கு மேல் பெறுபவர்களுக்கு ஒன்று 33/= வீதம் ரொக்கத்திற்கு வழங்கப்படும்"

நிறுவனங்களுக்கு விசேட சலுகை உண்டு.

நாற்றுக்களைப் பெற விரும்புவோர் முன்கூட்டியே வேலை நாட்களில் எமது காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்.
பூநகரி ப.நோ.கூ.சங்கம்
ஜெயபுரம்.

(சி 6936)



## வரிவிளம்பரம்

### உடன் வரவும்

பாடகர்- P.S. செல்வம், உயிலங்குளம், மன்னார். 01-07-2002 கூட்டுறவு இசை நிகழ்ச்சி ஆரம்பிக்க உடன் வரவும். நிகழ்ச்சி நாள்: 15-07-2002 தகவல். S.யேசுதாசன், கமநல கேந்திர நிலையம், ஆட்காட்டிவெளி, மன்னார். (1990)

### உடன் வரவும்

ஓகன் மாஸ்ரர்- K. சிவலிங்கேஸ்வரன், ஓடக்கரை, பருத்தித்துறை. 01-07-2002 கூட்டுறவு இசை நிகழ்ச்சி ஆரம்பிக்க உடன் வரவும். நிகழ்ச்சி: 15-07-2002 அன்று. தகவல். ச.ஞானசீலன், சொர்ணபுரி, அடம்பன்.

(1989)

### தேவை

திரு முருகண்டி பிள்ளையார் ஆலய சுற்றாடலை சுத்திகரிப்பதற்கான தொழிலாளி தேவைப்படுகின்றார். விரும்பியவர்கள் 02-07-2002 திகதிக்கு முன்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடுவப்பணியகம் கிளிநொச்சி என்ற முகவரியுடன் நேரில் தொடர்பு கொள்ளவும். (1993)



## வன்னி பெருநிலப்பரப்பில் ஓவ்செற் முறை மூலம்

நிறைவாக,விரைவாக,
மிகக் குறைந்த விலையில்,
உங்கள் மனதிற்குப் பிடித்த
வகையில் உங்கள்
வேலைகளை அச்சிட்டுக்
கொள்வதற்கு நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

## அழகன் பதிப்பகம்

யாழ்.சாலை, கிளிநொச்சி.

# நறுக்கென....

● தூரன்.

## [01] மரண அழைப்பு

தென்பகுதியில் இராணுவத்திற்கு பெருமளவில் ஆட்சேர்ப்பதற்கான சகல விதமான அணுகுமுறைகளும், பிரசாரங்களும், படுமோசமான தோல்விகளை கண்டுள்ள நிலையில் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் முஸ்லீம் இளைஞர்களை சேர்ப்பதற்கான தீவிரமான பிரச்சார நடவடிக்கைகளில் படைதரப்பு இறங்கியுள்ளது.

தென்பகுதியில் முதற்கட்டமாக 5000 பேரை இராணுவத்தில் இணைக்க மேற்கொண்ட முயற்சிக்கு 500 பேருக்கு மேல் சேரவில்லை என்பது ஒருபுறமிருக்க, சேர்ந்தவர்களுள்ளும் பயிற்சி முடிவில் வடபகுதியில் கடமையாற்ற அனுப்பப்படுவார்கள் என்ற அச்சம் காரணமாக பலர் பயிற்சிக்கு செல்லாது தலைமறைவாகி விட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை சமாதானச் சூழலில் படைக்கு ஆட்திரட்டுவதில் தீவிரம் காட்டுவது தென்பகுதி மக்களிடையே அமைதி தொடர்பான அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

எத்தனையோ வேலைகளுக்கான நியமனங்களில் எல்லா தமிழ் இளைஞர்களின் விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பட்டு வரும்போது, இராணுவத்தில் இணையுமாறு கவர்ச்சிப் பிரசாரங்கள் மேற்கொள்வது தமிழ் இளைஞர்களை தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் மற்றொரு திட்டமிட்ட நடவடிக்கையாகவே கருதவேண்டியுள்ளது.

அரசுடன் ஒட்டி உறவாடும் கைக்கூலி தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களே இணைய மறுக்கும் இராணுவத்தில் சேரமுயலும் நபரை ''பாவம்'' என்று பரிதாபப்பட்டு பார்ப்பதைவிட வேறு என்ன செய்யலாம்?

## [02]உடன்பாடுகள் தெரிவிக்கும் எச்சரிக்கைகள்

சிறிலங்கா – அமெரிக்கா இரு நாடுகளும் செய்யப்போகும் ஒப்பந்தம் குறித்த பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன.

அரசின் சார்பில் பல விளக்கங்களும், அமெரிக்கா சார்பில் சில விளக்கங்களும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்டுமுள்ளன. ஜூலையில் கைச்சாத்திடப்படலாம் என்று கூறப்படும் இந்த ஒப்பந்தத்தின் உள்நோக்கங்கள் எதுவாக இருந்தாலும் அதில் இராணுவ பாதுகாப்பு விடயங்கள் முக்கியத்துவம் கொண்டவையாக இருக்கப்போகிறது என்பதில் எந்த ஐயுறவும் கிடையாது.

சிறிலங்காவின் வான்பரப்பினை அமெரிக்க போர் விமானங்கள் பயன்படுத்தவும், துறைமுகங்களை அமெரிக்க கடற்படை போர்க்கப்பல்கள் பயன்படுத்தவும் அனுமதி வழங்கியுள்ள சிறிலங்கா அரசு அதற்கு மாற்றீடாக இன்னும் விளக்கமாகக் கூறுவதானால், இவற்றை அமெரிக்கா பயன்படுத்துவதற்கான வாடகைப் பணமாக செலுத்த வேண்டிய தொகைக்கு சிறிலங்காவின் இராணுவத்தையும் கடற்படையையும் வலுப்படுத்துவதற்கான ஆயுதங்களையும், உபகரணங்களையுமே வழங்கும் என்று கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சிறிலங்காவின் கிழக்குக் கடற்பரப்பு மீதான கண்காணிப்பு நடவடிக்கைகளை மேம்படுத்த இரு நவீன வசதிகள் கொண்ட கலம் கண்காணிப்பு விமானங்களையும், அதி நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட ரோந்துப் படகு ஒன்றையும் அமெரிக்கா ஏற்கனவே வழங்கியுள்ளதாகவும் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனாலும் இது தொடர்பாக கொழும்போ – வாஷிங்டனோ எவ்விதமான தகவலையும் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## [03] அறிவுரையும், அர்த்தவுரையும்

அண்மையில் கடற்படையினர் மத்தியில் உரையாற்றிய சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, சிறிலங்கா கடற்படையானது சமாதான முயற்சிகளின் முக்கியத்துவம், சிறிலங்கா பிரஜைகளின் பொருளாதார வளர்ச்சி, வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதில் அரசியலில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளை மனதிற்கொண்டு செயற்பட வேண்டுமென கூறியுள்ளார்.

நல்ல விஷயம் தான்

இதேவேளை, அங்கு கடற்படைத் தளபதி கூறுகையில் ''சிறிலங்காவில் என்றும் நிலைத்திருக்கக்கூடிய சமாதானத்தை கொண்டுவரும் அரசின் நோக்கத்தை எட்டுவதற்கு கடற்படை ஆளணியினர் கட்டுப்பாட்டுடனும் பொறுப்புணர்வுடனும், புத்தி சாதுரியத்துடனும் செயற்பட வேண்டும்'' என்று பேசியுள்ளார்.

மிக மிக பொருத்தமான நல்ல விடயம் தான். ஆனால் இவற்றை எந்த அளவுக்கு புரிந்து கொள்ளும் அல்லது ஏற்றுக்கொள்ளும் மனோநிலையில் கடற்படையினர் உள்ளார்கள் என்பது தான் இப்போது எழுந்துள்ள சந்தேகமாகும்.

அமைச்சரினதும், தளபதியினுடையதும் இந்த பேச்சுக்களின் பின்னர் தான் தீவகத் தாக்குதல் சம்பவம் உட்பட வேறுபல புரிந்துணர்வு ஒப்பந்த மீறல் சம்பவங்களும் நடந்துள்ளன.

நாங்கள் சும்மா ஒரு பேச்சுக்கு சொல்லிறோம் நீங்க்ள் உங்கள் பாட்டுக்கு நடவுங்கள் என்று தான் அவர்களின் அறிவுறுத்தல்களின் மறைமுக அர்த்தம் இருந்திருக்குமோ...? யாரறிவார்?

**கடற்படையினரின் ...**

பண்ணை முதல் அல்லைப்பிட்டி சந்தி வரை வீதியின் இரு மருங்கிலும் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா படையினரின் வேலிகளுக்கும் அரண்களுக்கும் நடுவே ஒடுங்கிய பாதை வழியாக கண்டனப் பேரணி ஊர்காவற்துறை நோக்கி நகர்ந்தது.

சிறிலங்கா படையினர் பல இடங்களிலும் நின்று வீடியோ படங்களை எடுத்து அச்சுறுத்திய போதிலும் மக்கள் துணிகரமாக தமது கண்டனக் குரலை எழுப்பினர்.

பதினெட்டு கிலோ மீற்றர் தூரத்திலிருக்கும் ஊர்காவற்துறையை நோக்கிய இந்த நீண்ட பேரணி நகர்ந்த வேளையில் தீவகத்துச்சாலையில் அமைந்துள்ள சிறிலங்காப் படை அரண்களில் படையினர் பெருமளவு நிறுத்தப்பட்டிருந்தனர்.

சகல வகையான வாகனங்களும் இந்த பேரணியில் கலந்து கொண்டன.

யாழ் மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் ஒழுங்கமைத்திருந்த இந்த பேரணியில் கலந்து கொண்ட வாகனங்களின் முன்னணியில் இராணுவச் சப்பாத்தை தாங்கிய ஊர்தி நகர்ந்து கொண்டிருந்தது. தீவகத்தை விட்டு ஈ.பி.டி.பியே வெளியேறு, கடற்படையே வெளியேறு என்று மக்கள் கண்டனக் குரல்களை எழுப்பினர்.

யாழ்ப்பாண பாடசாலைகளின் மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரச/ அரசசார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்கள், வெகுசன அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிற் சங்கங்கள், கூட்டுறவு மற்றும் அமைப்புக்களின் உறுப்பினர்கள் என பல்லாயிரக்கணக்கானோர் சிறிலங்கா கடற்படையினரதும் ஈ.பி.டி.பி தேச விரோதிகளினதும் சமாதானத்திற்கு எதிரான செயற்பாடுகளை கண்டித்தும் இந்த கண்டனப் பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரணி ஊர்காவற்துறையை சென்றடைந்ததும் அங்கு பிரதேச சபை மைதானத்தில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. ஊர்காவற்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் தலைமையில் நடைபெற்ற கண்டன கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் பரணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தென்மராட்சி மனித நேய அமைப்புகளள் சார்பாக சாவகச்சேரி றிபேக் கல்லூரி அதிபர் அருந்தவராசா யாழ் மாவட்ட வெகுசன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் சொலமன் சூ..சிறில், யாழ் பல்கலைக்கழக மாணவி ஜெயா, தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதன் ஆகியோர் கண்டன உரைகளை நிகழ்த்தினர்.

இதனையடுத்து கண்டன பேரணியில் எடுத்துவரப்பட்ட பெரிய அளவிலான இராணுவச் சப்பாத்து எரியூட்டப்பட்டது. சிறிலங்கா படை ஆக்கிரமிப்பின் சின்னமான இராணுவச் சப்பாத்து எரியூட்டப்பட்டபோது மக்கள் அதனை சூழ நின்று கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

**வெவ்வேறு...**

தர்மபுரம், கிளிநொச்சி) முல்லைக்கடற்பரப்பில் கடந்த 21-10-2001 அன்று சிறிலங்கா கடற்படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

கடற்புலி 2ம் லெப்.புகழினியன் (சிவசுப்பிரமணியம் பரஞ்சோதி ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு) த.முகவரி நேசன் குடியிருப்பு முன்பாக 1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

யாழ் பருத்தித்துறை கடற்பரப்பில் 1990ம் ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்பட்ட படகு விபத்தின்போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

2ம் லெப். அறிவு யாழ்ப்பாணம் த.முகவரி அன்பு குடியிருப்பு அம்பலவன் பொக்கணை,மாத்தளன்.

ஆகியோரே வீரச்சாவடைந்த போராளிகளாவர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

மேற்படி போராளிகளில் கடற்புலி லெப். தமிழினியனின் பெற்றோர் அல்லது உரித்துடையோர் அருகிலுள்ள மாவீரர் பணிமனையிலோ அல்லது அரசியல்துறை செயலகத்திலேயோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**இலவச**

யசாலையிலும் மேற்படி கண்சிகிச்சை முகாம் இடம்பெறவுள்ளதெனவும் முக்கியமாக மாணவர்கள் பாடசாலை அதிபர்களின் சிபார்சு கடிதத்துடன் கண்சிகிச்சை முகாமிற்கு வருகைதர வேண்டுமென த.பு.கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இச்சிகிச்சை முகாமில் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக கண் பரிசோதனை இடம் பெற்றதுடன் அவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள் காலக்கிரமத்தில் அந்தந்த பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப் பெற்று பாடசாலை அதிபர்கள் மூலம் மாணவர்களுக்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மாணவர் அல்லாதோருக்கு கண் பரிசோதனை இலவசமாக நடைபெற்று மூக்குக் கண்ணாடிச் சட்டங்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் வழங்க ஏற்பாடாகியுள்ளதென த.பு.கழகத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ)

## பிரேசில் வீரர்கள்



பதினேழாவது உலகக் கிண்ண உதைப் பந்தாட்டப் போட்டிக்கான பயிற்சிகளில் ஈடு பட்டிருக்கும் பிரேசில் அணியின் முன்னணி வீரர்களான ரொனால்டோவும் எடில்சனும்.

## சனாதிபதியின் சந்திப்பு




அமெரிக்க ஜனாதிபதி 'ஜோர்ச் புஸ்'சும் ருஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினும் மொஸ்கோவில் சந்தித்த போது கை குலுக்கிக் கொள்கின்றனர். அவர்களுக்கிடையே அவர்களின் மனைவிமார் முத்தமிட்டு அன்பை பரிமாறிக் கொள்கின்றனர்.

## குறிபார்க்கும் துப்பாக்கி



பாலஸ்தீனிய பொலிஸ் நிலையம் ஒன்றை சினைப்பர் (Sniper) துப்பாக்கியால் குறிபார்த்து நிற்கும் இஸ்ரேலிய படைவீரர் ஒருவர்.

## இஸ்ரேலியத் தாக்குதலில்...



இஸ்ரேலிய தாக்குதலில் சேதமுற்ற தனது படுக்கையறையை பார்வையிடும் பாலஸ்தீனிய அதிபர் யசீர் அரபாத்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002 ஆம் ஆண்டு யூன் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.